பாண்டியன் இன்ஷ்யூரன்ஸ்

கம்பெனி லிமிடெட்

(இந்தியாவில் ஸ்தாபிதம் 1933)

தலைமை ஆபீஸ்: மதுரை

சிறந்த சேவை செய்து வருகிறது.

நெருப்பு, மோட்டார் விபத்து

முதலிய

சகலவித இன்ஷ்யூரன்ஸ் திட்டங்கள்

மொத்த ஆஸ்திகள் ரூ. 59,80,000

கிளைகள்: பம்பாய், அகமதாபாத், கல்கத்தா, ராவல்பிண்டி.

பிரதம ஏஜெண்டுகள்:

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

மதுரை Etc.



பிரசினை: நான்கு தீக்குச்சிகளைக் கொண்டு, இரண்டு சதுரங்களை நான்கு சதுரங்களாக மாற்றவும்.

விடை:

அதிகப்படியான நான்கு தீக்குச்சிகளைப் படத்தில் காட்டியுள்ளபடி அமைக்கவும்.



டி நான்கு தீக்குச்சிகளை விவேகத்துடன் அமைப்பதனுல், அவை எட்டுக் குச்சிகளின் வேலையைச் செய்யும்படிப் பண்ணலாம். அதுபோலவே, உம்மு

டைய சேமிப்பைக் கொண்டு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிவதனால், நீர் உம்முடைய குடும்பத்தின் வரவு செலவுத் திட்டத்தில் அதிகபட்ச பலனைப் பெறக்கூடும். நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை வாங்கவும்—இவை சிறு சேமிப்புக்காரர்கள் பணத்தை வட்டிக்குப் போட்டு வைப்பதற்காகவென்றே ஏற்படுத்தப்பட்ட சாதனமாகும்.

நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகள்.

இவை முக்கியமான அனுகூலங்களாகும்:—

1. நீர் நாஷனல் ஸேவிங்ஸ் ஸெர்டிபிகேட்டுகளை 5, 10, 50, 100, 500, 1,000 அல்லது 5,000 ரூபாய்க்கு வாங்கலாம்.

2. ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களுள் ஒவ்வொருவரும் (அவர் பெரியவரா யிருந்தாலுஞ்சரி மைனரா யிருந்தாலுஞ்சரி) 5,000 ரூபாய் வரையில் வாங்க முடியும். இரண்டு பேர் கூட்டாக 10,000 ரூபாய் வரையில் வாங்கலாம்.

3. இவைகளின் மதிப்பு 12 வருஷங்களில் 50 சத வீதம் உயருகிறது. வட்டிக்குப் போட்டு வைக்கப்பட்ட ஒவ்வொரு ரூபாயும் ஒன்றரை ரூபாய் ஆகிவிடுகிறது. இது யாதொரு கவர்ன்மென்ட் பத்திரத்தின் மேல் கிடைக்கக்கூடிய மிக உயர்ந்த வட்டியாகும்.

4. சம்பாதிக்கப்பட்ட வட்டிக்கு இன்கம்டாக்ஸ் செலுத்த வேண்டியதில்லை.

5. இவைகளை 2 வருஷங்களுக்குப் பிறகு (5 ரூபாய் ஸெர்டிபிகேட்டுகள் விஷயத்தில், 18 மாதங்களுக்குப் பிறகு) ரொக்கமாக மாற்றிக் கொள்ளலாம்.

6. சிறு தொகைகளைச் சேர்த்து வைப்பவர்கள் 1 ரூபாய், 8 அணா அல்லது 4 அணாவுக்கு ஸேவிங்ஸ் ஸ்டாம்புகள் வாங்கலாம். இப்படி வாங்கிச் சேர்த்து வசப்பட்ட ஸ்டாம்புகளின் மதிப்பு 5 ரூபாயானதும், அவைகளைக் கொடுத்துவிட்டு அவைகளுக்குப் பதிலாக ஒரு ஸெர்டிபிகேட் பெற்றுக் கொள்ளலாம்.

7. இந்த ஸெர்டிபிகேட்டுகள், ஸ்டாம்புகள் ஆகிய இரண்டையும் தபாலாபீஸுகளிலாவது கவர்ன்மென்டாரால் நியமிக்கப்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜென்டுகளிடமாவது ஸேவிங்ஸ் பிரோக்களிலாவது பெற்றுக்கொள்ளலாம்.

உம்முடைய ஸேவிங்ஸ் க்ரூப்பில் இப்போதே சேரவும்!

குளிர்ச்சி வாய்ந்தது-களைப்பாற்றுவது

நறுமணம் கமழ்வது

உங்கள் தினசரி உபயோகத்திற்கு

வெப்பம் மிகுந்த நாட்களில், டாடாஸ் ஓடி கொலோன் கொஞ்சமெடுத்து நெற்றியிலும், கழுத்திலும்,கைகளிலும் பூசிக்கொள்ளுங்கள். வாஸனை பொருந்திய அதன் குளிர் ஸ்பரிசம் வெப்பத்தைத் தணித்து. களைப்பையும் போக்குகிறது. ஏனெனில் அதன் நுண்ணிய நறுமணம் குன்றுகளினின்று வீசும் குளிர்த் தென்றல் போன்றது.

கடுமையான கோடையில் உடல் வாடி வதங்கிச் சோர்வுறாது, குளிர்மையாகவும் உற்சாகம் ததும்பவுமிருக்க அது உங்களுக்குதவி புரிகிறது. எப்பொழுதும் ஒரு பாட்டில் கைவசம் வைத்துக் கொண்டு அதை தினசரி எபயோகியுங்கள்.

டாடாஸ் ஓ டி கொலோன்

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்

விய
மலர் 13

சக்தி

ஐப்பசி
இதழ் 7

மெய்ப்பொருள் காண்பது அறிவு

பெருமை அடைகிறோம்

''என்றுமுள தென்றமிழ்''ழைத் தாய்மொழியாகக் கொண்ட நாம் பெருமை அடைகிறோம். சென்னை மாகாண சர்க்காரில் திருவாளர் தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார் அவர்களைக் கல்வி மந்திரியாகப் பெற்ற நாம் பெருமை அடைகிறோம். சட்ட சபையில் பதவி ஏற்புப் பிரமாணம் எடுத்துக்கொள்ளும் போது, பழைய சம்பிரதாயங்களை விட்டொழித்து, தாய்மொழியாகிய இனித்த முறும் தனித் தமிழ் மொழியிலேயே ஆட்சி உறுதி மொழி வழங்கியதோடு அமையாது, தமிழ்ச் சர்வ கலா சாலையாக ஆகவேண்டிய அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் பட்ட மளிப்பு விழாவின்போது, இதற்கு முன் என்றும் நடந்திராத வண்ணம், தமிழ் மொழியிலேயே தமது பேருரையையும் நிகழ்த்திய நமது கல்வி மந்திரியின் தமிழ்ப் பற்றையும், தமிழினிடத்து அவர் கொண்டிருக்கும் பெருமிதமான தன்னம்பிக்கையையும் கண்டு நாம் பெருமை அடைகிறோம்.

சமீபத்தில், தொடக்க நிலைப் பள்ளிகள் அனைத்திலும், தாய் மொழி வாயிலாகவே கல்வி கற்பிக்க நமது மந்திரி செய்த முயற்சிகளுக்கு நாட்டில் பேராதரவு இருக்கிறது. மனமார்ந்த சில எதிர்ப்புக்களும் ஏற்பட்டன; சற்றுக் குழப்பம் நிகழ்ந்தது மனச் சாட்சிப்படி நடக்கும் ஸ்ரீ செட்டியார் தயங்க வில்லை. இன்று நமக்கு வேண்டிய கல்வி முறை எப்படி அமைய வேண்டும் என்பது பற்றி மக்களின் கருத்தை அறியும் பொருட்டுக் கல்வித் துறையினர் வினாத் தாள்கள் வெளியிட் டிருக்கிறார்கள். விஷயம் நன்கு சர்ச்சை செய்யப் பெற்று வருவது மக்களின் சிரத்தையை நன்கு புலப்படுத்துகிறது. கல்வி மந்திரியிடம் அழுத்தமான லட்சியப் போக்கும், விடாப்பிடியும் இருந்தாலும், குருட்டுத்தனமான குரங்குப் பிடிவாதம் அவரிடம் இல்லை யாகையால், மக்களின் அமோகமான ஆதரவும் ஒத்துழைப்பும் ஸ்ரீ செட்டியாருக்குக் கிடைக்கு மென்பதில் கொஞ்சமும் சந்தேக மில்லை.

ஸ்ரீ செட்டியாரின் பட்ட மளிப்பு விழாப் பேருரை இந்த இதழில் வெளிவந் திருக்கிறது. அதைப் படித்துப் பார்க்கிறவர்கள், அதி லிருந்து ஸ்ரீ செட்டியாரின் கல்வித் திட்டங்களைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும். வெறும் இலக்கியப் படிப்பு அன்றாட வாழ்வுக்குப் பயன் தராது. வெறும் தொழில் படிப்பு ஆத்மத் திருப்தி தராது. இரண்டும் தக்க அளவில், முறையில், தன்மையில், பொருந்த அமைந்த கல்வித் திட்டம்தான் நாட்டை உய்விக்கும், மக்களை வாழ்விக்கும்.

காலச்சுழல்

சந்தோஷம்: அக்டோபர் 15-ம் தேதி, இடைக்கால சர்க்காரில் லீக் சேர்ந்துகொண்டது. ஸ்ரீமான்கள் லியாக்கத் அலிகான், ஐ. ஐ. சந்த்ரிகர், அப்துர் ராப் நிஷ்தார், கஸ்னஃபர் அலி கான், ஜோகேந்திர நாத் மண்டல் இவர்கள் லீக்கின் சார்பாக மந்திரி பதவி வகிக்கிறார்கள். ஸ்ரீ லியாக்கத் அலி கான் தவிர, மற்றவர்கள் பிரபலமானவர்களல்ல. போதுமான அரசியல் அனுபவம் வாய்ந்தவர்களல்ல. துவேஷப் பிரசாரத்தில் பேர் போனவர்கள். முஸ்லிம்களுக்காக உள்ள லீக், இந்துக்களின் பிரிக்க முடியாத ஒரு கூறாகிய ஹரிஜனங்களுக்குப் பரிவு காட்டுவதுபோல் லீக் பிரதிநிதிகளோடு ஸ்ரீ மண்டலைச் சேர்த்திருப்பது வெறும் கண் துடைப்பு. இந்த ஐவர் வருகையால் ஸ்ரீ சரத் சந்திர போஸ், ஸர் ஷாஃபஆத் அகமத் கான், ஸ்ரீ சையத் அலி ஜஹீர் தங்கள் பதவிகளை ராஜிநாமாச்செய்துவிட்டார்கள். மத்திய நிர்வாகத்தில் கூட்டுப் பொறுப்பு இராவிடினும், பொதுப் பொறுப்பு இருக்கும். இதனால் வைசிராயின் ஆதிக்கம் வலுக்கும். இருந்தாலும், மேற்கொண்டு தகராறு செய்யாமல் எல்லாரும் ஒத்துழைத்தால், புரொபஸர் லாஸ்கி கருதும் வருகிற இரண்டு வருஷத்துக்கு முன்பே பூரண சுயராஜ்யம் கைவரும்.

நவகாளி வெறியர்கள்: கல்கத்தா, பம்பாய், கராச்சி, அலஹாபாத் முதலியவை போதாவா! நவகாளியின் நர்த்தனமும் வேண்டுமா! இது நாடா, நரகமா! கொடுமை ஒழித்த நபிகள் நாயகத்துக்குக் கொடுமை இழைப்பதா! கற்பழிப்பு, நர சோரம், கட்டாய மத மாற்றம் ஆகிய வெறியாட்டங்கள் நவகாளி, திப்பெரா ஜில்லாக்களில் நடக்கின்றன.—வங்கத்தில் இருப்பது சர்க்கார்தானா! ஹிந்துக்கள் பெரும்பான்மையோரா யுள்ள இடங்களில், பழி உணர்ச்சி தலை தூக்காதிருக்க ஆண்டவன் அருள் புரிவாராக!

எழுத்தாளர் மகாநாடு: சமீபத்தில், சென்னையில் நடக்கப் போகிறது. ஊருக்கு உழைத்து உயிரை விடுகிற இவர்களுடைய வாழ்க்கைத் தரமும், வாழ்க்கை வசதிகளும் இனிமேலும் கேட்பாரற்றுக் கிடப்பது நாட்டுக்கு நலம் தராது. எழுத்தாளர்கள் நாட்டின் உயிர் நாடி. அவர்கள் செய்து வரும் தொண்டு மகா புனிதமானது. அவர்களை அசட்டை செய்துவிட்டு வாழ்கிற வாழ்வு செல்லரித்துப் புரையோடிப்போன குறைபட்ட வாழ்வு. மக்களுக்காகப் பாடுபடும் எழுத்தாளர்களுக்கு மக்கள் ஏராளமாக ஆதரவு நல்குவார்களாக!

நமக்கு நஷ்டம்: ராவ் சாகிப் வெள்ளகால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தமது தொண்ணூறுவது வயதில், தமது கிராமத்தில், 12–10–46-ல் தமிழுக்குப் பெருத்த நஷ்டம் விளைவித்துவிட்டார். திருவாளர் முதலியார் தமிழ் அறிஞர்; நிறைமொழிப் புலவர்; ஆழ்ந்த ஆராய்ச்சியாளர்; பாவாணர். இவரது நஷ்டத்தைச் சமாளித்துக்கொள்ள உங்களுடைய அனுதாபம் நமக்குத் தேவை.

சகோதர, சகோதரிகளே!

●

தி. சு.
அவினசிலிங்கம் செட்டியார்



இப் பல்கலைக் கழகத்தில் பயின்று வெற்றியுடன் வெளிச் செல்லும் இளைஞர்களாகிய உங்களுக்கு இவ் வைபவத்தின்போது சில வார்த்தைகள் சொல்லச் சந்தர்ப்பம் அளித்த பல்கலைக் கழக அதிகாரிகளுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இவ் வாண்டு பட்டம் பெற்று வெளிப்போகும் உங்களனைவருக்கும் என் வாழ்த்துக்கள். நீங்கள் ஒரு பெரிய க்ஷேத்திரத்தின் அருகில் பயின்று வந்திருக்கிறீர்கள். உங்கள் மனது அதன் மூலம் தூய்மை அடைந்து, நமது சமூகத்தின் பண்பாட்டுக்கேற்ற உயர்ந்த குணங்களைப் பெற்று, நீங்கள் வளர்ந்திருப்பீர்கள் என்று நம்புகிறேன்.

நம் நாட்டிலுள்ள சர்வகலாசாலைகள் நமது உயர்ந்த நாகரிகத்திற்கும் பண்புக்கும் உறைவிடமாகவும், அவைகளை உலகிற்கு எடுத்து வழங்கும் கருவியாகவும் அமைந்திருக்க வேண்டும். விஷயங்களைப் பற்றிய அறிவை மாத்திரம் புகட்டுவது உண்மையான கல்வி யாகாது. ஆரம்பப் பள்ளிகள் முதல், கல்லூரிகள், சர்வகலாசாலைகள்வரை, எல்லா ஸ்தாபனங்களுடைய பெருமையும் அவற்றினின்று வெளிப் போகும் இளைஞர்களின் தன்மையைப் பொறுத்ததாகும். பள்ளிகளும், கல்லூரிகளும் பெரிய கட்டிடங்களை உடையனவாக இருக்கலாம்; ஆசிரியர்களும், மாணவர்களும் நிறைந்தனவாக இருக்கலாம்; மட்டற்ற பொருள் செலவு செய்யலாம்; பரீட்சைகளில் பெருவாரியாகத் தேர்ச்சி பெறும்படிச் செய்யலாம்; முதல் அணியிலும் தேர்ச்சி பெறச் செய்யலாம். ஆனல், இவற்றல் மாத்திரம் ஒரு ஸ்தாபனத்திற்குப் பெருமை ஏற்படாது. அவைகளில் பயிற்சி பெற்று வெளிப்போகும் சிறுவர்களும், சிறுமிகளும் உயர்ந்த லட்சியங்களும், ஒழுக்கமும் ஆற்றலும் பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும். தங்கள் சுயநல வாழ்வையே பெரிதாகக் கருதாது, தொண்டையும் தியாகத்தையும் பெரிதென எண்ணி, எவ்வளவுபேர் உயர்ந்த குறிக்கோள்களை மேற்கொண்டு வாழ்க்கையை நடத்துகிறார்கள் என்பதைக் கொண்டுதான் ஸ்தாபனங்களின் உயர்வையும் வெற்றியையும் அளவிடல் வேண்டும்.

அறிவை மாத்திரம் வளர்க்கும் கல்வி உண்மையான கல்வி யாகாது. அறிவு மாத்திரம் அமைந்தவர்களில் பலர் மிகுந்த சுயநலமுள்ளவர்களாக இருப்பதை நாம் வாழ்க்கையில் காண்கின்றோம். அவர்கள், தங்கள் காலத்தை யெல்லாம் சொந்த முன்னேற்றத்தைப் பற்றி நினைப்பதிலும்,

"வறுமையினலும், வைதிகத்தின் கொடுமையினலும் நசுக்கப்பட்ட நம் நாட்டிலிருக்கும் மக்களுக்கு நாம் ஒவ்வொருவரும், இரவும் பகலும், பிரார்த்தனை செய்வோமாக!"

"1946-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 15-ம் தேதி செவ்வாய்க்கிழமை சென்னைக் கல்வி மந்திரி உயர் திருவாளர் தி. சு. அவினசிலிங்கம் செட்டியார் அவர்கள், பி. ஏ., பி. எல்., எம். எல். ஏ., அண்ணமலைப் பல்கலைக் கழகத்தின் 16-வது பட்டமளிப்பு விழாவில் நிகழ்த்திய பேருரை" இது.

அதற்காக வேண்டிய நடவடிக்கைகளைச் செய்வதிலுமே செலவிட்டுவிடுகிறார்கள். பரந்த அறிவும், புத்திக் கூர்மையும் பெறுவதோடு, பரந்த உள்ளமும் நமக்கு இன்றியமையாததாகும். எனவே, நமது கலாசாலைகளில் கொடுக்கப்பெறும் பயிற்சிகள் புத்தி தீட்சண்யத்தை உண்டாக்குவதுடன் நமது உள்ளத்தையும் விசாலப்படுத்தி, அன்பு வாழ்க்கையின் பெருமையை ஊட்டட்டும். நம்மைச் சுற்றிலு மிருக்கும் ஏழைகள், எளியவர்கள், கல்வி யற்றவர்கள், தாழ்ந்தவர்கள் அனைவரையும் நம்மில் ஒரு பாகமாக நாம் உணருவோமாக. சொந்த முன்னேற்றத்தைப் பற்றியும் குடும்பத்தைப் பற்றியும், ஜாதியைப் பற்றியுமே நினையாமல், இப் பரந்த பாரத நாட்டிலுள்ள அனைவருடைய நன்மைக்காகவும் வாழ்க்கையை நடத்துவதே நமது கடமையும், தருமமுமாகும் என்பதை நாம் உணருவோமாக. நாம் பிறப்பெடுத் திருப்பது கேவலம் நம்முடைய வாழ்க்கையைப் பற்றி மாத்திரம் நினைப்பதற் கல்ல: உலகிலுள்ள அனைவருக்கும் சேவை செய்யும் ஓர் உயர்ந்த சந்தர்ப்பத்தைப் பெறவே நாம் தோன்றி யிருக்கிறோம் என்பது போன்ற உயர்ந்த கருத்துக்களைப் பரப்பும் நிலையங்களாக நம் கலாசாலைகள் திகழட்டும்.

இன்றையக் கலாசாலைகள் தினசரி வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்பு உடையனவாக இல்லை என்பது பெருங் குறையாக இருக்கிறது. இவை, சிறந்த எஞ்சினியர்கள், டாக்டர்கள், ஆசிரியர்கள், வக்கீல்கள், விவசாயிகள் இன்னும் இவர் போன்ற அறிஞர்களைச் சமூகத்திற்கு அளிப்பதுடன், இவர்களை இந் நாட்டின் நிலைமைக்கேற்றவாறும், சமூகத்தின் தன்மைக் கேற்றவாறும் சேவை செய்பவர்களாகச் செய்ய வேண்டியதும் அவசியம். தவிர, நமது கலாசாலைகளில் பயின்றவர்கள் தாய், தந்தை, புருஷன், மனைவி, மக்கள், மாணவர் என்ற முறையிலே தாங்கள் செய்யவேண்டிய கடமைகளைச் செவ்வனே செய்யத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். இவை அனைத்திற்கும் மேலாக, நாம் ஒவ்வொவரும் பொதுவாக மனித வர்க்கத்திற்கும், சிறப்பாக இந் நாட்டு மக்களுக்கும் செய்யவேண்டிய கடமைகளை உணர்ந்தவர்களாக இருத்தல் அவசியம். நம் உரிமைகளை உணர்ந்து கொள்ளுதல் எளிது. நமது கடமைகளை உணர்வது கடினம். அவற்றை அறிவதுதான் இன்று நமக்கு மிக அவசியமாக இருக்கின்றது.

மேலும், நமது கல்வி முக்கியமாகச் சிறுவர் சிறுமிகளுக்கு ஆண்மையளிக்கும் தகையதாக இருக்கட்டும். ஒருவன், தன்னுடைய அல்லது தன் குடும்பத்தினுடைய வாழ்க்கையை நடத்துவது மாத்திரம் பெரிய காரியமல்ல. அது, மக்களில் கடையராலும் செய்யக்கூடியது. செயற்கரிய செய்வா ரல்லவா பெரியர்? வாழ்க்கையில் சாகசமும் ஆண்மையுப் பொருந்தி இருக்கவேண்டும். அத்தகையவர்கள்தான் வாழுகிறார்கள் எனலாம். அவர்களுக்கே உலகில் சிறப்பும் பெருமையும் உண்டு. அருங் காரியங்கள் செய்யத் துணிபவர்கள் அவற்றுக்கான அரும் பெரும் முயற்சிகளையும் செய்யத் தயாராக வேண்டும். சமுத்திரக் கரைக்குச் சென்று எவரும் கிளிஞ்சல் கொண்டுவரலாம். ஆனால், முத்துக் கொண்டுவர விரும்புகிறவர்கள் சமுத்திரத்தின் ஆழத்திற்குச் செல்ல வேண்டும். அங்கு நேரிடும் அபாயங்களை எதிர்த்து வெல்லவேண்டும். ஒருதரம் கிடைக்காவிடில், வீரனாக இருப்பவன் மனம் தளர மாட்டான். அவனுக்கு அருமையுடைத் தென்று ஒன்றில்லை. இடுக்கண் வருங்கால் நகுவான். அத்தகைய திட்பம் உடையவன் எண்ணிய எண்ணியாங்கு எய்துவான். அத்தகைய இளைஞர்களே நம் நாட்டிற்கு இப்பொழுது தேவை. அத்தகையராக உங்களில் ஒவ்வொருவரும் ஆக வேண்டுமென்பதே எனது பிரார்த்தனை.

சர்வ கலாசாலைகளின் கடமை அவற்றின் பால் வரும் மாணவ, மாணவிகளுக்குக் கல்வி போதிப்பதோடு நின்றுவிடக் கூடாது. எல்லாத் துறைகளிலும் உயர்ந்த ஞானத்தைச் சாதா

அதிகாலையில் தோட்டத்தில் அழகான இந்திய ரோஜா முதல் முதலாக மலரும்பொழுது . . . உங்களுக்கு வினோலியா ஒயிட்ரோஸின் நினைவுகள் ஏற்படுகின்றன. மிருதுவான நுரையைத் தரும் வினோலியா உங்களைச் சுற்றிலும் மனோஹர பரிமளத்தைப் பரவச் செய்கிறது—மேலும் மிக மெல்லிய சருமத்தையும் சுகமாகச் சுத்தம் செய்கிறது. அழகை மென்மேலும் அதிகரிக்கச் செய்ய உங்கள் இஷ்டத்திற்குரிய இச் சோப்பைவிட உத்தமமானதோ, தகுதியானதோ வேறு கிடையாது.

வினோலியா ஒயிட் ரோஸ் சோப்

VWR. 22-111 TM

VINOLIA COMPANY LIMITED, LONDON, ENGLAND

சிலோன் ஏஜண்டுகள் : M. C. A. ஹுதா அண்ட் கோ., 20, டாம் தெரு : : கொழும்பு

ரண மக்களுக்கும் கிடைக்கும்படிச் செய்வது அவற்றினுடைய மகத்தான பணியாகும். ஆங்கில மொழியிலேயே நம் கல்லூரிகளில் கல்வி பயிலுவிப்பது இப் பணிக்கு ஓர் இடைஞ்சலாக இருந்துவந்திருக்கிறது. இதுவே நம் நாட்டில் உயர்தரக் கல்வி பெற்ற மாணவர்களுக்கும் சாதாரண மக்களுக்கு மிடையே ஒரு பிளவை உண்டுபண்ணி யிருக்கிறது. அமெரிக்காவில், சாதாரண விறகுவெட்டியாயிருந்த ஏப்ரஹாம் லிங்க்கன் அந் நாட்டுக் குடியரசின் தலைவனாகும் தகுதி பெற முடிந்த தென்றால், அதற்குத் துணையாய் அமைந்தது எது? எவரும் தாம் கற்க விரும்பியவற்றை எல்லாம் தாய் மொழியிலேயே எளிதில் கற்கும் வாய்ப்பு ஆங்கு அமைந்திருந்தமையே ஆகும். நம் நாட்டில், ஆங்கிலம் தெரியாத, தெரிய முடியாத, அறிவாளிகள் எத்தனையோ பேர் உயர்ந்த ஞானத்தை அடையவும், உயர்ந்த பணிகள் செய்யவும் சந்தர்ப்பம் இன்றித் தயங்குகிறார்கள். அவர்களின் அறிவும், ஆற்றலும் இன்று நாட்டிற்குப் பயன்படாமல் வீணாகின்றன. எனவே, சாதாரண மக்களும் எத் துறையிலாயினும் உயர்ந்த நிலை பெற்று, நாட்டிற்குப் பயன்பட வேண்டுமென்று நினைக்கின்ற இக் காலத்தில், கல்லூரிகளும் தேவைக்கேற்றவாறு நாட்டு மொழியில் கல்வி பயிற்றுவிக்கும் முறையில் மாற்றியமைக்கப்பெற வேண்டியது அவசியமாகும்.

நம் மக்களில் பெரும் பகுதியோர் உயர்தரக் கல்வியைப் பெறவேண்டுமானால், இப்பொழு திருப்பதைவிடக் குறைந்த செலவால் நடக்கக்கூடிய கிராமச் சர்வகலாசாலைகளை நாம் நிறுவவேண்டும். ஆங்கிலக் கல்வி இல்லாத நம் கிராம மக்களுக்கு, ஏன் உயர்தரக் கல்வி கிடைக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்யக்கூடா தென்ற நினைவு என் மனத்தில் அடிக்கடி தோன்றுகிறது. அறிவும், ஆற்றலும், நிறைந்த ஆயிரக் கணக்கான இளைஞர்கள் நம் கிராமங்களில் இருக்கின்றனர். அவர்களுக்கு உயர்தரக் கல்வி பெற ஆசை யிருக்கிறது. ஆனால், அதைப் பெறும் சந்தர்ப்பம் அவர்களுக்கு இல்லை. அத்தகைய சந்தர்ப்பத்தை அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய காலம் இப்பொழுது வந்திருக்கிறதென்று நம்புகிறேன். விவசாயம் முதலிய தொழில்களில் அவர்கள் ஈடுபட் டிருக்கிறார்கள். ஆதலால், அவர்கள் வெளியூர்களுக்குச் சென்று, தங்கள் தொழில்களை விட்டுவிட்டு நீண்டகாலம் தங்கி இருக்க முடியாது. தபாலில் அவர்களுக்குக் கல்வி புகட்டும் முறையைக் கைக்கொள்ள வேண்டும். வருஷத்தில் இரண்டு மூன்று மாதங்கள் அவர்களை ஓர் இடத்தில் சேர்த்து, நேராகச் சொல்ல வேண்டியவைகளைச் சொல்லலாம். அவர்களுக்குப் புகட்ட வேண்டிய கல்வி அவர்கள் மொழியிலேயே இருக்க வேண்டுமென்பதைச் சொல்ல வேண்டிய அவசிய மில்லை. இந்தக் கிராமச் சர்வ கலாசாலைகளை ஆரம்பிக்கு முன், பல சாஸ்திரங்களைப் பற்றிய நூல்களும் நம் நாட்டு மொழிகளில் எழுதப்பெற வேண்டும். பின்னர், கிராமச் சர்வகலாசாலைகள் ஏற்படுத்தினால், அவற்றால் ஆயிரக் கணக்கான இளைஞர்களுக்கு நன்மை ஏற்படு மென்பதில் ஐயமில்லை. ஜனநாயக ஆட்சி ஸ்தாபிக்கப்பெறும் இந் நாளில், சாதாரண மனிதனுக்கும் உயர்ந்த கல்வி அளிக்கும் இத்தகைய ஸ்தாபனங்கள் அத்தியாவசியமாகின்றன.

தவிர, கல்லூரியில் பயிலும் இளைஞர்களுக்கு நம் நாட்டின் தற்கால நிலைமையில் பெரிய தொரு கடமையுண்டு. இந் நாட்டு ஏழை மக்களின் பொருளைக் கொண்டு கலாசாலைகளின் பெரிய கட்டடங்கள் கட்டப் பெறுகின்றன; அவற்றை நடத்தவும் அப் பொருள் பயன்படுகின்றது. இங்ஙனம் கல்விபெறுபவர்கள் தங்களைவிட ஏழைமையான நிலைமையி லிருக்கும் சகோதர, சகோதரிகளின் நிலைமையைப் பற்றிச் சிந்திப்பது அவசியம். சர்வ கலாசாலைகளில் படிப்பு முடிந்தவர்கள் பட்டம் பெ[illegible]ன், ஒரு வருஷம் தேசத்திற்குச் [illegible]சவை செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயம் நாட்டில் நிலவி வருவதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், சட்டத்தின் மூலம் நிர்ப்பந்தம் செய்யப்பட்டு, வேலை செய்ய

வருவது இந் நாட்டிற்கும், இந் நாட்டின் இளைஞர்களுக்கும் பெருமை யளிக்காது. மக்கள் தங்கள் கடமையை உணர்ந்து, நாட்டின் மேலுள்ள அன்பால் தூண்டப்பெற்றுத் தாமாகவே வந்தாலொழிய, அது உண்மையான சேவையாகாது. விரும்பிய பயனையும் அது அளிக்காது. எனவே, இந்த ஏற்பாடு உங்கள் மனமுவந்த கோரிக்கையாக இருக்கவேண்டு மென்பது எனது அவா. நாட்டுப் பற்று நிறைந்த நீங்கள் அங்ஙனம் சேவை செய்ய முன் வருவீர்கள் என்பதில் எனக்குச் சிறிதும் ஐய மில்லை.

நமது கல்லூரிகள், இன்னு மொரு முக்கியமான பிரச்னையைக் கவனிக்க வேண்டும். நம் கல்லூரிகளில், மாணவர்களின் எண்ணிக்கை மிக அதிகமாக வளர்ந்திருக்கிறது. பல காரணங்களை முன்னிட்டு, உயர்தரப் பள்ளியில் தேறும் மாணவர்களில் பெரும்பாலோர் கல்லூரிகளில் இப்பொழுது சேருகின்றனர். உலகில் எந்த நாட்டிலும் உயர்தரப் பள்ளியில் தேறிவருபவர்களில் இவ்வளவு பெரிய விகிதம் கல்லூரிக் கல்விக்குப் போவதில்லை என்று சொல்கிறார்கள். இதற்குக் காரணங்கள் பலவாறாக இருக்கலாம். ஆனால், இதனால் பல கெடுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. கல்லூரிகளில் பெரும் கும்பலாகிவிட்டது. இதனால், மாணவர்களைச் சரியாகக் கவனிக்க முடியாமல் போனதுடன், மக்களை நன்றாக வளர்ப்பதற்கு இன்றியமையாத, ஆசிரியர்கள் மாணவர்களுக்குள் இருக்கவேண்டிய நெருங்கிய தொடர்பும், அன்பும் மிகக் குறைந்து போய்விட்டன. இது கல்லூரிப் பயிற்சியின் அடிப்படையையே பாதித்திருக்கிறது. இதன் காரணமாகக் கல்லூரிகளில் மாணவர்களிடையே கட்டுப்பாடு குலைந்திருக்கிறது. யுத்தத்தின் காரணமாக, வேறு பிரச்னைகளும் உண்டாகி யிருக்கின்றன. யுத்தத்தின் காரணமாகத் தோன்றிய பிரச்னைகளை இதர நாட்டினர் தங்களுக்கு ஏற்றவாறு தீர்த்துக்கொண்டு வருகிறார்கள். மாறுகிற நிலைமைக்கு ஏற்றவாறு தங்கள் கலாசாலைப் படிப்பையும், வாழ்க்கை முறைகளையும் திருத்தி அமைத்து வருகிறார்கள் தவிர, யுத்தத்தின்போது மேலை நாடுகளில் செய்யப்பெற்ற விஞ்ஞானம் முதலிய ஆராய்ச்சிகள் நம்மை அத் துறைகளில் வெகு பின்னணியில் வைத்துவிட்டன. நம் சர்வகலாசாலைகளும் பிறவும் பிற நாட்டினைச் சேர்ந்தவைகளுக்கு முன்னணியில் இருக்கும்படிச் செய்ய வேண்டுவது நம் கடமை. இவை போன்ற பிரச்னைகள் நமக்குப் பல இருக்கின்றன. ஆண்டவன் அருளாலும் உங்களின் ஒத்துழைப்பாலுமே இக் காரியங்களைச் செய்து முடிக்க முடியும். இவைகளைச் செய்யும்போது, ஒன்றை மாத்திரம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம்: செய்வன திருந்தச் செய்வோமாக. எது செய்யினும், திறம்பட, முற்றச் செய்து முடிப்போமாக.

சேவா உணர்ச்சியை அளிக்கும் கல்வி முறையை வகுப்பதே நமது லட்சியம். நமது முன்னோர்கள் மகத்தான காரியங்களைச் செய்திருக்கிறார்கள். இன்று நாம் ஒரு புதிய சகாப்தத்தில் இருக்கிறோம். ஒரு புதிய இந்தியாவைத் தோற்றுவிக்கும் பெருமை நமக்குக் கிட்டி யிருக்கிறது. பழங்கால இந்தியாவைவிட, வருங்கால இந்தியா பெருமை வாய்ந்ததாக இருக்கட்டும். அதற்கான முறைகளையும், முயற்சிகளையும் நாம் மேற்கொள்வோமாக.

அருள் வள்ளல் விவேகானந்த சுவாமிகள் அருளியது போல்,

> ஏதேனும் பெரிய காரியம் ஒன்றை நிறைவேற்ற வேண்டுமானால், அதற்கு மூன்று விஷயங்கள் மிகவும் அவசியமானவை. முதன் முதலில், இதயபூர்வமான உணர்ச்சி வேண்டும். அருள் சுரப்பது, ஆர்வ முண்டாவது இதயத்தின் மூலம்தான். முடித்தற் கரிய காரியங்களை முடிக்கவல்லது அன்புதான். எனதன்பார்ந்த சகோதர, சகோதரிகளே, இத்தகைய உணர்ச்சியை நீங்கள் முதலில் பெறுங்கள். இலட்சக் கணக்கான மக்கள் பல நூற்றாண்டுகளாக உணவின்றிப் பட்டினியாகக் கிடக்கின்றார்களே! லட்சக் கணக்கான மக்கள் இன்றும் பட்டினியால் மடிந்து வருகின்றார்களே என்ற உணர்ச்சி உங்களுக்கிருக்கிறதா? அஞ்ஞானமானது

இருண்ட மேகம்போல் நாட்டைக் கவிந்து கொண்டுவிட்டதே என்பதை நீங்கள் உணருகிறீர்களா? அவ்வுணர்ச்சி உங்களை அமைதி அற்றவர்களாகச்செய்துவிட்டதா? உங்களை நித்திரை யற்றவர்களாகச் செய்கின்றதா? அஃது உங்கள் இரத்தத்திற்குள் பிரவேசித்து, இரத்தக் குழாய்களின் வழியே சுற்றி, உங்கள் இதயத்துடன் சேர்ந்து ஓயாமல் துடித்துக்கொண்டிருக்கிறதா? அஃது உங்களை அநேகமாய்ப் பித்தர்களாக்கிவிட்டதா? நாட்டின் துக்கம், சீர்கேடு என்ற ஒரே கவலை உங்களைப் பிடித்துக் கொண்டுவிட்டதா? அதனால் உங்கள் பெயர், புகழ், பெண்டு, பிள்ளைகள், சொத்து சுதந்தரங்கள் எல்லாவற்றையும் மறந்தீர்களா? உங்கள் தேகத்தையும்கூட மறந்துவிட்டீர்களா? — இந்த நிலைக்கு வந்து விட்டீர்களானால், அதுவே தேசாபிமானியாவதற்கு முதற் படியாகும்.

இவ் வுணர்ச்சி உங்களிடம் இருப்பதாகவே வைத்துக்கொண்டாலும், வெறும் வசை மொழிகளிலும், உபயோகமற்ற பேச்சுக்களிலுமே உங்கள் சக்தியை யெல்லாம் செலவிடாது, ஏதாவது காரியத்திற்கொணரும் வழியொன்றைக் கண்டு பிடித்தீர்களா? வீணான தூஷணைகளை விட்டு, ஜனங்கள் படும் துன்பங்களைச் சிறிதேனும் தணிக்க உபயோகமான காரியம் ஏதேனும் செய்யவும், நடைப் பிணங்களாகிக் கிடக்கும் அவர்களை அக் கேவல நிலையிலிருந்து விடுவிக்கவும் ஏதாவதொரு மார்க்கத்தைக் கண்டு பிடித்தீர்களா? இவற்றைச் செய்தால் மாத்திரம் போதாது. உங்கள் காரியத்தில் இடையூறுகள் மலைபோலத் திரண்டு வரினும், அவற்றைத் தயங்காது எதிர்த்துப் போராடும் திடமான மனோ சங்கற்பம் உங்களிடம் இருக்கிறதா? உலக முழுவதும் ஒன்று சேர்ந்து, கையிற் கத்தி கொண்டு எதிர்த்து நின்றாலும், நீங்கள் சரி என்று நினைக்கும் காரியத்தைச் சற்றும் பின் வாங்காது செய்யவல்ல தைரியம் உங்களிடம் இருக்கிறதா? உங்கள் பெண்டு, பிள்ளைகளே உங்களுக்கு விரோதமாக நிற்பினும், உங்கள் செல்வத்தை யெல்லாம் இழக்க நேரிடினும், அதனால் உங்கள் பெயரே கெடுவதானாலும், மற்றெல்லா நலங்களும் போய் விடுவதாக இருந்தாலும்கூட, அப்பொழுதும் எடுத்த காரியத்தை விடாமல் உறுதியாய் நிற்பீர்களா? சகலமும் துறக்க நேரிடும் அக்காலத்திலும் நீங்கள் கருதிய உங்கள் இலட்சியம் கைகூடும் வரை, இடைவிடாமல், உறுதியாக மேல் நோக்கிச் செல்வீர்களா? பர்த்ருஹரியார் சொல்வது போல்,

> ஞானிகளானோர் நிந்திப்பதானாலும் நிந்திக்கட்டும்; அல்லது புகழ்வதானாலும் புகழட்டும். சகல பாக்யங்களையும் கொடுக்கும் இலட்சுமி வந்தாலும் வரட்டும்; அல்லது தனக்கிஷ்டமான இடத்திற்குப் போனாலும் போகட்டும்; மரணமானது இன்றே வந்தாலும் சரி; அல்லது நூறு வருஷங்கள் கழித்து வந்தாலும் சரி; எவனொருவன் உண்மையினின்றும் மயிரிழையேனும் பிறழாதிருப்பானோ அவனே உறுதியுடையோனாவான்.

இவ் வுறுதி உங்களிடம் இருக்கின்றதா? இந்த மூன்று விஷயங்களும்—உண்மை யுணர்ச்சி, தக்க வழியொன்று காணல், கண்ட அவ் வழியில் உறுதியுடன் உழைத்தல்—உங்களிடம் இருக்குமானால், நீங்கள் ஒவ்வொருவரும் அற்புதங்களைச் செய்வீர்கள்.

கருணைப் பரஞ்சுடர் நமக்கு வழி காட்டட்டும் என்று நாம் பிரார்த்திப்போமாக! அப்போது, நம்மைச் சுற்றி யிருக்கும் அந்தகாரத்தினூடே ஓர் அருள் ஒளி தென்படும். நமக்கு வழிகாட்ட ஒரு திருக் கரம் வெளித் தோன்றும். வறுமையினாலும், வைதீகத்தின் கொடுமையினாலும் நசுக்கப் பட்ட நம் நாட்டிலிருக்கும் இலட்சக் கணக்கான மக்களுக்கு நாம் ஒவ்வொருவரும், இரவும், பகலும் பிரார்த்தனை செய்வோமாக! இவ் வேழை மக்களையே உங்கள் தெய்வமாகக் கொள்ளுங்கள். அவர்களைப் பற்றியே சிந்தனை செய்யுங்கள்; அவர்களுக்காகவே உழையுங்கள்; அவர்களுக்காகவே சதா பிரார்த்தனை செய்யுங்கள்! இறைவன் உங்களுக்கு வழிகாட்டுவானாக!

இன்ப வேட்டை

ஆர். ஓ. ஆங்க்ளேர்

ஒரே ஓர் ஊரில் ஒரே ஒரு ராஜா. அந்த ராஜா மிகவும் நல்லவர்; மெத்த வல்லவர்.

அவர் ஆட்சியின் கீழ்ச் சாந்தியும் சுபிட்சமும் நிலவின. வயது ஆக ஆக, அவருக்குத் தம்முடைய ஆட்சியைப் பற்றிய கவலை அதிகரித்தது.

கவலைக்குக் காரணம் அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்ததுதான். இவர்களில் யாரிடம் ஆட்சியை ஒப்படைப்பது என்பதைப் பற்றித்தான் அவருக்கு அப்படி அபாரமான கவலை ஏற்பட்டது.

இந்தப் பெரும் பிரச்னையை ஒரு விதமாகத் தீர்க்க அவர் முற்பட்டார். மூன்று பிள்ளைகளையும் ஒரு நாள் அவர் அருகில் அழைத்தார். எழில் மிகுந்த நங்கை ஒருத்தியின் படத்தை அவர்களுக்குக் காண்பித்தார்.

"யாரப்பா இந்தப் பெண்?" என்று வாயைப் பிளந்தான் பெரிய பையன்.

"இவள் பெயர்தான் இன்பம். உங்களில் இவளைத் தேடி அடைபவனே இந்த நாட்டை ஆள அருகதையுள்ளவனவான்" என்றார் தந்தை.

"அவள் எங்கே வசிக்கிறாள்?" என்றனர் எல்லாரும்.

"அது எனக்குத் தெரியாது. அவளைத் தேட வேண்டியது உங்கள் பொறுப்பு" என்றார் அரசர்.

ஆகவே, எல்லாரும் புறப்பட ஆயத்தமானார்கள். அவர்களை அழைத்தார் அரசர். "ஆனால், ஒரு சமாசாரம்" என்று ஆரம்பித்தார்.

"இதோ சில மூலிகைகள் இருக்கின்றன; இவை என் தாயார் தந்தவை; இவற்றுக்கு அன்புச் செயல்கள் என்று பெயர். இவற்றை யாருக்குத் தருகிறீர்களோ அவர்களுடைய துயரத்தை ஓட்டி, நோய்களைப் போக்கி, ஆனந்தத்தை அளிக்கும்."

இதைக் கேட்ட பெரிய மகன் இடி இடி என நகைத்தான். "என்னிடம் ஏராளமான பணமிருக்க, ஏன் இந்த மூலிகைகளைச் சுமக்க வேண்டும்?" என்றான் இறுமாப்புடன்.

இரண்டாமவன் அதைக் கண்டு எள்ளி நகையாடினான். "எனக்கு மூளை பலம் போதும்; மூலிகை பலம் வேண்டாம்" என்று, விட்டான் சவாரி.

மூன்றாமவன் மட்டும் மூலிகைகளைப் பெற்றுக் கொண்டான். "யாராவது வழியில் துன்பப்பட்டால் இவற்றைக் கொண்டு ஆறுதல் அளிப்பேன்" என்று கூறிப் புறப்பட்டான்.

மூவரும் போனார்கள்.

அரண்மனை வெளி வாயிலில், வீதி ஓரமாய் ஒரு பிச்சைக்காரப் பெண் உட்கார்ந்திருந்தாள். "நீ யார்?" என்று அவர்கள் கேட்டதற்கு, "நான்தான் திருப்தி" என்றாள் அந்தப் பெண்.

"ஆங்கிலக் கதை ஒன்றின் தழுவல்—ஆலிவ் ஷ்ரீனர் அல்ல!" என்ற குறிப்புடன் நண்பர் ஸ்ரீ கே. வி. வீரராகவன் இந்தக் கதையை நமக்கு அனுப்பியிருக்கிறார். மூலக் கதையை யாரோ ஓர் ஆங்கிலேயர் எழுதியிருந்தாலும், இன்பத்தின் ரகசியத்தை இது எவ்வளவு லளிதமாகத் தொட்டுக் காட்டிவிடுகிறது!

"அட, சீ! இன்ப மங்கை இவ ளல்ல!" என்று முதல் இருவரும் கிளம்பி விட்டார்கள்.

இளையவன் மட்டும் நின்று நிதானித்து, "ஏனம்மா இப்படித் தெரு ஓரத்தில் நிற்கிறாய்?" என்று அன்பு கனிந்த குரலில் விசாரித்தான்.

"ஒன்று மில்லை; கொஞ்சம் இளைப்பாற உட்கார்ந்தேன்" என்று கூறி அவள், "ஆமாம்; அதோ உன் கையில் என்னவோ வைத்திருக்கிறாயே, அது என்ன?" என்று கேட்டாள்.

"அதுவா? அது அன்புச் செய்கை என்னும் மூலிகை. எங் கள் பாட்டியின் மருந்து. உனக் கும் ஒன்று தருகிறேன்; வைத் துக்கொள்" என்று சொல்லி ஒன்று கொடுத்தான்.

"அப்பா! நீ மகாராஜனா யிரு!" என்று மனமார வாழ்த்தி, அம் மங்கை, "நீ எங்கே போகி றாய்?" என்று கேட்டாள்.

"இன்பம் என்னும் அழகிய மங்கையைத் தேடிச் செல்கி றேன். அவள் இருக்கும் இடம் உனக்குத் தெரியுமா? தெரிந்தால் கொஞ்சம் சொல்லேன்!" என்று அவளையே கேட்டான் அவன்.

"இந்தத் தெருவிலேயேகூட நீ அவளைக் காணக் கூடும்" என் றாள் அவள்.

"அப்படியானால், நான் சென்று வருகிறேன். உனக்குச் சம்மதமானால், நீயும் என்னுடன் வந்து வழி காட்டினால் நல்லது. துணையிருந்தால் தூரமும் குறை யும்" என்றான் இளவரசன்.

இருவரும் சென்றார்கள். வழி யிலே, ஒருநொண்டி இவர்களைக் கண்டு கொஞ்சம் பணம் கேட் டான். "பணமும் தருகிறேன்; உன் நோயைத் தீர்க்க ஒரு மூலி கையும் தருகிறேன்" என்று கூறி அவனுக்குப் பணமும் மூலிகையும் தந்து, இன்ப மங்கை யைப் பற்றி அவனைக் கேட் டான்.

"வாழ்க்கை என்னும் நகரத்தி லிருந்து நான் வருகிறேன். அங்கே இன்பம் என்ற பெயரே யாருக்கும் தெரியாது" என்றான் அவன்.

இப்படியே அவர்கள் போனார் கள்; போனார்கள்; போனார்கள். வருத்தப்பட்டவருக் கெல்லாம் மூலிகையும் கேட்டவருக் கெல் லாம் பணமும் கொடுத்துக் கொண்டே போனார்கள்.

இன்பத்தின் பெயரே தெரி யாத வாழ்க்கை என்னும் நகரை அடைந்து, அம் மக்களின் அல் லல் தீர மூலிகை வழங்கி வருவ தில் ஈடுபட்டார்கள். அங்கேயே அனேக வருஷங்கள் ஆகிவிட் டன.

இதற்கிடையே மூத்த மகன் விலை உயர்ந்த ரதம் ஒன்றில், அழகிய மங்கை ஒருத்தி அருகில் அமர, ஆடம்பரமாய் அரண் மனைக்குத் திரும்பி வந்தான். அப்பாவிடம் சென்று, "இன்பம் என்று எவளையும் காணோம். இதோ இருக்கும் சிற்றின்பம் என்னும் இவ் வழகிய மங்கை யையே நான் மணப்பேன்" என்றான்.

பார்ப்பதற்கு அழகாய்க் காணப்பட்டாலும், சிற்றின்பத் தைக் கண்டு சினந்தான் அரசன். ஒரு பெருமூச் செறிந்து, "இரண் டாம் மகனும் வரட்டும், பார்க்க லாம்" என்றார் அவர்.

சிறிது காலம் சென்றது; இரண் டாம் மகனும் திரும்பினான்.

அவனது ரதம் அபாரமாய் ஜ்வலித்தது; அவனுக் கருகிலும்

ஒரு மங்கை ஆடம்பரமாய் வீற்றிருந்தாள்.

"தேடித் தேடி அலைந்தேன்; இன்பம் என்பவள் எங்கும் அகப்படவில்லை; இதோ வீரம் தவழும் இப் பெண்தான் வெற்றி என்பவள்; இவளையே நான் மணப்பேன்" என்முன் அவன்.

"அகந்தையே உருவான இவ் வணங்கா இந் நகருக்குப் பட்டமகிஷி யாவது? இதற்கு ஒரு நாளும் ஒப்ப முடியாது" என்றுர் அரசர்.

பின்னும் பல நாட்கள் சென்றன. இளையவன் இனித் திரும்புவானே, மாட்டானே என்று கூட ஐயம் ஏற்பட்டுவிட்டது அரசருக்கு.

கடைசியில், அவன் வந்தான். ஆனல், ரதமோ, வண்டியோ ஒன்றும் இன்றிக் கால்நடையாகவே வந்தான். கந்தல் உடை தரித்த காரிகை ஒருத்தியைக் கையைப் பிடித்து அழைத்துவந்தான்! வந்ததும், தந்தையை வணங்கினன். "அப்பா! அனேக நாட்கள் ஆகிவிட்டன. தாங்கள் இட்ட வேலையை இப் பேதை மறந்துவிடும்படி நேரிட்டது. இன்பம் என்னும் மங்கையைத் தேட எனக்கு நேரம் ஒழியவில்லை. வாழ்க்கை என்னும் நகரில் மக்கள் படும் கஷ்டங்களைக் கண்டு என் நெஞ்சம் பதறியது; அவர்களது துன்பத்தைப் போக்க அங்கே தங்கள் மூலிகைகளை எடுத்துச் சென்றேன். அவற்ருல் அவர்கள் பெற்ற ஆனந்தத்துக்கு அளவே இல்லை!" என்றுன்.

"சபாஷ்! நீயல்லவோ உண்மை மகன்! இன்ப மங்கையை இனி நீ தேடவே வேண்டாம்" என்று கூறி அப் பெண்ணைக் கவனித்தவாறு சட்டென்று நிறுத்தி, "ஆமாம்; இந்தப் பெண் யார்?" என்று கேட்டார் தந்தை.

"இவள் பெயர் திருப்தி. புறப்படும்போது இவளைக் கண்டு துணையாகக் கொண்டேன். தாங்கள் அனுமதி தந்தால், இவளையே வாழ்க்கைத் துணையாக வரிப்பேன்" என்று அவன் சொன்னதும், அருகி லிருந்த அனைவரும் இடி இடியென நகைத்தனர். சிற்றின்பமும் வெற்றியும் நெற்றியைச் சுருக்கி, வெறுப்பைத் தெரிவித்தனர்.

உடனே, பிச்சைக்காரி தன் வேஷத்தைக் களைந்தெறிந்தாள். வெள்ளை வெளேரென்ற உடையில், அப்ஸர ஸ்திரீ போன்ற அழகுடன் ஜாஜ்வல்யமாய் அனைவர் முன்னிலையிலும் அவள் நின்றுள்.

"ஆஹா! நீயன்றே இன்பம்!" என்றுர் அரசர்.

"ஆம்! நான்தான்!" என்றுள் அம் மங்கைநல்லாள்.

இளையவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. "ஆஹா! உன்னை அறியாமலேயா உன்னுடன் இதுவரை இருந்தேன்!" என்று ஆச்சரியப்பட்டான் அவன்.

"நாங்களும் மும்முரமாய்த் தானே தேடினேம்? எங்களுக்கு அகப்படாமல் எந்த மூலையில் இவள் இருந்தாள்?" என்றனர் முதல் இருவரும்.

"நீங்கள் மூவரும் போகையில் இவ் வரண்மனை வெளிவாயிலில் உட்கார்ந்திருந்தவள் நான் தான்!" என்றுள் அவள்.

அவர்கள் தலை வெட்கத்தால் தாழ்ந்தது.

இன்பக் கலை

●

சுப. நாராயணன்

தான் அனுபவித்த உணர்ச்சியை அப்படியே பிறரும் அனுபவிக்கும்படிச் செய்கிற முயற்சியைக் கலை என்கிறோம். ஒரு தொழில் முயற்சி பண்பட்டுப் பண்பட்டு, திருந்தி, மெருகேறி, நயப்படுகிறபோதுதான் அது கலை யாகிறது. கற்றுக் கற்று, திருந்தி வளர்கிறோம். முதலில், நாம் பலவிதமான அனுபவங்களைப் பெறுகிறோம். ஒரே மாதிரியான அனுபவம் திரும்பத் திரும்ப நிகழும்போது, அதை நாம் இனங் கண்டுகொள்ளக் கற்றுக்கொள்கிறோம்.

நம்முடைய உடல் நிலையும், மன நிலையும் எப்போதும் ஒரே மாதிரி இருப்ப தில்லை. அதனால், நம்முடைய அனுபவங்களும் எப்போதும் ஒரே மாதிரி இருப்ப தில்லை. ஆனாலும், நம்முடைய உடல் நிலைக்கும் மன நிலைக்கும் தொடக்கம், முடிவு என்ற இரண்டு எல்லைக் கோடுகள் இருக்கின்றன. வெறும் உயிர் இயக்கமான தொடக்க நிலையும், மரணவஸ்தையான முடிவு நிலையும் ஆகிய இந்த இரண்டு எல்லைக் கோடுகளுக் குள்ளும் அடங்கித் தான் மாற்றங்கள் நிகழும். சாதாரணமாக, வாழ்க்கையானது இந்தக் கோடியிலோ, அந்தக் கோடியிலோ சாய்ந்து, சரிந்து போய் விடாமல், கூடிய மட்டும், ஏறத் தாழ, நடுநிலையிலேதான் இருந்து வரும். ஆகவே, நடுநிலையில் இருந்து வரும் உடல் பக்குவம், மனப் பக்குவம் ஆகியவைகளைப் பற்றுக்கோடாக வைத்துக்கொண்டுதான் சராசரி மனிதன் தன்னுடைய வாழ்க்கையை நடத்துகிறான். அந்த வாழ்க்கையில் அவன் பெறுகிற அனுபவங்கள் சரியானவை தானா, அவை போதுமா என்ற சந்தேகம் மனிதனுக்குச் சதா இருந்துகொண்டே இருக்கிறது. சந்தேகம் இருந்து வரும் வரையில் திருப்தி ஏற்படாது. போதும் என்ற மன நிலை வராது. ஏதோ குறை இருக்கிறது என்ற எண்ணம் நெஞ்சை உறுத்திக் கொண்டே இருக்கும். குறையை நிறைவுபடுத்த வேண்டுமென்ற ஆசை, மேலும் மேலும் வளர்ந்து முன்னேற அவனைத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

தன் குறையை அவன் எப்படிப் பூர்த்தி செய்துகொள்வது? தன் சந்தேகத்தை எப்படித் தீர்த்துக்கொள்வது?—உடனே, தன்னுடைய சொந்த அனுபவங்களைப் பற்றித் தானாகச் சிந்தித்துப் பார்க்கிறான். சிந்திக்கச் சிந்திக்கத் தெளிவு ஏற்படுகிறது. ஒரு முடிவுக்கு வருகிறான். வந்த முடிவு சரிதானா என்று மறுபடியும் சந்தேகம் முளைக்கிறது. அப்போது, தனக்குப் பக்கத்திலுள்ள தன்னைப் போன்ற மற்ற மனிதர்களிடம் தன்னுடைய அனுபவங்களைச் சொல்லுகிறான்; எழுதிக் காட்டுகிறான்; பாடிக் காட்டுகிறான்; படம் போட்டுக் காட்டுகிறான்; ஆடிக் காட்டுகிறான்; இந்த முயற்சியில் அவன் வெற்றி பெற்றால், அவனுடைய அனுபவங்களை மற்றவர்களும் அப்படியே புரிந்துகொள்ளுகிறார்கள். சராசரி அனுபவங்கள் சராசரி மனிதர்கள் எல்லாருக்கும் கிடைத்திருக்குமாகையால், அவர்கள் இவனுடைய அனுபவ

"இனிய உளவாக இன்னாத" செய்தல்
"கனியிருப்பக் காய்கவர்ந் தற்று."

வெளிப்பாட்டு முயற்சிகளை—கலை முயற்சிகளை—க் கண்டு, வியந்து ஆமோதிக்கிறார்கள். மற்றவர்களுடைய பாராட்டுதல்களைக் கண்டவுடன், கலைஞனுக்குத் தன்னம்பிக்கை உண்டாகிறது. மேலும் மேலும் முன்னேற ஆசை கொள்ளுகிறான்.

இப்படியே, வாழ்க்கைப் பாதையில் போய்க்கொண்டிருக்கிறான். ஒவ்வொரு கட்டத்திலும் சந்தேகமும், குறைபாடும் தடைப்படுத்திக்கொண்டேயிருக்கின்றன. வருந்தி, முயன்று முயன்று, சந்தேகங்களைத் தெளிந்துகொண்டு, குறைபாடுகளை நீக்கிக்கொள்ளுகிறான். குறை நிவர்த்தியான ஒவ்வொரு சமயமும் திருப்தி உண்டாகிறது. உண்டான திருப்தி பரிபூரணமானதாக இல்லை. இன்னும் குறைபாடு இருந்துகொண்டேயிருக்கிறது. குறைபாடு கிஞ்சித்தும் இல்லாத நிலை வந்தாலன்றி, பரிபூரணமான திருப்தி ஏற்படப் போவதில்லை. பரிபூரணமான திருப்தி ஏற்படுகிறபோது, அதற்கு மேல் உழைக்க வேண்டிய தேவை இராது. வளர்ச்சி பரிபூரணமாக ஆகிவிட்டது. விருப்பு, வெறுப்புக்கு இடம் இல்லை. அப்போது, தன்னைத் தானே பரிபூரணமாக அறிந்துகொண்டு, "சும்மா இருப்பதே சுகம்" என்ற அதீதமான—புத்தர் பிரான் போதித்த நிர்வாண—நிலையை எட்டிவிடுகிறான். அந்த நிலையில் சிந்தனைக்கு இடம் இல்லை; உணர்ச்சிக்கு இடம் இல்லை; புதிதாக அனுபவம் பெற வேண்டிய தேவை இல்லை. சுத்த சூன்யமாகத் தன்னுள் அடங்கிப்போய், தானே இயற்கையாகவும், இயற்கையே தானாகவும் அதனோடு இரண்டறக் கலந்துவிடுகிறான். முடிவில்லாத தியானத்தில் லயித்துவிடுகிறான். உடல் கட்டுப்பாடு, மனக் கட்டுப்பாடு எல்லாம் அற்று விழுந்துவிடுகின்றன. மனித வளர்ச்சியின் கடைசி எல்லை இதுவாகத்தான் இருக்க வேண்டும். வேதாந்திகளும், தத்துவ சாஸ்திரிகளும் இப்படிச் சொல்லியிருப்பதாகத்தான் எனக்குப் படுகிறது.

அப்படியானால், வாழ்க்கையின் லட்சியம் என்ன? படிப்படியாக வளர்ந்து, முன்னேறி, மேலே சொன்ன நிரந்தரமான தியான நிலையை அடைவதுதானா? இருக்கலாம். அப்படியானால், அந்தத் தியான நிலையிலே நாம் பெறுகிற பயன் என்ன? அந்தப் பயனுக்கும் மேலே ஏதாவது அனுபவம் உண்டா? அந்த அனுபவத்தாலே ஏதாவது இன்பம் உண்டா? அதுதான் நமக்குப் புரியவில்லை. கோடானு கோடி மக்கள் அன்றாடம் லௌகிக வாழ்வில் உழன்று போராடிக்கொண்டுதான் வருகிறார்கள். இவர்களில் கொஞ்சப் பேராவது பரிபக்குவம் அடைந்து, உச்ச நிலையை எட்டித்தான் இருக்க வேண்டும். பெரிய ஞானிகளும், துறவிகளும் பேரின்பத்தைப் பற்றி நமக்குச் சொல்லி வந்திருக்கிறார்கள். பேரின்பத்தை அடைய நமக்கு வழி துறைகளையும் காட்டியிருக்கிறார்கள். ஆனால், வாழ்க்கைப் பாதையில் நாம் வெவ்வேறு கட்டங்களிலே இருப்பதனால், பல சமயம் அவர்களுடைய குரல் நம் காதுக்கு எட்டுவதில்லை. அப்படி எட்டினாலும், அவர்கள் பேசுகிற பாஷை நமக்குப் புரிவதில்லை. பாஷை புரிந்தாலும், விஷயம் விளங்குவதில்லை. விஷயம் விளங்கினாலும், அவர்கள் சொன்ன சொல்படி நடக்கக் கூடிய தகுதி நம்மிடம் இருப்பதில்லை. இதற்



....அப்படியானால் கீழ்க்கண்ட வெளியீட்டிற்கு எழுதுங்கள்.

★ 60 பிளான்களும் அவைகளின் சுமாரான விலைமதிப்பும்.

★ முழுதும் வர்ணப்படங்கள்.

★ விலை ரூ. 2/- (தபால் சிலவு அணா 0-5-0 பிரத்தி வேகம்.)

தி கான்க்ரீட் அஸோஸியேஷன்
ஆப் இந்தியா,
199, மௌன்ட் ரோட்,
மதராஸ்.

"புது வீட்டின் 60 மாதிரி பிளான்கள்" என்ற வெளியீட்டின் . . . பிரதி/பிரதிகள் எனக்கு தயவு செய்து அனுப்பவும். தபால்சிலவு உள்பட கிரயத்திற்காக ரூ . . அனுப்பி யிருக்கிறேன்.

பெயர் ____________________

____

விலாசம் ____________________

M/CS ____________________

தி ஸிமெண்ட் மார்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிமிடட்.

CMI. 123-Tamil

பொன் விழா வரும்போது

பண்டிட் டி. கோபாலாச்சாருலுவின்

ஜீவாம்ருதம்

நாட்டில் தேக சுகத்தையும் சுபீட்சத்தையும் பரவச் செய்வதில் தொடர்ந்து ஐம்பது வருஷங்களாக நிலையான ஊழியம் புரிந்து வந்திருப்பதில் பெருமை யடைகின்றோம்.

ஆயுர்வேதாஸ்ரமம் லிட்.
தி-நகர் . . . . மதராஸ்.

EASTERNS 373.

ஆஸ்தமா வியாதியுள்ளவர்களுக்கு நான் இதைத்தான் சொல்லுவேன்



தற்சமயத்திற்கு குணமளிக்கும் மருந்துகளை வாங்குவது முற்றிலும் வீண்,

"புரோகித் சுவாஸஹரி" தற்சமயத்திற்கு மட்டும் அல்ல, "ஆஸ்த்மா"வின் மூலகாரணங்களையும் கண்டித்து நீடித்த குணத்தை அளிக்கும். சாப்பிட ஆரம்பித்ததுமே திணறலை நிறுத்தி ஜீரணத்தையும் அதிகரிக்கிறது. நாளடைவில் பலத்தையும் கொடுத்து ஆஸ்த்மாவை வேரோடு ஒழிக்கும்.

"ஆஸ்த்மா," திணறல் (கஷ்ட சுவாசம் முதுகுவலி, தொண்டை கரகரப்பு, இருமல்) இன்னும் இதைப்போன்ற ஈரல் சம்பந்தப்பட்ட வியாதிகளுக்கு "சுவாஸஹரி" ப்ளெயின், (நீலப்பெட்டி) சாப்பிடவேண்டும். அஜீரணம் வயிறு உப்பிசம் உள்ள ஆஸ்த்மா வியாதி உள்ளவர்கள் "சுவாஸஹரி" காம்பௌண்ட் (சிவப்புப் பெட்டி) உபயோகிக்கவேண்டும்.

ஒவ்வொரு மருந்துக் கடையிலும் கிடைக்கும் 3, 6, 12, அவுன்ஸ் அளவுகளில் முறையே ரூபாய் 3-6-0, 5-12-0, 10-0-0 ஆக விலை,

தயாரிப்பவர்கள் :—

புரோஹித் பார்மஸி, கோலாப்பூர்
எம். எஸ். எம்.

ஸ்டாக்கிஸ்டுகள் :— சென்னை :

1. அப்பா அண்டு கோ, சைனபஜார்.
2. அமிருத் ரத்னுகர் பார்மஸி, கோவிந்தப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் :

K. C. மாத்யூ & கோ,
கெமிஸ்ட்ஸ் &,
ட்ரக்கிஸ்ட்ஸ்,
கோஷாஞ்சேரி.

புரோகித்ஸ் ஸ்வாஸஹரி

குள்ளே—திடுதிப் பென்று—எதிர்பாராத சமயங்களில், நாம் வாழ்க்கைப் பாதையி லிருந்து தடுக்கி விழுந்து, மடிந்து போகிறோம்.

மூன்று மாதக் குழந்தை கிட்டத்தட்ட நிச்சிந்தையாகவே வாழ்கிறது. பசித்தால் அழுகிறது; பசிக்காத நேரத்தில், "சும்மா இருப்பதே சுகம்" என்று இருக்கிறது: இது, ஆரம்பக் கட்டம். கடைசிக் கட்டமாகிய உச்சாணிப் படிக்கு வந்துவிட்ட மனிதனும் நிச்சிந்தையாய்த்தான் வாழ்கிறான். ஆசாபாசம், இன்பம், துன்பம், உழைப்பு, ஓய்வு, பசி, திருப்தி, போராட்டம், அமைதி-இந்தச் சங்கதிக ளெல்லாம் இடைப்பட்ட நிகழ்ச்சிகள். அப்படியானால், நிச்சிந்தையான தியான நிலைதான் வாழ்க்கையின் லட்சியமா? அதுதான் வாழ்க்கையின் லட்சியமானால், எப்படியாவது லட்சியத்தை அடைந்தால் போதும் அல்லவா? நிரந்தரமான தியான நிலையை அடைவதற்கு என்ன செய்யலாம்? நாம் பிறந்தது முதலே புலன்களை அடக்கப் பழகிக்கொண்டு, துறவு பூண்டு, தியானத்தில் இறங்கிவிட்டால் ஆகாதா? வாழ்க்கையில் உழன்று, அடிபட்டு, உடலையும், மனத்தையும் துவட்டி எடுக்க வேண்டிய தேவை என்ன? வாழ்வு துன்பமயமானது, இதைத் தொலைத்துத் தலை முழுகினால்தான் நிரந்தரமான இன்பம் உண்டு என்று திட்டமாய்த் தெரிந்துகொள்ளுகிற கட்டத்துக்கு நாம் எப்போது வருகிறோமோ, அப்போது தற்கொலை புரிந்துகொண்டால் என்ன? செய்யலாம்தான். ஆனால், நாம் அப்படிச் செய்வதில்லை. ஏன்? நம்மால் அறிய முடியாத ஏதோ ஒரு சக்தி—இயற்கை அல்லது கடவுள்—நம்மை எங்கேயோ இருந்து கொண்டு வந்து, எங்கேயோ இட்டுச் சென்றுகொண் டிருக்கிறது. அது நமக்கு உடம்பைக் கொடுத்திருக்கிறது. உடம்பு இயங்கி வளர்வதற்கு அதனுள் உயிரையும் புகுத்தி யிருக்கிறது. இவை யிரண்டோடு சேர்ந்தும் சேராமலும், கலந்தும் தனித்தும், நமக்குள்ளே ஏதோ ஒன்று இருந்துகொண்டே யிருக்கிறது. இதை மனச் சாட்சி என்கிறோம். இந்த மனச் சாட்சி சொல்லுகிறபடி நாம் நடந்துவந்தால், பெரும்பாலான மனப் போராட்டங்கள் ஒழிந்துவிடுகின்றன. உடலும், மனமும் ஒத்து வேலை செய்தால், படிப்படியாக வளர்ந்து, படிப்படியாக முதிர்ச்சி பெற்று, முன்னுக்குப் போன வண்ணமாக இருக்கிறோம். சிறு சிறு கட்டங்களில், சிறு சிறு சங்கடங்கள் ஏற்படுகின்றன. இவைகளைக் கடந்தவுடன், சிறு சிறு திருப்திகள் ஏற்படுகின்றன. திருப்தி ஏற்பட்டவுடன், சிறு சிறு நொடிப்பொழுதுகளுக்கு நாம் சும்மா இருக்கும்போது காணும் சுகங்கள் சிறு சிறு இன்பங்களாக ஆகின்றன. லௌகீக வாழ்வில், இப்படிப்பட்ட சிற்றின்ப நிலைகள் எண்ணற்றன. இந்தச் சிற்றின்ப நிலைகள், வாழ்க்கையின் இறுதியில் நமக்குக் கிடைக்கக் கூடிய பேரின்பத்தின் சின்னஞ் சிறு பதிப்புகள்தான். சங்கடமான கட்டம் எதிர்ப்படும் போதெல்லாம் நாம் சாகிற நிலைக்கு வந்துவிடுகிறோம். உடம்பு நலிந்து, மெலிந்து, தேய்கிறது; மனம் தளர்ந்து, மயங்கித் தியங்குகிறது; மரணம் கிட்டுகிறது; இருள் படருகிறது; உணர்ச்சி ஆளை அமுக்குகிறது. உடனே, உயிர்ச் சக்தி உதவிக்கு வருகிறது. தொலைதூர லட்சியத்

தின் மேல் அது ஒளி வீசி, அதன் பால் நமது கவனத்தைத் திருப்பு கிறது. நடக்க வேண்டிய கட்டம் இன்னும் எத்தனையோ உண்டு என்று நமக்கு அது அறிவுறுத்துகிறது. பின்னல் எல்லையற்ற ஓய்வு உண்டு என்று நமக்கு அது எடுத்துக் காட்டுகிறது. மனச்சாட்சி உந்துகிறது. உழைக்கிறோம். துன்பத்தைச் சகித்துக்கொள்கிறோம். சங்கடமான நிலையை வெற்றிகரமாகச் சமாளித்துக்கொள்கிறோம். மறு கட்டத்தை மள மளவென்று நெருங்கிப் போகிறோம். இப்படியே, நிரந்தரமான ஓய்வு பெறும் சமாதி நிலை-பேரின்பநிலை-கிட்டும்வரை துன்பமும், இன்பமும் பெற்று, வழி நடக்கிறோம்.

இதிலிருந்து நமக்கு என்ன தெரிகிறது? சங்கடங்கள் வருவது துன்பம், அந்தச் சங்கடங்களைச் சமாளிப்பது இன்பம் என்று ஆகிறது. சங்கடமே இல்லையென்றால், துன்பமே இல்லையென்று ஆகும். துன்பமே இல்லையென்றால் இன்பமே இல்லையென்றுதான் ஆக வேண்டும். இது சரிதானா? நமக்குள்ள கண், மூக்கு, நாக்கு, தோல், காது ஆகிய ஐந்து புலனறிவுகளோடு, பகுத்தறிவு என்கிற ஆறாவது அறிவையும் சேர்த்து அமைந்த உணர்வுக் கருவிகள் மூலமாகத்தான் நமக்கும் பிரபஞ்சத்துக்கும் இடையே தொடர்பு இருந்து வர முடியும். இவைகளைக் கொண்டு பார்க்கும்போது, துன்பமேயில்லாத நிலையில் இன்பமும் இல்லை யென்று சொல்வது சரியென்றே படுகிறது. இவைகளை மீறிச் சிருஷ்டி ரகஸ்யத்தின் வெள்ளத்தில் குதிக்க நம்மால் ஆகாது.

ஆகவே, சராசரி மனிதர்களாகிய நீங்களும் நானும், இன்பக் கலையில் தேர்ச்சி பெறுவது எப்படி? இங்கிலிஷ்காரரான அலெக்ஸாண்டர் போப் சுருக்கமாக இதற்கு வழி சொல்லியிருக்கிறார்: மனித ஜாதியின் போக்கை நன்றாய் ஆராய்ந்து, தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு என்ன செய்ய வேண்டும்? மனிதனையே ஒரு புத்தகத்தைப் போல நன்றாய் ஆராய்ந்து, அறிந்து கொள்ள வேண்டும் — என்று அவர் சொல்லியிருக்கிறார். நிறைய படிப்பது மட்டும் போதாது; நிறைய உழைப்பது மட்டும் போதாது; நிறையச் சிந்திப்பது மட்டும் போதாது; எல்லா மனிதர்களோடும் சதா நெருங்கிப் பழக வேண்டும். நமக்கு வந்த சங்கடங்கள் மற்றவர்களுக்கும் வந்திருக்கும். கஷ்டம் வந்த போது மற்றவர்கள் என்ன செய்கிறார்கள், எப்படிச் சமாளித்துக் கொள்கிறார்கள், என்று தெரிந்து கொள்வதினால் நமக்கு எவ்வளவோ விஷயங்கள் தெளிவுபடும். எல்லாப் புஸ்தகங்களையும் நாமே படித்துவிட முடியாது. எல்லா மனிதர்களோடும் நாமே நேரடியாகப் பழகிவிட முடியாது. எல்லாச் சிக்கல்களையும் நாமே தீர்த்துக்கொள்ள முடியாது. ஒவ்வொரு கட்டத்திலும் மற்றவர்களுடைய அனுபவமும், ஆலோசனையும் நமக்கு எவ்வளவோ ஒத்தாசை புரியும். நாமும் அவர்களுக்கு ஒத்தாசை புரியலாம். பரஸ்பர ஒத்துழைப்பால் பரஸ்பர லாபம் உண்டு. நான் வாழ நீங்கள் உதவினால், நீங்கள் வாழ நான் உதவுவேன். உங்கள் உழைப்பு — துன்பம் — எனக்கு ஓய்வு—இன்பம்—தரும். என் உழைப்பு—துன்பம்—உங்களுக்கு ஓய்வு—இன்பம்—தரும். உங்களுக்கும் எனக்கு மிடையே நிகழும் ஒத்துழைப்பு, கேவலம் நேரடியான வியாபார ஒப்பந்த

மாகவும் இருக்கலாம். அல்லது என் உழைப்பு—என்னைச் சார்ந்தவர்கள் மூலமாக,—உங்களுக்கு—உங்களைச் சார்ந்தவர்கள் மூலமாக—ஓய்வு அளிக்கலாம். நீங்களும் நானும், சமூகம் என்ற பொதுக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள். நமது குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் உண்டாக்கும் உழைப்புச் சக்தி, குடும்பத்தின் பொது நலனுக்கோ, குடும்பத்தைச் சேர்ந்த தனி நபர்களின் நலனுக்கோ ஆக்கம் தந்தே தீரும். உழைத்தால், துன்பம் வந்தே தீரும். உழைக்காவிட்டால், இன்பம் வரவே வராது. ஆகையால், நாம் ஒவ்வொருவரும் முறை வைத்துக் கொண்டு, மனமார அவரவர் பங்குக்கு உழைத்தே தீர வேண்டும். அவரவர் பங்கு உழைப்பு முடிந்ததும், மறு போராட்டத்துக்குத் தயாராவதற்கு முன், அவரவரும் ஓய்வு பெறவேண்டும். இப்படிச் செய்து வந்தால், கடைசிக்கட்டத்தில் வரும்போது நாம் எல்லோரும் அவரவர் மனச்சாட்சிப்படி நடந்து, இயற்கையின் போக்குப்படி வாழ்க்கையின் லட்சியத்தை அடைந்தவர்கள் ஆவோம்.

உழைக்காமல் ஓய்வு பெறுவது, ஓய்வு பெருமல் உழைப்பது, உழைப்பைத் திருடுவது, உழைப்பதுபோல் பாவனை செய்வது, ஓய்வு பெற்றிருப்பது போல் மனப்பால் குடிப்பது ஆகிய குழப்பங்கள் நேரிடும் போது தான் குடும்பத்தில் அடிபிடி சண்டை நடந்து, மறியல், மத்தியஸ்தம், மழுப்பல், உருமயக்கம் எல்லாம் இசைகேடு பண்ணி விடுகின்றன.

இன்பக் கலைக்கு நமது மூதாதையர்கள் ஒரு நல்ல சூத்திரம் சொல்லித் தந்திருக்கிருர்கள். வாழ்க்கையை அவர்கள் மூன்று கட்டங்களாகப் பிரித்திருக்கிருர்கள்: இளமைப் பருவம், முதிர்ச்சிப் பருவம், முதுமைப் பருவம்—இப்படி மூன்று கட்டங்கள். இளமையில் உடல் வளர்ச்சி முக்கியத்துவம் பெறுகிறது. உடலும் மனமும் சம வளர்ச்சி பெறும்போது முதிர்ச்சி அடைகிரோம். கடைசிக் கட்டத்தில், மனம் மட்டும் முக்கியத்துவம் பெறுகிறது. காளைப் பருவத்தில், கல்வி கற்பதிலும், கன்னியர் மேல் கண்ணோட்டம் விடுவதிலும் கருத்துப் படிகிறது. இது முஸ்தீப்பு நிலை. பள்ளிப் பரீட்சை எழுதும் மாணவனுக்கு உள்ள ஆவேசம், துடிதுடிப்பு, ஏக்கம், பேரவா எல்லாம் இங்கே உண்டு. சிருஷ்டி பண்ணுவதற்கு மனம் சதா முயலும். சிருஷ்டிக் கண்ணோடுதான் சகல பொருள்களையும் இளைஞன் பார்ப்பான். பருவ எழில் கனிந்த பெண் உடல்கள் அனைத்தும்—கறுப்பு, சிவப்பு, பருமன், உயரம், குட்டை முதலிய எவ்வித வேற்றுமைக்கும் உட்படாத—பகர வொண்ணுத தெய்வீகக் காதலின் கொள்கலங்களாகவே அவனது வேட்கை பாய்ந்த கண்களுக்குப் படும். முதிர்ச்சிப் பருவத்தில், அவனுடைய பார்வை பரந்து, விரிந்து, ஆழமும் கூர்மையும் பெற்றுவிடுகிறது. ஆசைக் கனவுகள் அழிந்து சிதைகின்றன. இன்ப நினைவுகள் இடிந்து சாய்கின்றன. ஏமாற்றங்கள் எங்கும் கிளம்புகின்றன. மகன் மலைக்கிருன். பின்பு தேர்கிருன். ஆர்ப்பாட்டம் அடங்கி, நிதானம் அடைகிருன். காமப் பசியைக் கிளப்பிய கன்னிகையைக் காதல் மனையாளாகப் பெறுகிருன். சிருஷ்டித் தொழிலில், அவளுடன் சேர்ந்து, நேரடியாக ஈடுபடுகிருன். வாழ்க்கையை எதிரும் புதிருமாகச் சந்

திக்கிறுன். பல சங்கதிகளைக் கிட்டத்தில், நேரடியாய்ப் பார்க்கிறுன். புதிது புதிதான வாழ்க்கை ரகஸ்யங்கள் வெளிப்படுகின்றன. விஷயங்கள் "மிகினும் குறையினும் நோய் செய்யும்" என்பதை அறிந்துகொள்கிறுன். காரியங்களைச் சரிக்கட்டிக் கொள்கிறுன். உழைக்கிறுன்; ஓய்வு பெறுகிறுன்; வாழ்கிறுன். பின்னல், வாழ்க்கையின் எழில் நலங்களில் இன்னும் அதிகமாகத் திளைக்க அவாக் கொள்கிறுன். போதிய பொருளாதார வசதிகள் கிடைத்தவுடன், அவைகளால் திருப்தி யடைந்து, ஆத்மீக வசதிகளைப் பெற முனைகிறுன். அவனது வாழ்க்கையில், இயம்ப வொண்ணுத இனிமை வாய்ந்த கனிவு படிகிறது. சிற்றின்பத் தேவைகள் பூரணமாகக் கிட்டி விட்டதனுல், எவ்வித ஏக்கமுமின்றிப் பேரின்பத் தேவைகளை நிறைவுபடுத்த நிதானமாய், தீவிரமாய் முனைகிறுன். அப்போது, இன்பக் கலையின் எல்லையைத் தொட்டுப் பிடித்துவிடுகிறுன். அப்புறம் என்ன?—அதை இன்னெரு சமயம் பார்த்துக்கொள்வோம்.

✲

சங்கீத மகாத்மியம்

சங்கீதத்தினுல் நரம்பு சம்பந்தமான வியாதிகளும், மூளை சம்பந்தமான வியாதிகளும் குணப்படுத்தப் பட்டனவாக லண்டன் ஆஸ்பத்திரிகளில் செய்த சோதனைகளி லிருந்து தெரிய வருகிறது. வியாதியஸ்தர்களுடைய தேகம், தேகத்தி லிருக்கும் வியாதி, அவர்களுடைய மனேபாவம், ரசம் இவைகளை யறிந்து, அவற்றுக்குத் தகுந்த விதமான சங்கீத வசதிகளைச் செய்து, வியாதிகளைக் குணப்படுத்தி யிருக்கிறுர்கள் என்று லண்டன் ஆஸ்பத்திரிப் பத்திரிகைகள் கூறுகின்றன. 1927-ம் வருஷம் ஏப்ரல் மாதம் 25-ம் தேதி வெளிவந்த 'டெயிலி டெலகிராஃப்' பத்திரிகையில் ஒரு மிருகக் காட்சித் தலைவர் பின்வரும் அறிக்கையை வெளியிட் டிருக்கிறுர்: "மிருகக் காட்சி சாலையில் பியானே வாசிக்கப்பட்ட பொழுது, காண்டாமிருகம் அந்தச் சங்கீதத்தை ரசிக்காமல் வாத்தியக் கூட்டத்தாரை எதிர்க்க ஆரம்பித்தது. ஆனுல், கடல் ஜங்கமங்கள் எல்லாம் ஜலத்திற்கு மேல் வந்து, சங்கீதத்தைக் காது கொடுத்துக் கேட்டு, கடைசிச் சுரம் காதில் விழும் வரையில் கவனித்தன."

—எஸ். ஆர். குப்புஸ்வாமி (கர்னுடக சங்கீதம்)

குருடனின் யானை

எங்கும் வியாபித் திருக்கும் இருள் திரையின் மறைவிலே அந்தரங்கமாக எத்தனை எத்தனை கோர நாடகங்கள் நடக்கின்றனவோ, யார் அறிய முடியும்? சோகக் கதைகளும், இன்ப நவீனங்களும்—ருசி பேத முள்ள பல ரகமான நிகழ்ச்சிகளும்தான்—இரவின் ஆழத்திலே எங்கெங்கு எப்படி எப்படி நடைபெறுகின்றனவோ, யாரே புள்ளியிட்டுக் கூற முடியும்? வாழ்க்கை ஒரு புதிர். சிக்கலான பல இழைகள் கூடிப் பின்னித் தாறுமாருகக் குலைந்து கிடக்கிற ஒரு புதிர். அதை முழுவதும் அடி முடி கண்டுவிடும்படிப் பிரித்துவிட முடியாது. வாழ்வை உணர்ந்ததாகப் பெருமை கொள்கிறவர்கள் யானையைப் பார்த்து மகிழ்ந்த குருடர்கள் மாதிரிதான்.

—நையாண்டி பாரதி (குஞ்சாலாடு)

காக்கை

சுகி

நான் முன்னுக்கு வராததைப் பற்றி நண்பர்கள் (காக்காய் பிடிப்பவர்கள்) பலர் என்னிடம் குறைபட்டுக் கொள்வார்கள். அதற்குக் காரணம் காக மன்று. காக்காய்.

கறுப்பும் அவலட்சணமும் சேர்ந்த இந்த ஜந்துக்கள் கழுத்தில் மட்டும் சாம்பல் வர்ணம் இருக்கிறது. இது, அவலட்சணத்திற்கு அவலட்சணம் செய்வது போல ஆகும். காகத்தின் உருவமோ, பெரிதும் அல்லாத சிறிதும் அல்லாத அவலட்சணப் பிம்பம். குருவியைப் போல் சிறிதாக இருந்தாலும், பருந்தைப் போல் பெரிதாக இருந்தாலும் பறக்கிறதிலே அழகும் வேகமும் காண முடியும். இத்தனை விகாரங்களும் நிறைந்த இதனிடம் நம்முடைய தலை விதியும், விருந்தாளிகளும் சிக்கிக்கொள்கிறார்கள்.

எதிரே வந்தால்—வலமாக வந்தால்—அதிர்ஷ்டமாம். அட, காக்கையே! உன் குரலில்தான் என்ன கோரம்! காக்கை 'கரைகிற' தாம். இதற்கு மரபுச் சொல் வேறு கேடு. விருந்தாளிகள் ரயிலோ மோட்டாரோ ஏறியதும், எப்படித்தான் ஞானோதயம் ஏற்பட்டுப் பந்துக்கள் வீட்டின் கூரையில் உட்காருமோ, இது காகாசுரனுக்குத்தான் வெளிச்சம். இது, விருந்தாளிகள் வரவை அறிவிக்கிறதோடு எம லோகத்தில் பாபிகள் கண்ணைப் பிடுங்குமாம். எமனுடைய கையாளாம்,—கண்ணைப் பிடுங்க. ஒரு வேளை காக்காய் பிடிப்பவர்கள் கண்ணாக இருக்கலாமோ?

நான் சிறு வயதில் இந்தக் காக்கையைப் பாட புத்தகத்தில் பார்த்தேன். அப்போது எனக்கு நிரம்ப ஆச்சரியம். எவனோ காக்காயைப் பிடித்து விட்டானே என்று பெருமிதம். வயசு ஆக ஆக, காக்காய் பிடிக்க முடியாது, அது ஒரு லளித கலை என்று சொன்னார்கள். புஸ்தகக் காக்காய் வேறு; வாழ்க்கைக் காக்காய்கள் வேறு. காக்காய்கள் என் வாழ்வையும் அரிசியையும் (விருந்தினரை வரவழைத்துக்) கெடுத்தனவோ என்னவோ, காக்காய் பிடிப்பவர்கள் மட்டும் என் வாழ்வையும் அரிசியையும் கெடுக்கிறார்கள்.

எனக்குச் சம்பளம் மேலே உயரவொட்டாமல், சந்தைக் கடை வடையைக் கொத்திய காக்கை போலக் காக்காய் பிடிக்கிறவன் கொத்திக் கொள்ளுகிறான். அரைக் கஜம் துணியை எனக்கு முன்னதாக இன்னொருவன் அழுத்திவிடுகிறான். நல்ல அரிசி எனக்குக் கிடைக்காதபடிச் செய்கிறது காக்காய் அன்று; காக்காய் பிடிக்கிற பயல்கள். பஞ்ச தந்திரம் முதலான கதைகளில் காக்கையை வஞ்சனையின் உருவமாக விளக்கிக் காட்டியிருக்கிறார்கள். கதைகள் வாழ்க்கையின் பிரதி பிம்பம் என்பதைக் காக்காய்க் கதைகள் மூலமாகத்தான் அறிகிறேன்.

காகம், இலக்கியப் பலகணியின் கதவு, தாழ்ப்பாள், கொண்டி எல்லாம். காக்காயிடம் வஞ்சனை மட்டுமில்லை; வேறு நல்ல குணங்களும் இருக்

"வயசு ஆக ஆக, காக்காய் பிடிக்க முடியாது, அது ஒரு லளித கலை என்று சொன்னார்கள். புஸ்தகக் காக்காய் வேறு; வாழ்க்கைக் காக்காய்கள் வேறு."

கின்றன. அவை 'உண்டு காட்டிகள்.' ஆகாரத்தில் விஷமோ, குற்றமோ இருக்கிறதா எனப் பார்க்க நாம் உண்ணுமுன் அவற்றுக்குச் சமர்ப்பித்து விடுகிறோம். இது நம்முடைய வஞ்சனையிலிருந்து பிறந்த பழக்கம். காகத்தின் மீது பிறந்த இரக்கம் அல்ல. நமது உணவைக் காகம் உண்ட பின்பு நாம் உண்டால், சாதத்தில் விஷமில்லை யென அறிகிறோம். அது உண்ண மறுத்தாலோ, இறந்தாலோ நாம் சாப்பிடாது இருந்து விடலாம்.

காக்கை, நம் போன்ற ஏழைகளுக்கு 'உண்டு காட்டிகள்.' ராஜாக்களுக்கு மனிதக் காக்கைகள் உண்டு. ராஜாவோடு சமபந்தியில் உட்காருவார்கள். அவர்களை 'உண்டு காட்டிகள்' என்பது மரபு. 'உண்டு காட்டி' கள் உண்ட பின்பு, ராஜா உண்பாராம். ராஜாவுக்குத் தன் சாப்பாட்டில் அவ்வளவு நம்பிக்கை! யாரேனும் விஷமிடத் துணிந்தால், 'உண்டு காட்டி'கள் சாவார்கள் அல்லவா? நமக்கெல்லாம் 'உண்டு காட்டி'கள் காக்கைகள் தான். ஆதியில், 'உண்டு காட்டி' கள் ராஜாவைக் காக்காய் பிடித்தார்கள். அன்று ஏற்பட்ட பழக்கம் இன்றும் நிலவுகிறது.

எனக்கு வீட்டிலும் காக்காய் பிடிக்கத் தெரியாது, வெளியிலும் தெரியாது. வீட்டில், காக்காய் (என்னையும், காகங்களையும்) பிடிக்கிறவள் காந்திமதி. ஆனால், ரேஷன் வந்த பின்பு காக்காய்களுக்குச் சாதம் சமர்ப்பணம் செய்வதை விட்டு விட்டாள்.

காரணம், காக்காய்க்குச் சமர்ப்பணம் பண்ணுகிற அளவுக்குத்தானே ரேஷன் அரிசியில் சாதம் இருக்கிறது என்கிறாள். காகம் சாகிறதுக்குப் பதில் நாங்கள் (சாதம் இல்லாமலே) சாக நேரிடுவதால், அந்த வழக்கத்திற்கு முற்றுப் புள்ளி வைத்தாள். மேலும், ரேஷன் அரிசி நம்மைப் போல அவைகளுக்கு ஒத்துக் கொள்ளுமோ என்னவோ? ஒரு சமயம் கோதுமையும் அரிசியும் கலந்து சமைத்தாள் காந்திமதி. 'கா...கா...கா...' என்றாள். கா...கா...கா வந்தது. அந்தக் காக்கை அரிசிச் சாதத்தை மட்டும் தின்று விட்டுக் கோதுமைச் சாதத்தை அப்படியே விட்டுச் சென்றது. அது ஒரு அன்னக் காக்கை. அன்னத்தைப் போலவே, அரிசியைப் புசித்து விட்டுக் கோதுமையை விட்டுவிட்டது. அடடா, அன்னக் காக்கையே காக்கை!

என் குரலைக் கேட்டாலே காக்கைகள் வருகிற தில்லை. ஆனால், காந்திமதி ஒரு குரல் கொடுத்தால் போதும். ஊர்க் காக்காய்கள் எங்கள் வீட்டு முகட்டில் கூடி விடும். 'கா ... கா ... காகா' என்று ககனமெங்கும் கேட்கும். பின்னர் எதிரொலிகள் எழும். அவளுடைய குரலிலே காக்கைகள் மயங்கி விட்டனவா? அல்லது தம் இனத்தின் குரலெனத் தடுமாறி வருகின்றனவா? காந்திமதி யென்ன, எந்தப் பெண்மணியும் கா...கா என்றால், காக்கைகள் வந்து விடும். ஆண்கள் குரல் என்றால் அப்படி அப்படித் தான். வேப்பம் பழத்தைப் போலவே, பெண் குரல் மீதும் காக்கைகள் அபார மோகம் கொண்டிருக்கின்றன.

எனக்குக் காக்கையை வசீகரிக்கும் குரலும் இல்லை. காக்கையின் சுபாவமும் இல்லை. காக்காய் பிடிப்பவர்கள் என்னதான் செய்தாலும், காக்கையைப் போல் 'தோட்டி' வேலை செய்ய முடியுமா? அது காக்கையிடமுள்ள பெருங் குணம். ஆகாயத்

தோட்டி என்று சிறப்பான பெயர் பெற்ற காக்கையைப் போல் காக்காய் தாசர்களும் ஏதாவது சூத்தம் செய்கிறார்களா? இல்லை.

அதற்கு எதிரிடையாகச் சமூகத்தில் அசங்கம் செய்கிறார்கள். இலக்கியத்தில் போலியை வளர்க்கிறார்கள். நிர்வாகத்தில் ஊழலைப் பெருக்குகிறார்கள். அரசியலில் குட்டைகுழப்புகிறார்கள். இன்னோரன்ன அனந்தம். சுருங்கச் சொன்னால், கறுப்புச் சந்தைக்காரர்கள் இந்தக் காக்காய் பிடிப்பவர்கள். தமது நோக்கையே ஒற்றைக் கண்ணால் பார்ப்பார்கள். நேரடியான பார்வை கிடையாது.

ஆனால், காக்காய் பிடிக்கிறவர்கள், பிடிபடுபவர்களைவிடக் கெட்டிக்காரர்கள் என்ற உண்மையை மறுக்க முடியாது. எட்டாத தண்ணீரை எட்டிக் குடிக்க ஜாடிக்குள்ளே கல்லைத் தூக்கிப் போட்ட காக்கையைப் போல, பிடிபடுகிறவன் தலையில் ஒவ்வொரு கல்லை (முக ஸ்துதியை)ப் போடுவது சகஜம். காரியம் நிறைவேறும்போது பாறாங் கல்லாகப் போடுவார்கள். காகத்திற்குத் தண்ணீர் கிடைத்தது போல், காக்காய் தாசர்கள் காரியம் ஜயமாகும்.

என்னதான் காக்காய் தாசர்கள் கெட்டிக்காரர்களாக இருந்தாலும், குள்ள நரிகளிடம் ஏமாந்து விடலாம் என்பதை "வடை—காகம்—நரி"க் கதை எடுத்துச் சொல்லுகிறது. காக்காய் தாசர்களுடைய முதுகுக்கு மண் காட்டக் கூடிய குள்ள நரிகள் ஒரு சில இருப்பதால்தான் உலகம் இன்றுவரை சுமாராக ஓடிக்கொண் டிருக்கிறது. அல்லாத பட்சம் உலகத்தின் ஓட்டசாட்டமே நின்றிருக்கும்.

பிரம்மாவைவிடப் பிரம்ம சிருஷ்டியில் நான் மனம் லயிக்கிறவன். காகத்தைவிடக் காக்காய் பிடிக்கிறவர்களிடம் என் மனம் லயிக்கிறது. ஏகலைவனைப் போல மானசீகமாக வணங்குகிறேன். அவர்களும் காணிக்கையாக எனது கட்டை விரலை மட்டுமா பறித்துக் கொண்டார்கள்? சுண்டு விரல், பாம்பு விரல், மோதிர விரல், சுட்டு விரல், எல்லாவற்றையும் பிடுங்கி விட்டார்கள்! நான் அப்பாவியாக வாழ்வதில் என்ன ஆச்சரியம்?

✲

"புரிஞ்சுக்கோ, தம்பீ!"

"வியாபார தர்மம்னு என்னப்பா?" என்று கேட்டான் பையன்.

"கடைக்கு ஒருத்தன் சாமான் வாங்க வர்ரான். சாமானை வாங்கிக் கிட்டதும், ஒரு அஞ்சு ரூபா நோட்டை நீட்டிட்டுப் போயிடரான். தர வேண்டியது அஞ்சு ரூபாதான். பணத்தைப் பெட்டியிலே போடப் போறப்போ அது ஒரு அஞ்சு ரூபா நோட்டில்லே, ரெண்டு அஞ்சு ரூபா நோட்டு ஒட்டிக்கிட்டு இருக்கிறதைப் பாத்திடரேன். அப்போ நான் என்ன செய்யணும்? அதைப்பத்தி என் கூட்டாளி யிட்டே சொல்றதா, இல்லையா?... இத்தேப் போல சமயத்திலே சமாளிச்சுக்கிற தந்திரத்தைத் தான் வியாபார தர்மம்னு சொல்றாங்க. என்ன, இப்போ புரிஞ்சுக்கிட்டியா?" என்று விளக்கினார் தந்தை!

பெண்களில் நால்வர்

ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல், ஹாரியட் பீசர் ஸ்டொவ், மேரி க்யூரி, எலியனோரா டூஸ்—இவர்களே நவீன காலத்தின் நான்கு தலை சிறந்த பெண்கள் ஆவர் என்று எமில் லிட்விக் ஒருபோது சொன்னார்.

புழுதி

செந்தாமரை

உருண்டோடும் வண்டியின்பின்
உயர்ந்துமெல்ல மேலெழும்பித்
திரும்பிவந்து விழுந்துமண்ணைத்
தொட்டுமுத்தி மூச்சடங்கும்
புழுதியடா புழுதி! தெருப்
புழுதியடா புழுதி!!

மண்பட்டுத் தூளாகி
மனிதரது காலடியில்
புண்பட்டு-நொந்துமனம்
புலம்பியழு தரற்றுகின்ற
புழுதியடா புழுதி! தெருப்
புழுதியடா புழுதி!!

தாய்மடியில் தலைசாய்க்கத்
தரைநோக்கு தென்றெண்ணிப்
பாய்ந்துவரும் கதிர்க்கரங்கள்
பிடித்திழுத்துச் சுட்டெரிக்கும்
புழுதியடா புழுதி! தெருப்
புழுதியடா புழுதி!!

காற்றெடுத்துச் சுழற்ற,தலை
கறங்குகின்ற வேளையிலே
ஊற்றெடுத்து வருமழையின்
உடல்தீண்டத் தவிதவிக்கும்
புழுதியடா புழுதி! தெருப்
புழுதியடா புழுதி!!

மனிதருயிர் வாழ்வதற்கு
மண்தந்து மனைதந்து
கனிகிழங்கு நெல்தந்து
காய்கறிகள் தந்ததுவும்
புழுதியடா புழுதி! தெருப்
புழுதியடா புழுதி!!

தொண்டியற்றி இயற்றிஉடல்
தேய்ந்திளைக்க வேண்டுமெனப்
பண்டிருந்தே பாடுபடும்
பெரும்பூமி பெற்றெடுத்த
புழுதியடா புழுதி! தெருப்
புழுதியடா புழுதி!!

செத்திறந்த மனிதஉடல்
சேமமுறச் சேர்த்தணைத்து
முத்தமிட்டிங் கதைத்துய்ய
மண்ணாக மாற்றுவிக்கும்
புழுதியடா புழுதி! தெருப்
புழுதியடா புழுதி!!

○

சருமசுகத்திலிருந்து சரும அழகு ஏற்படுகிறது!

ரெக்ஸோனு விறல் சரும ஆரோக்கியத்தைக் காப்பாற்றுங்கள்

உங்கள் சருமம் உண்மையாய் எப்பொழுதும் அழகுடன் இருப்பதற்கு முன் அது ஆரோக்யமுடையதாய் இருக்கவேண்டும். அதை ஆரோக்யமுடன் வைத்துக்கொள்ள வேண்டும்; இல்லையெனின் அதன் அழகு வெகு விரைவில் மறைந்துவிடும். சருமத்தைக் காப்பாற்றி, அதன் அழகை விருத்தியாக்கவே ரெக்ஸோனு வழங்கப்பட்டு வருகிறது. அழகுள்ள, பசுமைவாய்ந்த விரைவில் நுரையைத் தரும் இந்த டாய்லட் சோப்பில் சுகமளித்துச் சரும நோய்களைக் குணப்படுத்தும் கேடில் என்ற கிருமி நாசினியாகிய மருந்து சேர்ந்திருக்கிறது. விரைவிலுண்டாகும் ரெக்ஸோனுவின் சிறந்த நுரை சருமத்தின் ஒவ்வொரு அடிபாகத்திலும் இந்த ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தைக் கொண்டுபோய்ச்சேர்த்து நன்மையைக்கொடுக்கிறது. அதே சமயத்தில் அதன் நுரை சருமத்தின்மீது படிந்துள்ள அழுக்கையும், வியர்வையால் ஏற்படும் மலினங்களையும் சுத்திசெய்கிறது. சருமம் தூய்மையடைகிறது; அதற்குச் சுகத்தைக் கொடுக்கிறது; அதை மேன்மேலும் பளபளப்பாக்கி, காப்பாற்றுகிறது; அதை நன்ருய்ப் போஷிக்கத் துணை செய்கிறது. சரும சுகத்தின் பொருட்டு ஒவ்வொரு ஸ்நானத்திற்கும் ரெக்ஸோனுவையே உபயோகியுங்கள்.

★ரெக்ஸோனுவிலுள்ள கேடில் கிருமியையொழிக்கும் ஒப்பற்ற மருந்து. சரும ஆரோக்கியத்திற்கு மிகவும் சக்தி வாய்ந்ததும், குணமாக்கிப் போஷிக்கும் தன்மை வாய்ந்த தைலங்களும் சேர்ந்தது.

ரெக்ஸோனு ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள். வெட்டுக் காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சிரங்குகள், கடிகள், மச்ச மருக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனு ஆயின்ட்மென்டை உபயோகியுங்கள்.

R.P. 37-50 TM

REXONA PROPRIETARY LIMITED

உங்கள் விருப்பத்திற்கேற்ற
நேர்த்தியான பர்னிச்சர்களுக்கு

ரென் கம்பெனியே



ரென் பென்னட் அண்ட் கம்பெனி
(இந்தியா) லிமிடெட்

பர்னிச்சர்கள் தயாரிப்பவர்கள்

34, மவுண்ட் ரோடு - சென்னை

புதிய குடியரசு

●

ஆர். ராமநாதன்

1789-ம் வருஷம் பிரான்ஸ் புரட்சி சகாப்தத்திற்குத் துவஜா ரோகணம் செய்தது. அன்று, தீரம் மிகுந்த பிரெஞ்சு மக்கள் உளுத்துப்போன பிரபுத்வ சகாப்தத்திற்கு விடை கொடுத்துவிட்டு, ஜனநாயகச் சகாப்தத்தில் பிரவேசித்தனர். அன்றிலிருந்து இன்று வரையில் உண்மையான ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிப்பதற்காகப் பிரான்ஸ் இடைவிடாது போராடி வருகிறது. 1789-ம் வருஷப் புரட்சிக்குப் பிறகு, முதல் பிரெஞ்சுக் குடியரசு பிறந்தது. அந்தக் குடியரசில் பிரெஞ்சு முதலாளிகள் ஆதிக்கம் செலுத்தினர். ஆனால், மன்னனும், பிரபுக்களும், தோல்வியை ஒப்புக் கொள்ளவில்லை. அவர்கள் 1830-ஆம் வருடம் ஜூலை மாதம் அதிகாரத்தைக் கைப்பற்றினர். மீண்டும் பிரான்சில் முடியாட்சி ஏற்பட்டது.

முடியாட்சிக்கு நிரந்தர விடை கொடுக்க முடிவு செய்த பிரெஞ்சு மக்கள் 1848-ம் வருஷம் மீண்டும் புரட்சி செய்து அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதன் பிறகு இரண்டாவது குடியரசு பிறந்தது. இதை உண்மையான குடியரசு என்று அழைக்க முடியாது. ஏனெனில், பிற்போக்குச் சக்திகளின் பிரதிநிதி லூயி போனபார்ட் அதிகாரத்தைக் கைப்பற்றினர். பெயர் அளவில் மாத்திரம்தான் பிரான்ஸ் குடியரசு நாடாக விளங்கிற்று. உண்மையில், அன்று லூயி போனபார்ட் சர்வாதிகாரியாகவே விளங்கினர்.

சுயேச்சையை விரும்பின பிரெஞ்சு மக்கள் 1870-ம் வருஷம் மீண்டும் புரட்சி செய்தனர். அந்தப் புரட்சிக்குப் பிறகும் முதலாளிகள்தான் அதிகாரத்தைக் கைப்பற்றினர். அதை எதிர்த்துப் பாரிஸ் தொழிலாளர்கள் 1871-ம் வருஷம் மார்ச்சு மாதம் 18-ம் தேதி புரட்சி செய்தனர். மகிமை பொருந்தின பாரிஸ் கம்யூன் பிறந்தது. ஆனால், அது 72 நாட்கள்தான் நிலைத்திருந்தது. பாரிஸ் கம்யூன் ரத்த வெள்ளத்தில் அமிழ்த்தப்பட்ட பிறகு பிரான்ஸ் மீண்டும் பழைய வழியில் சென்றது. மூன்றாவது குடியரசு பிறந்தது. 1940-ம் வருஷம் ஜூன் மாதம் 15-ம் தேதி பிரெஞ்சு ஆளும் வர்க்கம் பிரான்ஸை ஹிட்லருக்குப் பாத காணிக்கையாகச் செலுத்தினதும், மூன்றாவது குடியரசு சரிந்து விழுந்தது.

பிரான்ஸ் விடுதலை அடைந்த பிறகு, புதிய பிரான்சின் அரசியல் திட்டத்தை வகுக்க முயற்சிகள் நடந்தன. சரித்திரச் சக்கரத்தைப் பின்னுக்குத் திருப்ப விரும்பாத பிரெஞ்சு முற்போக்காளர்கள்—கம்யூனிஸ்டுகள், இடதுசாரி சோஷலிஸ்டுகள் முதலியோர்—முற்போக்கான அரசியல் திட்டத்தை வகுக்க முயன்றனர்; தெகால் தலைமையில் அணிவகுத்து நிற்கும் பிரெஞ்சு முதலாளிகளும், நிலச்சுவான்தார்களும் பிரான்ஸைப் பழமைக்கு இழுத்துச் செல்ல முயன்றனர். உண்மையான ஜனநாயகக் குடியரசை ஸ்தாபிக்க விரும்பும் முற்போக்காளர்களுக்கும், உளுத்துப் போன முதலாளித்துவ ஆட்

யுத்தத்தினல் இருந்த இடம் தெரியாமல் போன வல்லரசுகளுள் பிரான்சும் ஒன்று. அதனுடைய சமீபக் காலத்திய சரித்திரம் ரசமானது.

சியை ஸ்தாபிக்க விரும்பும் பிற்போக்காளர்களுக்கும் நடக்கும் போர், பிரான்சின் தலை விதியை நிர்ணயிக்கும் போராகும்.

1945-ம் வருஷம் மே மாதம் புதிய அரசியல் திட்டம் மக்கள் முன் சமர்ப்பிக்கப்பட்டது, அங்கீகாரத்திற்காக. அது மிக முற்போக்கான அரசியல் சாஸனம். தலைவருக்கும், பிரதமருக்கும் இருந்த பரிபூரண அதிகாரத்தை அந்த அரசியல் சாஸனம் ரத்துச் செய்தது. இரண்டு சபைகளுக்குப் பதிலாக ஒரு சபைதான் இருக்க வேண்டும் என்றது அந்தச் சாஸனம். ஜனப் பிரதிநிதிகளின் சபைக்குப் பரிபூரண அதிகாரம் வழங்கப் பட்டது. மந்திரி சபை ஜனப் பிரதிநிதிகள் சபைக்குக் கட்டுப் பட்டு நடக்க வேண்டும் என்றும் அந்தச் சாஸனம் கூறிற்று. தெகாலும், ஏனையோரும் அந்தச் சாஸனத்தைப் பலமாக எதிர்த்தனர். பிரசார யந்திரம் வேகமாகச் சுழன்றது. மே சாஸனம் ஜனங்களால் நிராகரிக்கப் பட்டது.

எனவே, பிரெஞ்சு அரசியல் நிர்ணய சபை மீண்டும் ஒரு அரசியல் திட்டம் வகுத்தது. இந்தத் திட்டத்திற்குச் சாதகமாக 440 அங்கத்தினர்களும், பாதகமாக 106 அங்கத்தினர்களும் ஓட் செய்தனர். வலது சாரிகள் அத்தனை பேரும் இந்த அரசியல் திட்டத்தை எதிர்த்தனர்.

இந்தத் திட்டம் பரஸ்பரம் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் வகுக்கப்பட்டது என்பதை மூன்று கட்சித் தலைவர்களும் (கம்யூனிஸ்டுகள், இடது சாரி சோஷலிஸ்டுகள், எம். ஆர். பி.) பகிரங்கமாக ஒப்புக்கொண்டனர். இதைத் திருத்த விரைவில் முயலுவதாகவும் அவர்கள் வாக்களித்தனர்.

புதிய திட்டம் தேசிய அசெம்பிளிக்குத்தான் பரிபூரண அதிகாரம் இருக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுகிறது. தலைவருக்கும், நிர்வாகிகளுக்கும் அதிக உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்றும், தலைவர் தேசிய அசெம்பிளிக்குக் கட்டுப் பட்டவராக இருக்கக் கூடாது என்றும், அவருக்குச் சர்வாதிகாரம் அளிக்கப்பட வேண்டும் என்றும் தெகால் கூறின யோசனையை புதிய திட்டம் நிராகரித்தது.

இந்தத் திட்டம் அங்கீகாரத்திற்காக அக்டோபர் மாதம் 13-ம் தேதி ஜனங்கள் முன் சமர்ப்பிக்கப் பட்டது. ஜனங்கள் இந்தத் திட்டத்தை அங்கீகரித்தனர்; தெகாலும், அவரைச் சேர்ந்தவர்களும் படு தோல்வி அடைந்தனர்.

இந்த வெற்றி பிரான்சின் அரசியல் நிலையை அபிவிருத்தி செய்யும். பிற்போக்குச் சக்திகளுக்கு எதிராக உருவெடுத்த முற்போக்காளர்களின் ஐக்கிய முன்னணி விரிந்து, வளரும். இத்தகைய ஐக்கிய முன்னணியால்தான், இன்பம் கொஞ்சும் புதிய சாம்ராஜ்யத்திற்குப்பிரெஞ்சு மக்களை அழைத்துச் செல்ல முடியும். பிரான்ஸ் ஒரு முட்டுக் கட்டையைத் தாண்டிவிட்டது. ஆனால், இன்னும் பல முட்டுக் கட்டைகள் அபிவிருத்திப் பிரயாணத்திற்குக் குறுக்கே நிற்கின்றன. இவைகளையும் புதிய குடியரசு தாண்ட வேண்டும். முற்போக்குச் சக்திகளைக் கொண்ட ஐக்கிய முன்னணியின் மூலம் தான் இந்த வேலையைச் செய்ய முடியும்.

சந்திர கிரகணம்

●

"வங்காளி"

இன்றைக்குத் தமிழ் நாட்டிலே எழுத்தாளர்களின் நிலை, பத்து வருஷங்களுக்கு முன் இருந்ததை விடக் கொஞ்சம் முன்னேற்றம் அடைந் திருக்கிறது என்றே சொல்ல வேண்டும். எனினும், பிறர் கண்டு பொறாமைப்படக் கூடிய விதம் உயர்ந்துவிடவில்லை. அவ்விதம் இருக்க, எழுத்தாளர் களுக் குள்ளேயே போட்டியும் பொறாமையும் ஏற்படுவது விரும் பத்தக்க தல்ல.

தாம் எழுதிய கதைகளைப் பற்றி, "எல்லாம், பச்சென்று குளிர்ந்த கிராமத்தில் குடிலின் நிழலில் பாவு போட்டுச் சொந் தத் தறியில் உருவானவையே. பட்டணத்துச் சந்தடியில், புகை கப்பிய ஆலைகளில் அவசரமாக வெளிவந்தவை அல்ல. பொரு ளுக்கு ஏற்ற மதிப்பைத் தந்து அன்பர்கள் என் கதைகளை வர வேற்பர் என நம்புகிறேன்" என்று நண்பர் ஸ்ரீ த. நா. குமார ஸ்வாமி எழுதும்போது, அவருக் குக் கிட்டியிருக்கும் சௌகரி யங்களை அடையப் பெறாத எழுத்தாளர்களையும், அவர்களு டைய கதைகளையும் ஏளனம் செய்வதே போலச் சுட்டிக் காட்டுவது ரசமாக இல்லை.

இந்தப் புத்தகத்தில் அடங்கி யுள்ள இருபத்தொரு கதைகளை யும் அவர் தம் சொந்தத் தறியில் உருவானவை என்று சொல்லு கிறார். ஆனால், புத்தகத்தின் தலைப்பாக விளங்கும் முதல் கதை யான சந்திர கிரகணமே அப்ப டிப்பட்ட தன்று என்பதை நாம் நிச்சயமாகக் கூறலாம். இது, முதல் முதலாக, ஆனந்த விகடன் தீபாவளி மலரில் வெளிவந்ததாக ஞாபகம். வங்காளியில், ஸ்ரீ சரதிந்து பானர்ஜி எழுதிய ப்ராக்ஜ்யோதிஷ் அல்லது ஜ்யோதி ஷத்துக்கு முன்பு என்று [Prag-jyotish or Before Astrology by Saradindu Banerjee என்று ஆங் கிலத்தில் வெளிவந்திருக்கிறது. —ஆசிரியர், சக்தி.] கதையைத் தான் அவர் தமிழில் கொடுத் திருக்கிறார். ஜப்பான் தேசத்து மில்களில் தயாரான முரட்டுத் துணியைக் கொணர்ந்து, கடை யில் வைத்து, அசல் கதர் என்று வியாபாரம் செய்வதற்கும் இதற்கும் என்ன வித்தியாசம்! அதுவும், தமிழ் நாட்டில் சிலர் செய்துவரும் இலக்கியத் திருட்டைப் பலமாகக் கண்டித்து வரும் ஒரு கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீ குமாரஸ்வாமியே இவ்விதம் செய்திருப்பது மிகவும் வருந்தத் தக்கது.

மூலக் கதையிலே, ஆசிரியர், மிகப் பழங் காலத்திலே ஆரியர் கள் பரதக் கண்டத்துள் புகுந்து ராஜ்யங்களை ஸ்தாபிக்க முயன்ற காலத்தில், புராதனக் குடி களுடன் நடத்திய போரில் கைப் பற்றிய பெண்ணையும் அவளிடம் மையல் கொண்ட இருவரையும், ஒருவர் பாஷை மற்றவருக்குத் தெரியாமல் அவர்கள் பட்ட அவதிகளையும் வெகு அழகாக அமைத்து எழுதி யிருக்கிறார். போர் புரிந்து தன்னைக் கைப் பற்றியவனே தனக்குப் புருஷன் என்று பெண்கள் கருதி வந்த சமூகத்தைச் சேர்ந்தவள் அப்

சந்திர கிரகணம்: ஆசிரியர்: த. நா. குமாரஸ்வாமி. வெளியீட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை. கிரௌன் 1X8. 214 பக்கம். விலை ரூ. 2-8-0.

பெண். அந்த அடிப்படையிலே எழுந்தது கதை.

அதே கதையைத் தமிழாக்க முயன்ற ஸ்ரீ குமாரஸ்வாமி, கதையிலே பாண்டிய, பல்லவர் பெயர்களைப் புகுத்திக் கதையை அசம்பாவிதமாகச் செய்துவிட்டார். கதை நிகழ்ந்ததாகக் கூறப்படும் காலத்திலேவான நூலும், ஜோதிஷமும் உயர்ந்த நிலையில் விளங்கின வென்பது சரித்திரப் பிரசித்தம். அதே போல, அதற்கு முன்னால், இருநூறு ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழர்கள் வெளி நாடுகள் பலவற்றுடன் வியாபாரம் செய்து வந்தனர் என்பதையும் யாவரும் அறிவர். உயர்ந்த மூலக் கதையைத் தமிழ்ப் படுத்தும்போது, பெயர்களை மாற்றியதால், அது சுவையை இழந்து விட்டது.

அதற்கு அடுத்த கதையான 'தேவ தாசி,' மதுரையை ஆண்ட ரகுநாத நாயகன் காலத்துக் கோயில் பணிப் பெண் ஒருத்தியைப் பற்றியது: ரகுநாத நாயகன் என்ற பெயர் கொண்ட அரசன் எவனும் மதுரையை ஆண்டதாகத் தெரியவில்லை. அது போகட்டும். கதையைப் பார்ப்போம்: அவள் மீது மையல் கொண்ட கோயில் குருக்கள் ஒருவன் அவளைக் கெடுக்க முற்படுகிறான். அதை யறிந்த அரசன் அவளை மீட்கிறான். அப்போது, குருக்கள், 'கண்களில் தீப் பொறி பறக்க அரசனை நோக்கி, "அரசே! நீர் இவளிடம் இவ்வளவு தயை காட்டுவது சரியே. ஆனால் எனக்கு உரிய பொருளை உங்களால் கவர முடியாது. இந்தச் சாந்தியை நான் கெடுக்காவிட்டால் என் பெயர் சதாசிவக் குருக்கள் அல்ல" என்று உறுமினான்.'

இதைப் படிக்கும் போது நமக்கு அரசன் இவ்வளவு பேடியாக இருப்பானா என்ற சந்தேகம் உண்டாகிறது. அதுவும், தீய காரியம் செய்யப் புகும் ஒரு குருக்களிடம் இவ்வளவு தைரியத்தை யாரும், என்றைக்கும் காண முடியாது.

யுத்த காலத் தேவையை முன்னிட்டு, வடக்கே, பஞ்சாபிலிருந்து புற்றீசல் போலக் கிளம்பிய மட்ட ரகமான மூன்றாந்தரக் கதை வெளியீடுகள் ஒன்றிலே இதே சம்பவம் காணப்படுகிறது. ஆனால், அங்கே சம்பவத்தைத் திறமையாகக் கையாண்டிருக்கிறார் அதை எழுதியவர். அரசனுக்குப் பதிலாகத் தன்னை யார் என்று வெளிப்படுத்திக்கொள்ள முடியாத ரகசியப் போலீஸ் அதிகாரி ஒருவன் வருகிறான். அவனுக்கு ஏற்பட்ட கோபத்தைக் கூட நாம் இங்கே அரசனிடம் காணவில்லை.

அடடா, — இப்படியே கூறிக்கொண்டு போக விரும்பவில்லை. குளிர்ந்த மரத்து நிழலிலே, ஆற அமர நெய்த புடைவைகளிலும், ஊன்றிப் பார்த்தால், இழைகள் சிக்குண்டும், கட்டடம் கல கலத்தும் இருப்பதைக் காணலாம்.

இந்த நூலில் உள்ள இருபத்தொரு கதைகளில், ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். படிக்கும்போது, ஏதோ ஓரிரண்டு இடங்களைத் தவிர, சலிப்புத் தட்டவில்லை. ஓட்டம் விறு விறுப்பாக இருக்கிறது. சிந்தனையை ஆழ்ந்து கிளறுவதாக இல்லாவிட்டாலும், பொழுது போக்காகவாவது படிக்க வேண்டிய புத்தகமே.

✲

ஒரு கடிதம்

●

நாகர்கோவில் பத்மநாபன்

மூன்று வருட காலம் மௌனமாயிருந்துவிட்டு, இன்று திடீரென நான் உனக்குக் கடிதமெழுதியிருப்பதைக் கண்டதும், உனக்கு ஆச்சரியமேற்படலாம்.

நண்பா! நீ என் உயிர்த் தோழன்; தாயினும் பெரிய அன்பை இந்தத் தாரணியில் உன்னிடமே நான் கண்டிருக்கிறேன். எவ்வளவோ துன்பங்கள், கவலைகள், மனச் சோர்வுகள், என்னை வாட்டிக்கொண்டிருந்த காலங்களிலெல்லாம் நீ எத்தகைய ஆறுதல் மொழி கூறி என் மனப் புண்ணை ஆற்றியிருக்கிறாய்?...

"தோழா! ஏன் வீணாகக் கவலைப்படுகிறாய்? தேச நலனுக்காகப் பாடுபடுபவர்கள் தங்கள் நலனை மறந்துவிட வேண்டும். நினைக்க முடியாத சங்கடங்களில் சிக்குண்டு தவிக்க நேரிடினும் மன வுறுதி தளரக்கூடாது. நாம் செய்யும் தேச சேவை பிறருடைய பாராட்டு மொழிகளுக்காகவும், புகழுரைகளுக்காகவும் செய்யக் கூடியதாய் இருக்கலாகாது. தேச சேவை யென்பது ஒரு புனிதமான தொழில்; சுயநல மின்றி உழைப்பவனுக்கே அதன் புனிதத் தன்மை தென்படும். அவனை எந்தக் கவலைகளும் அணுகா. எல்லோரும் சுகமாக வாழ வேண்டும் என்ற ஒரே கொள்கையில் அவன் பிடிவாதமாக நிற்பதால், பெரிய மகாத்மாக்களின் மன நிலை அவனுக்கும் ஏற்படுகிறது. இதை நீ நம்பு; மன வுறுதி கொள்" என்று, நான் சிறையிலே வாடிக்கொண்டிருந்த சமயத்தில், நீ எழுதிய கடிதம் இன்னும் என்னிடமே இருக்கிறது. ஆனால்... அவற்றைச் சிறிதும் மதியாதவன் போலல்லவோ நான் இன்று நடக்கிறேன்? நானா தேசத் தொண்டன்? நானா தியாகி?

காலேஜில் படிக்க வந்தவுடன் தான் நான் உன்னை முதன் முதலாகப் பார்த்தேன். வெண்மையான கதராடை, அசைக்க முடியாத உறுதியைக் காட்டும் சாந்தமான முகம்—இவைகளெல்லாம் கொண்ட உன்னைப் பார்த்தவுடனேயே எனக்கு உன்மீது ஓர் அன்பு பிறந்துவிட்டது. காலேஜில் நடைபெறும் கூட்டங்களில், தேச பக்தி நிரம்பிய உன் உணர்ச்சி ஊட்டும் பிரசங்கங்களைக் கேட்ட பிறகு என் மனம் உன்னிடமே ஐக்கியமாகிவிட்டது. "தேசம் அடிமையாயிருக்கிறது. அதை நாம் தவிர்க்க வேண்டும்" என்று நீ அடிக்கடி கூறும் வார்த்தை என் நெஞ்சில் ஆழமாகப் பதிந்துவிட்டது. இளம் ரத்தம் ஓடும் வாலிப வயதல்லவா? சீறி எழும் சிங்கம் போல் நானும் தேச சேவகனாகப் புறப்பட்டேன். அன்றுதான் நீ என்னிடம் பேசினாய். "சகோதரா! தேச சேவை என்பது ஆத்திரத்தில் செய்யப்படுவதல்ல. நிதானமாக ஆலோசித்து முடிவுக்கு வர வேண்டிய ஒரு பெரிய காரியம்" என்று, என் தோள் மேல் கை போட்டுக்கொண்டு நீ கூறிய காட்சி இன்னும் என்

தேச சேவையில் தீவிரமாக ஈடுபட்ட நண்பர், நிலைமை பொறுக்க முடியாததாக ஆன பிறகு,..."கத்தி தீட்டிக்கொண்டிருக்கிறேன், நண்பா, கத்தி தீட்டிக்கொண்டிருக்கிறேன்" என்று தனது பழைய சகாவுக்கு எழுதுவது ஏன்?

னுள்ளத்தை விட்டு மறைய வில்லை. அன்று முதல் நாமிருவரும் நண்பர்களாகிவிட்டோம். நீ உயர்ந்த ஜாதியில் பிறந்தவன்—பிராமணன்; நான் கீழ் ஜாதியில் பிறந்தவன்—நாவிதன். ஆயினும், எந்தகைய நேச பாவத்துடன் நாம் பழகினோம்? உடன் பிறந்த சகோதரர்களிடம்கூட அந்த அன்பைக் காண முடியுமா?

என் ஏழைமை நிலை குறித்து நீ கண் கலங்குவாய். "சகோதரா, உனக்கும் தேச சேவைக்கும் வெகு தூரம். வயதடைந்த பெற்றோர்கள் மிகவும் கஷ்டப்பட்டு உன்னைப் படிக்க வைக்கிறார்கள். 'நாளொரு காலத்தில் நம் மகன் நல்ல நிலைமையில் வந்து நம்மைக் காப்பாற்றுவான்' என்று பரிபூரணமாக நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதுதான் உன் முதல் கடமை...என் பெற்றோர்களைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. அவர்களும் தேச சேவகர்கள். சிறையில் கிடப்பவர்கள். ஆனால்...உன் நிலை?...நண்பா! நான் சொல்வதை நன்றாக ஆலோசனை செய்து பார்!'' என்று பெரிய அறிவாளிகள்போல் நீ அன்று கூறினாய். "முதலில் தேசம்; பிறகுதான் குடும்பம்'' என நான் பிடிவாதமாகப் பதிலளித்தேன்... நண்பா!...இன்று உன் வார்த்தையல்லவா உண்மையாகி விட்டது? தேசமும்... சேவையும்...எங்கே போய் விட்டன?...

அன்று நாம் காலேஜில் படிக்கும்போதுதான் மகாத்மா காந்தியின் தலைமையிலே உப்புச் சத்தியாக்கிரகம் ஆரம்பமாயிற்று. பாரத நாடே கொந்தளித்துக் கொண்டிருந்த காலம் அது. அன்று நீயும் நானும் போராட்டத் தீயில் குதித்தோம். போலீஸ் லத்தி அடிகளுக்கு மண்டையைக் காட்டி, இரத்த வெள்ளத்தில் மிதந்த தேசத் தொண்டர்களின் மத்தியிலே நாமும் "ஜே" கோஷமிட்டோம். கைது செய்யப்பட்டு, உனக்கு இரண்டு வருடமும் எனக்கு மூன்று வருடமும் சிறைவாசத் தண்டனை கிடைத்தது.

ஒரு வருடம் சிறையிலிருந்ததுமே என் மனம் கசப்படைய ஆரம்பித்துவிட்டது. "என்ன தேச சேவை!'' என்ற அலுப்புகூடத் தோன்ற ஆரம்பித்தது. அந்தச் சமயத்தில்தான் என் தாய் எழுதிய கடிதமும் வந்து சேர்ந்தது. "பெற்ற வயிற்றில் பாலை வார்ப்பாய் என்று எண்ணினேன். தள்ளாத வயதில் எங்களுக்கு உதவி செய்யவே பிறந்திருக்கிறாய் என்று ஆசைப்பட்டுக்கொண்டிருந்தேன்...மகனே...இதுவா நீ செய்யும் உதவி? உன்னை ஜெயிலில் அடைத்து விட்டார்கள் என்று கேட்டதும் என் உள்ளம் பதறி விட்டதடா! எங்கள் உடலைக் கரைத்து, உன் உடலை வளர்த்து, உன்னை மனிதனாக்கியது ஜெயிலில் கிடந்து வாடுவதற்காகவா?...என்னால் அதைப் பொறுக்கவே முடியவில்லையே! ...உன் தகப்பனாருக்கு இரண்டு கண்களும் தெரியவில்லை...இனிக் கத்தி பிடித்து வேலை செய்ய அவரால் முடியுமா? மகனே... எழுதக் கை நடுங்குகிறது...உன் கிழட்டுப் பெற்றோர்களாகிய நாங்கள் இந்த ஊரில் ஒவ்வொரு வீடாய், பிச்சையெடுத்து வயிறு வளர்க்கிறோம்...'' என்று எழுதியிருந்தாள். பெற்ற வயிற்றில் அக்கினி வளர்த்த என்னை அந்தக் கடிதம் சாட்டையால் அடிப்பது போல் வாட்டியது. கையில் சட்டியுடன், கண் தெரியாத ஒரு கிழவனும், அங்கம் மெலிந்த

கிழவியும் பிச்சை யெடுப்பது போன்ற காட்சி என் கண் முன்னே தோன்றியது. பத்து மாதம் சுமந்து பெற்றவளின் "மகனே!" என்ற பாசக் குரல் என்னை வதைத்தது. பரம தரித்திரத்திலும் என்னைப் படிக்க வைக்க அவர்கள் பட்ட பாட்டை எண்ணியபோது என் இதயம் அலறிற்று...மன்னிப்பு எழுதிக் கொடுத்துவிட்டு ஊருக்குப் போய் விடுவோம் என்ற முடிவுக்கு வந்தேன். ஆனால்...தேசமும்...தடியடி பட்டு, ரத்தம் சொட்டத் தேச சேவை செய்த தொண்டர்களின் நினைவும் "போகாதே!" என்று என்னைத் தடுத்தன; "உன் தாயின் துன்பம் பெரிதல்ல. கோடிக் கணக்கான தாய்மார்களின் தாயான பாரத அன்னையின் துன்பமே பெரிது; அதையே நீ அழிக்க வேண்டும்" என்று என் செவியில் ஓலமிட்டன ... ஆயினும் பெற்றவள் பாசம் பிறந்த நாட்டுப் பாசத்தையும் வென்று விட்டது...மன்னிப்பு எழுதிக் கொடுத்து விடுதலை பெற்று ஊர் வந்து சேர்ந்தேன் ... பெற்றவர்களைக் க்ண்டேன். "மகனே!" என்று என்னைக் கட்டிக் கொண்டு கண்ணீர் விட்டனர்...

நண்பா...அயர்லாந்தின் விடுதலைக்காகப் போராடிய மைக்கேல் காலின்ஸையும், டிவாலராவையும் போல் நாமிருவரும் என்று ஒரு காலத்தில் எண்ணியிருந்தேன்; ரஷ்யாவின் சுதந்தரத்துக்காகப் பாடுபட்ட லெனினையும் ஸ்டாலினையும் நமக்கு உதாரணமாக எண்ணியிருந்தேன் ... மைக்கேலும், டிவாலராவும், லெனினும், ஸ்டாலினும், நீயும் தேசபக்தர்களும் என்றும் இருப்பீர்கள்...ஆனால், நான்?...என் கதி?...

கடைசியாக ஒரு வார்த்தை; உன்னைக் கட்டிக் கொண்டு கதறி அழுதால்தான் என் மனம் சமாதான மடையும். எப்போதாவது சௌகரியம் கிடைத்தால் இந்த ஊருக்கு வா. மேலும், நான் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறேன் என்பதை யறிய நீ ஆசைப்படலாம்.

"நியூ ஹேர் கட்டிங் அண்ட் ஷேவிங் ஷாப்" என்ற பெயருடைய ஒரு க்ஷவரக் கடை வைத்துக் கத்தி தீட்டிக்கொண்டிருக்கிறேன் — நண்பா!—கத்தி தீட்டிக்கொண்டிருக்கிறேன்!...

✲

இடம் இருக்கிறது

மண்டைக் கனம் பிடித்த ஒரு பிரபுவை ஹெர்ஃபோர்டு பிஷப் ஒரு சமயம் சந்திக்க நேர்ந்தது.

"நான் சர்ச்சுக்குச் செல்வதே கிடையாது. அது உங்களுக்குத் தெரியுமா, பிஷப்?" என்று பெருமையாகச் சொல்லிக்கொண்டார் பிரபு.

"ஓ! கவனித்திருக்கிறேன்!" என்று அமைதியாகக் கூறினார் பிஷப்.

"சர்ச்சுகளில் வேஷதாரிகள் நிரம்ப அதிகமாக இருக்கிறார்கள் என்பதுதான் அதற்குக் காரணம்" என்றார் பிரபு, விடாமல்.

"ஓ! அதற்காக நீங்கள் வராம லிருந்துவிடாதீர்கள். இன்னும் ஒருவருக்கு அங்கே இடம் இருந்துகொண்டுதான் இருக்கிறது!" என்று திருப்பிக் கொடுத்தார் பிஷப்.

பத்திரிகை அகராதி

"அங்காச்சு"

அனுதாபம்: ஆசிரியருக்கு அவசியமான குணம்.

அமைப்பாண்மை (எடிட்டிங்): பத்திரிகா லட்சணங்களில் தர்ம சங்கடமான ஒன்று. இது ஏற்படுவதின் காரணமாக, சில எழுத்தாளர்களுக்குத் தம் பெயரில் வெளிவந் திருப்பவை தாம் எழுதியவைதானு என்ற சந்தேகமும் ஏற்படுகிறது.

ஆசிரியர்: நிரம்ப நல்ல, மரியாதையுள்ள மனுஷர். கட்டுரை, கதை முதலியவைகளைத் திருப்பியனுப்பும்போது மிகவும் வருத்தப்படுவார்

எழுத்தாளர்: ஒரு பரிதாபகரமான பிராணி. இவருடைய கதைகள் நன்ருயிருக்கின்றன என்று சொல்லிவிட்டால் போதும்—வேறென்றும் வேண்டியதில்லை.

கவிதை: இதை எழுதத் தமிழ் தெரிய வேண்டும் என்கிற அவசியமில்லை என நிரூபிக்கிருர்கள் சில 'கவிஞர்'கள்.

காகிதம்: சர்க்கார் தயவில் இருப்பது; ஆசிரியர்களுக்குக் கிடைப்பதில்லை.

'கார்ட்டூன்': கேலிச் சித்திரம்; உண்மைச் சித்திரங்கள் என்று பல பத்திரிகைகளில் இப்படிப் போடுவதுண்டு.

காரியாலயம்: துயிலுமிடம் (அங்கு 'வேலை செய்பவர்'களுக்கு மட்டும்).

கூப்பைக் கூடை: எழுத்தாளர்களுடைய கதைக்கு 'ஷெல்டர்' கொடுக்கும் 'பங்களா.'

சித்திரக்காரர்: புதுப்புது உருவங்களைச் சிருஷ்டி செய்பவர்; அவை என்னவென்பதை அடியில் குறிப்பிட மறந்துவிடும் பழக்கமுள்ளவர்.

சித்திரங்கள்: இது ஒன்றே, சில பத்திரிகைகளின் தரத்தைக் குறைக்கிறது.

'டெலிபோன்': காரியாலயத்தைச் சேர்ந்தவர்களின் தூக்கத்தைக் கெடுக்கும் வஸ்து.

தலையங்கம்: ஆசிரியர்கள் 'காரசார'மாக எழுதுவது; வாசகர்களின் கண்ணில் படாத வஸ்து.

தொடர் கதை: எழுதியவர்களைத் தவிர மற்றவாகளுக்குப் பிடிக்காத விஷயம்.

பத்திரிகை: வேலையற்றவர்கள் படிப்பது.

பக்க எண்ணிக்கை: உங்களுக்கு 'ஒண்ணு, ரெண்டு' தெரியாது என்று நினைத்தே, இது போடப்பட்டிருக்க வேண்டும்.

பொருளடக்கம்: இதைப் படிப்பவர்களைக் கொண்டு ஊரிலுள்ள புத்திசாலிகளை எண்ணி விடலாம்.

முட்டாள்கள்: எழுத்தாளர்களுடைய கதை, கட்டுரைகளில் குற்றம் கண்டு பிடிப்பவர்கள்.

வாசகர்கள்: பொறுமையே பூஷணமாக உடையவர்கள் (ஐயோ, பாவம்!).

ஹாஸ்யம், விகடத் துணுக்கு: உங்களைச் சிரிக்க வைப்பதற்காகவே பத்திரிகைகள் போடுவது. உங்களுக்குச் சிரிப்பு வராவிட்டாலும், சிரித்து வையுங்களேன். போனல் போகிருர்கள்!

பத்திரிகை உலகமும், உம்பர் உலகத்தைப் போல், பல வண்ணக் கூறுகளை உடையது, பல கோணங்களை உடையது. இது......

ஒவ்வொரு தடவையும் வெள்ளையாகிறது
— ஜாஸ்தி அழுக்குப் படிந்த இடங்கள் உள்பட

உங்கள் ஆடைகள் நீடித்திருக்கும் காலம் ஜாஸ்தி அழுக்குப் படியும் பாகங்களை சலவை செய்யும் முறையைப் பொறுத்திருக்கிறது! ஜாஸ்தி அழுக்குப்படியும் பாகங்கள் அணிவதில் சரீரத்துடன் அதிகமாக உராயும் பாகங்கள்தான் என்பது ஞாபகமிருக்கட்டும்—அதனாலேயே, உங்கள் துணிகளை சிறிது சோப்பைத் தேய்த்து, தண்ணீரில் நனைத்து, அடித்துத் துவைக்கும்பொழுது இந்த பாகங்கள் முதலில் கெட்டுப்போகின்றன.

உங்கள் துணிகளை ஸன்லைட் முறைப்படிச் சுத்தம் செய்து அடித்துத் துவைப்பதனாலேற்படும் நாசத்தை விலக்குங்கள்.

ஸன்லைட்டின் ஏராளமான சுயமாகஇயல்கிற நுரையை நனைந்த துணியிடையே நன்றாய் புகுத்திக் கசக்கினால், அது ஒவவொரு தடவையும் வெண்மையாக்குகிறது—அதோடு சேதமின்றி சுத்தமாகச் சலவை செய்கிறது. இச்சுத்தமான சோப், அடித்துத் துவைக்காமலே அழுக்கை யகற்றுகிறது; துணிகளை இறகைப்போல் மிருதுவாகச் செய்கிறது; மேலும் உங்கள் கைகளை மென்மையாகவும் மழமழப்பாகவும் வைத்துக் கொள்கிறது.

இது
ஸன்லைட் முறைப்படி
சுத்தம் செய்தது!

ஸன்லைட் சோப்

S. 31-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

மனோஹரன் ஸ்டோர்ஸ்

தந்தி: "HARANTALKY"

181, கீழ வாசல்
மதுரை.

போன் நெ. 219

கீழ்க்கண்ட ஜவுளிகளின் ஸ்டாக்கிஸ்டுகள் :

மோஹன் ராம் கம்பெனியாரின் சேலைகள், வேஷ்டிகள்

★

M. K. C. "சிங்கம் மார்க்"

பனியன்கள், ஸிலிப் ஓவர்ஸ், அண்டர்வேர்ஸ் சின்டஸ் வகையரா

★

சென்னை இன்டோ-லங்கா டிரேடர்ஸின்

30-இஞ்ச், 44-இஞ்ச் டோரியா வாயல்கள்

(சுத்த கைத்தறி ஜவுளிகள்) கண்களைக் கவரும் நவநாகரிக டிஸைன்களின் பற்பல ரகங்களில் கிடைக்கும்

★

மொத்த & சில்லரை ஆடர்களுக்கு எழுதவும்.

கும்பகோணம்

டி. எஸ். ஆர். & கம்பெனியின்

கோகுல் கூந்தல் தைலத்தை

கூந்தல் வளர்ச்சிக்கும்

சிரசின் குளிர்ச்சிக்கும்

சந்தனாதி, அரைக்கீரைவிதைத் தைலங்களையும்

உபயோகியுங்கள்

சென்னை நகர் ஏஜண்ட் :
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி
சென்னை

கோயமுத்தூருக்கு சோல் ஏஜண்ட் :
B. பால பட்டாபி செட்டியார்
246, வைஸ்யாள் தெரு
கோயமுத்தூர்

மாஸ்டர் தாரா சிங்

●

யூசுஃப் மேஹர் அலீ

பாக்கிஸ்தான், சீக்கியஸ்தான் போன்ற கோஷங்கள், தேசத்தின் இன்றைய எழுச்சியைத்தான் பிரதிபலிக்கின்றன. பாக்கிஸ்தானின் காரண புருஷரான ஜனுப் ஜின்னவைப் போதுமான அளவு ஜனங்கள் அறிந்திருக்கிருர்கள். ஆனல், சீக்கியஸ்தான் புரட்சியை நடத்தும் மாஸ்டர் தாரா சிங்கை நன்ருக அறிந்தவர்கள் மிகச் சிலரே.

இந்தியாவில், ஜாதி வேறுபாடும், நிற வேறுபாடும் அதிகமெனச் சொல்லப்படுகிறது. முக்கியமாக, ஜாதி வேறுபாட்டைப் பற்றித்தான் அதிகம் சொல்லப்படுகிறது. மாஸ்டர் தாரா சிங்கின் வாழ்க்கை இந்த ஜாதி வேறுபாட்டின் கண்கூடான உதாரண மாகும். பிறப்பினல் ஒரு மதத்தை சேர்ந்தவராக இருந்தும், தொண்டினல் இன்னெரு மதத்தின் சிறந்த தலைவராக விளங்கியவர் மாஸ்டர் தாரா சிங். தாரா சிங் ஹிந்து மதத்தில் பிறந்தார். ஆனல், இன்று அவர் சீக்கியரின் உரிமைகளுக்காகப் போராடுவதில் முன்னிற்கிருர்.

1914-ம் வருஷத்திய ஜன சங்கியைப்படி, சீக்கியர் ஹிந்துக்களிலிருந்து தனியாகக் கருதப்படவில்லை. அவர்களுடைய எண்ணிக்கை கீழ்க்கண்ட விதத்தில் எடுக்கப்பட்டது. மதம்—ஹிந்து; ஜாதி—சீக்கியர். ஆனல், பிற்பாடு வந்த, பிரித்தாளும் சூழ்ச்சியில் மிக நம்பிக்கை கொண்ட சில ஆங்கிலேய அதிகாரிகள் சீக்கியர்களையும், ஹிந்துக்களையும் வேருகப் பிரித்துக் கணக் கெடுத்தார்கள். அவர்கள், சில 'ஆமாம் சாமி'ப் பேர்வழிகளைக் கிளப்பி விட்டு, இப் பிரச்னையை இன்னும் அதிகமாகத் தூண்டி விட்டார்கள்.

உத்தரவு கிடைத்தவுடன், இந்த 'ஆமாம் சாமி'கள் ஒரு நல்லெண்ணத் தூது கோஷ்டி உருவத்தில், வைசிராயையும், பஞ்சாப் கவர்னரையும் சந்தித்தார்கள். சிறிது நேரத்தில்,சீக்கியர்கள் ஹிந்துக்களிட மிருந்து பிரிக்கப்பட்டார்கள்.

"*1906*-ல் தனித்தொகுதித்தேர்தல் முறை நடத்தும்படி லார்ட் மின்ட்டோவை வேண்டிக்கொண்ட முசல்மான்களின் தூது கோஷ்டி, பிரிட்டிஷாரின் சூழ்ச்சியினலேயே உருவாக்கப்பட்டது. இதனுடைய வேண்டுகோள்கள் அனைத்தும், எவ்விதத் தடையுமின்றி ஒப்புக்கொள்ளப்பட்டன" என்று மௌலான முகம்மதலி ஒரு தடவை கூறினர். பாக்கிஸ்தான் பூதம் இந்தத் தனித் தொகுதி முறையின் விளைவுதான் என்பது பெரும்பாலான மக்களின் அபிப்பிராயம்.

முஸ்லிம்களின் தூதுகோஷ்டியைப் போலவே, சீக்கியர்களின் தூது கோஷ்டியும் ஆங்கிலேயர்களால் சிருஷ்டிக்கப்பட்டதுதான். நம் முன் நிற்கும் 'காலிஸ்தான்' பிரச்னையின் விதையும் அப்போதுதான் விதைக்கப் பட்டது. லார்டு மின்ட்டோ முஸ்லிம்களுக்குத் தனி வாக்குரிமை (முஸ்லிம்கள் முஸ்லிம்களையும்,

பித்தலாட்டம் நிறைந்த அரசியலுக்கும் மாஸ்டர் தாரா சிங்குக்கும் வெகு தூரம். அவருடைய தியாக வாழ்க்கையுடன், கூடவே சீக்கியரின் அரசியல் வாழ்க்கையையும் விவரிக்கும் இந்தக் கட்டுரையை ஹிந்தியிலிருந்து மொழிபெயர்த்தவர் ஸ்ரீ கே. எ. பழனியப்பன்.

ஹிந்துக்கள் ஹிந்துக்களையும் தேர்ந்தெடுப்பது) அளித்து இந்தியாவைப் பிளவுபடுத்தியதுடன், சீக்கியர்களுக்கும் தனி வாக்குரிமை அளித்து, அவர்களையும் ஹிந்துக்களி லிருந்து தனியாக்கினர். ஆக, பாக்கிஸ்தானுக்கும், காலிஸ்தானுக்கும் காரண புருஷர் லார்ட் மின்ட்டோதான். அவருடைய சூழ்ச்சியின் பலனுகவே, இன்று முஸ்லிம்களும், சீக்கியர்களும் தங்களைத் தனிச் சமூகத்தினர் என்று சொல்லிக் கொள்கிருர்கள்.

தாரா சிங் பஞ்சாபைச் சேர்ந்த ராவல்பிண்டி ஜில்லாவில், ஹர்யால் என்ற கிராமத்தில் இருந்து வந்த ஒரு வைதிக ஹிந்துக் குடும்பத்தில் பிறந்தார். அவருடைய பிறவிப் பெயர் நானக் சந்த்.

நானக் சந்த் பதினேழாவது வயதிலேயே, தன் மூதாதையரின் மதத்தைத் துறந்து, சீக்கிய மதத்தைத் தழுவியதன் மூலம், தன்னுடைய புரட்சிகரமான வாழ்வைத் தொடங்கினன். கூடவே, தன் பூர்வீகப் பெயரான நானக் சந்த் என்பதையும் தாரா சிங் என்று மாற்றிக் கொண்டான்.

நானக் சந்தின் தகப்பனர் பக்ஷி கோபி சந்த் கிராமத்தின் மணியகாரர். அத்துடன் லேவாதேவியும் நடத்தி வந்தார். அவருக்கு நான்கு பையன்கள் இருந்தபோதிலும், அவருடைய அன்பெல்லாம் நானக் சந்தினிடத்தில்தான். அவருடைய மனக் கோட்டைக்கு இவன்தான் அஸ்திவாரமாக விளங்கினன். பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண் டிருக்கும்போதே நானக் சந்த் மதம் மாற வேண்டுமென்று பிடிவாதம் செய்வதைக் கண்டு அவர் அதிகக் கோபம் அடைந்தார். பயம் காட்டினர்; அதட்டினர்; ஆசை காட்டினர். ஆனல், அவன் மசியவில்லை. அவருடைய எதிர்காலக் கனவு மண்ணேடு மண்ணுகப் போயிற்று.

இளைஞன் தாரா சிங் தன் வாழ்க்கையை ஒரு பள்ளிக்கூடத் தலைமை உபாத்தியாயராகத் தொடங்கினன். சீக்கியரிடம் அரசியல் நோக்கங்களோ, சமூகச் சீர்திருத்த வேகமோ இல்லை என்பதையும், சீக்கிய ஜாதி முழுவதையும் குருத் துவாரங்களி லுள்ள, ஒழுக்க ஹீனமுள்ள சன்னியாசிகள் ஆதிக்கம் செலுத்துவதையும் கண்டான். இவைகளி லிருந்து விடுபெற அவனுக்கு ஒரே ஒரு வழிதான் தெரிந்தது. அதுதான் கல்வி யறிவும், கட்டுப்பாடும். ஆகையால், தாரா சிங் உபாத்தியாயர் வேலை பார்க்க நிச்சயித்துக் கொண்டான்.

அக் காலத்தில், கால்ஸா காலேஜில் பி. ஏ. வகுப்பில் முதலாவதாகவும், விளையாட்டில் நிபுணனுகவும் வெளி வருகிறவனுக்கு வாழ்க்கையின் எல்லாக் கதவுகளும் திறந்திருந்தன. புகழும், பணமும் சம்பாதிப்பதற்கு அவனுக்கு அதிக வாய்ப்புக்கள் இருந்தன. ஆனல், தாரா சிங் இவை எல்லாவற்றையும் உதறித் தள்ளினன்.

அப்போது, லாயல்பூரில் ஓர் உயர்நிலைப் பள்ளி திறப்பதற்கு ஏற்பாடுகள் நடந்துகொண்டிருந்தன. ஆனல், பணக் கஷ்டம் முன் நின்றது. தாரா சிங் இக் கல்வி நிலையத்தில் பதினைந்து ரூபாய் சம்பளத்தில் தலைமை உபாத்தியாயர் வேலை பார்க்கச் சம்மதித்தான். ஒரு வாலிபனுக்கு—அதிலும், குடும்பப் பாரம் உள்ளவனுக்கு—இது ஒரு பெரிய தியாகம்தான். பல வழிகளிலும்

அவருக்கு இடையூறு அதிகப்பட்டது. இவை எல்லாவற்றையும் தாராசிங் தன் மனைவியின் அசாதாரணமான ஒத்துழைப்பினுலேயே சமாளிக்க முடிந்தது. அவரையொத்த தலைமை உபாத்தியாயர்கள் அதிகச் சம்பளத்தில், சுக போகங்களை அனுபவிக்கும் போது, அவர் மட்டும் பதினைந்து ரூபாய் வாங்கிக்கொண் டிருந்ததைப் பார்க்கும்போது, அவருடைய பெருமை இணையற்றதாகவே விளங்குகிறது.

அப்பொழுது முதல்தான் தாராசிங்கை ஜனங்கள் மாஸ்டர் தாராசிங் என்று அழைக்க ஆரம்பித்தார்கள்.

ஒத்துழையாமை இயக்கம் ஆரம்பித்தது. புரட்சிக் கோஷ்டி தன் வேலையை முதலிலேயே துவக்கி யிருந்தது. கலிபோர்னியாவி லிருந்து கலகக் கூட்டத்தின் தலைவர்கள் வந்து, பஞ்சாப் வாலிப சமாஜத்தை அன்னிய சர்க்காருக்கு விரோதமாகத் தூண்டி விட்டார்கள். ஜனங்களிடத்தில் அபாரமான உணர்ச்சி ஏற்பட்டது. இதே சமயத்தில் தான் அமிர்தசரஸில் ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்தது. அத்துடன் கூடவே, ராணுவச் சட்டத்தின் பயங்கரம் தேச முழுதும் தாண்டவ மாடியது.

இந்த அரசியல் புரட்சி வெகு வேகமாகப் பரவிற்று. அவைகளில் ஒன்று மிகப் பயங்கரமானதும், பலவந்தமானது மாகும். சீக்கியர்கள் தங்கள் குருத்துவாரங்களை முற்றுகை யிட்டுள்ள சன்னியாசிகளை வெளியேற்ற முயன்றதுதான் அது.

குரு நானக்கின் பிறப்பிடமான நான்கானு சாகிபில் இந்தச் சண்டை உச்ச நிலையை அடைந்தது. இங்கு இரண்டாயிரம் சீக்கியர்கள் தங்கள் உயிரைப் பலி கொடுத்தார்கள். பிறகுதான் ஆங்கிலேய அரசாங்கம் குருத்துவாரங்களைப் பொது ஜனக் குழுவினிடம் ஒப்புவிக்க இணங்கியது. இதற்குப் பிறகு 'குரு பாக் கொலை' நடந்தது. இதில் பிரிட்டிஷ் சர்க்காரின் கொடுமை எல்லையைக் கடந்து விட்டது. மறுபடியும் சீக்கியர்கள் வெற்றிக்காக, தங்களுடைய இணையற்ற வீரத்தைக் காட்ட நேர்ந்தது. இந்த நிகழ்ச்சிகளில் எல்லாம் தாரா சிங்கிற்கு முதல் பங்கு உண்டு.

ஆனுல், பிரிட்டிஷ் சர்க்கார் நாபா மகாராஜா ரிபுத்மன் சிங்கைச் சிம்மாசனத்தி லிருந்து நீக்கிய பொழுது, புரட்சியின் வேகம் அளவை மீறிவிட்டது. சமஸ்தான மன்னர்களில் ரிபுத்மன் சிங் ஈடு ஜோடற்ற மனிதர்; உதாரகுணமும், தயாள சித்தமும் உடையவர். நான்கானு சாகிப் படுகொலையைக் கண்டு கொதித்தார் அவர். இந்தக் கொடுமைக் கெதிராகக் கருப்புத் துணி உடுத்து, பொதுஜன முறையில் துக்கம் கொண்டாடினுர். நான்கானு சாகிப் தினம் கொண்டாடவும் ஏற்பாடு செய்தார்.

சுதேச மன்னர்களுக்கு எல்லையற்ற அதிகாரம் கொடுத்திருப்பதாகத் தம்பட்டம் அடிக்கும் பிரிட்டிஷ் சர்க்காரால் நாபா ராஜாவின் இந்தச் செய்கையைச் சகிக்க முடிய வில்லை. எனவே, ரிபுத்மன் சிங் பலவந்தமாக ஆசனத்தி லிருந்து இறக்கப்பட்டார்.

ரிபுத்மன் சிங் பொதுஜன ஆதரவைப் பெற்றவர். ஆகையால், சீக்கியர்கள் பிரிட்டிஷாரின் இந்தச் செய்கையை எதிர்த்தார்கள். 500 சீக்கிய வாலிபர்கள்

கொண்ட ஒரு கூட்டம் 'சைதா' வில் கூடார மடித்தது. நாபா வின் வெள்ளை ரீஜண்டு துப் பாக்கிக் குண்டால் சுட்டு அவர் களை வரவேற்ருர். அனேகர் குண்டுபட் டிறந்தனர். அனேகர் கைது செய்யப்பட்டார்கள். எஞ்சியவர்களை இரக்க மில்லாமல் உதைத்தார்கள். சீக்கியர்களின் இரண்டாவது கோஷ்டி அமிர்த சரஸி லிருந்து சைதாவுக்குப் புறப்பட்ட பொழுது, காந்திஜி கூட அவர்கள் தங்கள் உயிர்களை இவ்விதம் இழக்க வேண்டா மென வேண்டிக் கொண்டார்.

ஆனல், வீர சீக்கியர்கள் ஓர் அடிகூடப் பின்வாங்க வில்லை. பஞ்சாப் சர்க்காரோ அக்கிரமத் தில் இன்னெரு படி முன்னேறிச் சென்று,பஞ்சாபி லுள்ள சீக்கிய ஸ்தாபனங்கள் அனைத்தையும் சட்ட விரோதமான தெனப் பிர கடனம் செய்தது. அறுபதுக்கு மேற்பட்ட தலைவர்களை—தாரா சிங் உள்பட—கைது செய்தது. இவர்கள் மேல் ராஜத் துவேஷக் குற்றம் சாட்டப்பட்டு மூன்று வருஷங்கள் வழக்கு நடந்தது.

அடக்கு முறையினல் பலன் எதுவும் கிடைக்க வில்லை என்று கண்ட சர்க்கார், சமாதானம் செய்துகொள்ள விரும்பியது. அரசாங்கத்தின் சார்பாக ஒரு யாதாஸ்தும் வெளியிடப்பட்டது. சர்தார் பகதூர் சிங், மஹ்தாப் போன்றவர்கள் இதை ஒப்புக் கொண்டு விடுதலை அடைந்தார் கள். தாரா சிங்கைப் போன்ற முன்னேற்ற நோக்கமுள்ள தலை வர்கள் (தேஜோ சிங் மூந்தரி, அமர் சிங் ஜப்பல், கோபால் சிங் கௌமி முதலியோர்) இந்த ஒப் பந்தத்தை ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டார்கள். ஆகையால் இவர்கள் சிறையிலேயே இருக் கும்படி நேர்ந்தது. ஆனல், சர்க் கார் இவர்களை அதிக நாட்கள் வைத்திருக்க முடிய வில்லை. சில மாதங்களுக்குப் பிறகு எல்லோ ரும் விடுதலை செய்யப்பட்டார் கள்.

இந்த ஒப்பந்தத்தினல் சீக்கியர் களுக்குள் இரண்டு கட்சிகள் உண்டாயின. இந்த ஒப்பந் தத்தை ஒப்புக் கொண்டவர்கள் பிற்போக்கு வாதிகளாகவும், மறுத்தவர்கள் முன்னேற்றக் கட்சியினராகவும் ஆனர்கள்.

பிறகு, நேரு யாதாஸ்தினல் ஒரு முறை சீக்கியர்களுக்குள் பிளவு ஏற்பட்டது. பஞ்சாபில் சீக்கிய ரின் ஜனத் தொகை 16 சத விகி தம்தான். ஆனல், சீக்கியர்கள் 30 சத விகிதஸ்தானம் கேட்டார் கள். இது ஒப்புக்கொள்ளப்பட வில்லை. மங்கள் சிங் நேரு யாதாஸ்தை ஆதரித்தார். பாபா கடக் சிங், ஞானி ஷேர் சிங், மாஸ்டர் தாரா சிங் முதலியோர் எதிர்த்தார்கள். மற்ற மாகாணங் களில் சிறுபான்மைச் சமூகங் களுக்கு விகித சமத்துவத்துக்கு அதிகமாகவே ஸ்தானங்கள் கொடுக்கப்படும் பொழுது சீக்கி யர்களுக்குப் பஞ்சாபில் ஏன் அவ் விதம் கிடைக்கக்கூடாது என்பது இவர்களுடைய வாதம்.

1930-ல் நடந்த லாகூர் காங்கிரஸ் கூட்டத்தில், காங்கிரஸ் பூரண சுதந்தரத்தைத் தனது லட்சியமாகக் கொண்டவுடன் நேரு யாதாஸ்தும் முடிந்துவிட் டது. இப்போது தாரா சிங்கிற் குக் காங்கிரஸுடன் எவ்வித விரோதமும் இல்லாதுபோயிற்று. மேலும், அவர் சட்ட மறுப்பு இயக்கத்தில் மனப்பூர்வமாகச் சேர்ந்து வேலை செய்தார். பெஷா வரில் நடந்த 'கிஸ்ஸாகான் படு கொலை'ச் செய்தி எட்டியவுடன், தாரா சிங் நூறு சீக்கியர்

களுடன் பிஷாவர் செல்ல நிச்சயித்தார். கறுப்புத் தலைப் பாகை அணிந்து, வளைவு கத்தி தரித்து, அரிசித் துணியைத் தலையில் கட்டிக்கொண்டு இந்தக் கோஷ்டி அமிர்தசரஸிலிருந்து கிளம்பியது. தாரா சிங்கை லாகூரிலேயே கைது செய்து விட்டார்கள். பாக்கியுள்ளவர்களை ஜீலம் நதிக் கரையில் தடி கொண்டு கடுமையாகத் தாக்கினார்கள்.

இந்தக் கோஷ்டி பிஷாவர் போகாவிட்டாலும், பட்டாணியர்களுக்காகச் சீக்கியர்கள் காட்டிய அனுதாபத்தினால் தேசமே குமுறி எழுந்தது. தாரா சிங்கிற்கும் இதனால் ஒரு நன்மை ஏற்பட்டது. சிறையில் கான் அப்துல் கபார் கானின் நட்பைப் பெற்றார் அவர். தாரா சிங்கின் புகழ் இப்பொழுது வானளாவிவிட்டது. சிறையிலேயே அவர் 'சிரோமணி குருத்துவார் பிரபந்தக் கமிட்டி'யின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஜாதி நிர்ணயத்தினால், இன்னுமொரு தடவை சீக்கியரின் வாழ்வில் புரட்சி எழுந்தது. டாக்டர் அம்பேத்கார் அப்போது சீக்கியர்களை முட்டாள்களாக அடித்தார். ஒரு பிரசங்கத்தில் பேசும் போது, நாடகத் தோரணையில், தானும் தன்னைப் பின்பற்றுவோரும் ஹிந்து மதத்தைத் துறந்துவிட்டு, வேறு மதத்தில் சேரப் போவதாக அவர் அறிவித்ததே இதற்குக் காரணம். இதற்கு அனேக இடங்களிலிருந்து ஆட்சேபங்கள் கிளம்பின. ஆனால், அனேகர், தங்கள் மதங்களைத் தழுவி, நேரே சுவர்க்கம் செல்லும்படி டாக்டரை வேண்டிக்கொண்டனர்.

டாக்டர் கெட்டிக்கார மனிதர். யாரிடத்திலும் சரியென்றோ, முடியாதென்றோ சொல்லிவிடாமல், பல சமயத்தவர்களிடமும் பேச்சு வார்த்தை நடத்திவந்தார். ஒரு தடவை, சீக்கியரிடம் டாக்டர் அதிக நாட்டம் கொள்வதாக ஒரு வதந்தி கிளம்பியது. அவ்வளவுதான்; தாரா சிங்கைப் போன்றவர்கள்கூட இதில் மயங்கி விட்டார்கள். அடுத்தபடி டாக்டர், ஹரிஜனங்களுக்காகப் பம்பாயில் ஒரு கால்ஸா காலேஜ் திறக்கப்பட்டால் நலம் என்று சொன்னவுடன் அகாலி தளம் ஒரு கல்லூரி நிறுவ நிச்சயித்தது. சீக்கிய மதப் பிரசாரத்துக்காகத் தேச முழுவதும் பிரசாரகர்களை அனுப்பியது. இவைகளிலெல்லாம் லட்சக் கணக்கான ரூபாய் செலவானதுதான் மிச்சம். பலன் ஒன்றும் இல்லை. டாக்டர் அம்பேத்கார் நேற்று இருந்த இடத்திலேயேதான் இன்றைக்கும் இருக்கிறார்.

1942-ல், கிரிப்ஸ் திட்டத்தை ஒப்புக் கொண்டால் தேசம் துண்டாடப்படும் என்ற காரணத்திற்காக அதை ஏற்கத் தாரா சிங் மறுத்துவிட்டார். அதற்குப் பிறகு முஸ்லிம் லீக் பாக்கிஸ்தான் புரட்சி நடத்துவதைக் கண்டு, தாரா சிங்கும் தன்னுடைய காலிஸ்தான் அல்லது சுதந்தரப் பஞ்சாப் கோரிக்கையில் அதிக நம்பிக்கை கொள்ளலானார். முஸ்லிம்களுக்குத் தனி அரசுரிமை கொடுக்கப்படுமானால், சீக்கியர்களுக்கும் அவ்வித அரசாங்கம் கிடைக்க வேண்டும் என்றுதான் அவர் சொல்கிறார்.

இந்தப் பாக்கிஸ்தான் பூதம் காரணமாகவே அவர் காங்கிரஸின் 'இந்தியாவை விட்டு வெளியேறு!' இயக்கத்தில்கூடக் கலந்துகொள்ளவில்லை. சீக்கியர்

கள் பட்டாளத்தில் சேர வேண்டும் என்றுகூட அவர் சொன்னார். பிறகு காங்கிரசிலிருந்தே விலகிச் சென்று விட்டார்.

ராஜாஜி தன்னுடைய பாக்கிஸ்தான் திட்டத்திற்கு ஆதரவு தேடிய பொழுது தாரா சிங் கொதித்தெழுந்தார். முன்னைவிட அதிகமாகச் சீக்கியஸ்தானுக்காகச் சண்டையிட ஆரம்பித்தார். இக் காரணத்தைக் கொண்டே மாகாணத் தேர்தல்களில் காங்கிரசுக்குப் போட்டியாக அகாலி தள சீக்கியர்களை நிறுத்தினர். அகாலிகளே அதிக ஸ்தானங்களைக் கைப்பற்றி வெற்றி யடைந்தார்கள்.

தாரா சிங் ஒரு கொள்கைக்காகச் சண்டையிடும் பொழுது தன்னையே மறந்து விடுகிறார். ஆனால், அவர் ராஜதந்திரியா, தீரத்துடன் எதிர்காலத்தை ஆராயும் திறமையுள்ளவரா என்ற கேள்விகளுக்கு 'ஆம்' என்று பதில் சொல்வது கடினம்தான்.

தாரா சிங் அனேக தடவைகள் மனம் புழுங்கி அரசியல் அரங்கத்திலிருந்து விலகி யிருக்கிறார். அவருக்குப் பித்தலாட்டம் நிறைந்த அரசியலில் வெறுப்பு அதிகம். அத்துடன், இவ்விதப் பிரச்னைகளைச் சரியான முறையில் அவரால் தீர்க்கவும் முடியாது.

ஆனால், தாரா சிங்கின் உலகப் பிரசித்தியில் எவருக்கும் சந்தேகம் கிடையாது. அவருடைய சக்தியும், வாழ்க்கையும் தியாகத்தால் நிரம்பியது. அவர் தேச சேவை செய்ய விரதம் பூண்டு அனேக ஆண்டுகள் ஆகிவிட்டன. பணத்தில் ஆசை கொள்வதில்லை என்றும், யாருக்கும் பயப்படுவதில்லை என்றும் அன்று பூண்ட விரதத்தை அவர் இன்றுவரை நடைமுறையில் காப்பாற்றி வருகிறார். அவரிடம் சொந்தமாக ஒரு தம்பிடிகூடக் கிடையாது. நூற்றுக் கணக்கான முறைகள், கத்தி முனையில் தன் வாழ்வைப் பணயம் வைத்தவர் அவர்.

ஒரு தடவை பாடியாலா மகாராஜா தனக்கு விரோதமாக எவ்விதப் பிரசாரமும் செய்யாமலிருந்தால் தாரா சிங்கிற்கு மூன்று லட்ச ரூபாய் தருவதாகச் சொன்னார். தாரா சிங் வெகு சிரமப்பட்டுத் தன்னை அடக்கிக் கொண்டிராவிட்டால் இந்தச் செய்தியைக் கொண்டு வந்த மனிதன் யமலோகம் சென்றிருப்பான்.

தாரா சிங்கின் வாழ்க்கை, பயமின்மையும், காரியத் தகுதியும், நாசூக்கு நிறைந்த அரசியலும் கலந்தது. அவர் சமூகத்திற்கு நன்மை செய்ய விரும்புகிறார்; ஆனால், வழி காட்டும் ஆதர்சம் அவரிடம் இல்லை. இக் காரணத்தினாலேயே அவருக்குச் சம்பந்தமில்லாத விஷயங்களிலெல்லாம் கூட அவர் தலையிட்டிருக்கிறார்.

✲

இன்பக் கவிதை

புள்ளுலவும் சோலையிலே பூமணக்கும் காற்றில், பொற்கனிகள் உண்டியற்கை அற்புதத்திற் கூடி, எள்ளுமொரு கவலையின்றி எண்ணமெலாந் துறந்தே, எல்லாமாய் நிற்கு முன்னை எண்ணுவதே இன்பம்!

—யோகி ஸ்ரீ ஸத்யார்க்கா (சிவானந்தா)

மேதைப் பித்தம்

நீட்ஷே

நாம் கடவுளிடத்தில் சற்றும் கண்ணியமாய் நடந்து கொள்வதில்லை—ஏனெனில், பாவம் செய்யும் உரிமைகூட நாம் அவருக்கு அளிப்பதில்லை!

2. திரிகரண சுத்தியும், செய் நன்றியும்இல்லையேல், நம்மிடை தோன்றும் மேதாவிகளைக்கூடச் சகிப்பது அரிது.

3. நாற்புறமும் கடல் சூழ்ந்தும், ஒருவன் தாகத்தால் இறப்பது பரிதாபம். ஆனால், கடல் நீர் தாகத்தைத் தீர்க்காது என்று உணர்வதே அறிவு.

4. ஆண். பெண் இருவர் உள்ளத்தும் ஒரேவித உணர்ச்சிகள் நிலவுகின்றன. ஆனால், அவைகளின் வேகம் மாறுபடுவதால் ஆணும், பெண்ணும் ஒருவரை யொருவர் எப்பொழுதும் சந்தேகிக்கின்றனர்.

5. விளையாட்டில் குழந்தை அளவற்ற, உண்மையான சிரத்தையைக் காட்டுகிறது. அவ்விதச் சிரத்தையை மனிதன் தன் வாழ்க்கையில் பெறுவானாகில், அவன் முழு வளர்ச்சியடைந்தவனுவான்.

6. தன்னுடைய லட்சிய நாடகத்தை உலகின்மீது சுமத்தி, அதில் தானே கதாநாயகனுக நடிக்கும் ஒருவனையே, உலகம், "ஆஹா! மஹான்:" என்று சபாஷ் கொட்டுகிறது.

7. "மிருகஉணர்ச்சியுள்ள கடவுளே நான்" என்பதைப் பகுத்தறிவுள்ள மனிதன் சுலபமாய் அறிவான்.

8. துவேஷிக்கவோ, நேசிக்கவோ சந்தர்ப்ப மில்லாவிடில், பாதி உயிருடன்தான் பெண் காண்கிருள்.

9. நீ எவனை வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்புகிருயோ, அவனுடைய அபிப்பிராய மேன்மையில் மயங்கிவிட்டதாய்ப் பாவனை செய்—நிச்சயமாய் அவன் உன் அபிப்பிராயப்படி நடந்து கொள்ளுவான்.

10. இவ்வுலகில் கெடுக்கப்படாதது ஒன்றுமில்லை. வேசையர் வாழ்வையும் கெடுத்து விடலாம்—அவர்களைக் கல்யாணம் செய்து கொள்வதால்!

11. தேசியம் சில தலைவர்களை உண்டாக்குகிறது. பின்பு அவர்களை வளைத்துக்கொண்டு அழித்துவிடுகிறது.

12. நேசிப்பதிலும், பழி வாங்குவதிலும் மனிதனைவிட ஸ்திரீகள் அதிகக் காட்டுமிராண்டித்தனம் உள்ளவர்கள்.

13. மனிதன் வெகு சுலபமாய்த் தன்னைக் கடவுளாக நினைத்துக் கொள்ளாததற்குக் காரணம்—அவனுக்கு வயிறு இருப்பதே!

14. "தீமையானது" என்று பறைசாற்றப்படும் எதுவும் ஒரு காலத்தில் "நன்மையானது" எனக் கருதப்பட்டதே. நல்ல லட்சியம் சிதைந்து போய்க் காலப் போக்கில் கெடுதலாகக் காண்கிறது.

15. அளவற்ற சாமர்த்தியம் பெற்றிருப்பது மட்டும் போதாது—அதைப் பெற்றிருப்பதற்கு அனுமதியும் வேண்டும், இவ்வுலகில்!

16. அன்பினுல் செய்யும் காரியம், நன்மை, தீமை இரண்டையும் கடந்து நிற்கிறது.

17. ஆட்சேபித்தல், காரியம் செய்யாமல் நழுவல், அவநம்பிக்கை கொள்ளல், கிண்டல் செய்வதில் ப்ரீதி இவையெல்லாம், மானசிக, ஆத்மீக ஆரோக்கியத்தின் அறிகுறிகள். கண்மூடித்தனமாகப் போற்றுதல் அல்லது தூற்றுதல் கடுமையான வியாதியின் சின்னம்.

18. தனி மனிதனின் வாழ்க்கையில் பைத்தியம் அவ்வளவு சாதாரணமல்ல. ஆனால், வெறிகொண்ட கூட்டங்கள், கட்சிகள், தேசங்கள், யுகங்கள் இவைகளில் அது மிகச் சாதாரணமானது.

19. மனிதனின் இதயத்தில் அடங்கிக் கிடந்த உத்தமக் குணங்களை, பிரேமை அல்லது காதல் வெளிப்படுத்துகிறது. இக் காரணத்தாலேயே அவனது நிஜ ஸ்வரூபத்தை இவை மறைத்து,மற்றவர்களுக்கு அவனைப் பற்றித் தவருன அபிப்பிராயங்களை உண்டாக்குகின்றன.

ஃப்ரெடரிக் வில்ஹெல்ம் நீட்ஷே (1844—1900) புதுமைச் சிந்தனைப் போக்குடைய பிரசித்தி பெற்ற ஜெர்மன் தத்துவ விசாரகர். பின்னுல், பைத்தியம் பிடித்துச் செத்தார். ஷாவும், ஜோடும் இவரை முழுப் பைத்தியம் என்றே புரளி பண்ணுகிருர்கள். இவரது நன்மை, தீமைக்கு அப்பால் என்ற நூலில் தென்படும் இந்தப் பொறிகளைத் திரட்டியவர் ஸ்ரீ பெ. வி. சேதுராமன்.

20. வாய் பொய் பேசலாம்; ஆனால், முகம் பொய் பேசாது.

21. எவனொருவன் அளவுக்கு மீறித் தன்னைப் பற்றிப் பேசிக்கொள்ளுகிறானோ, நிச்சயமாய் அவன் தன் குற்றங் குறைகளை மறைக்க முயலுகிறான்.

22. மனித சமூக முழுவதையும் தழுவிக்கொள்வது முடியாத காரியமாதலால், மனித சமூகத்திடை வைத்திருக்கும் முழு அன்புடன் ஒரு தனி மனிதனைத் தழுவிக் கொள்ளுகிறோம்—ஆனால், அந்த மனிதனிடம் மட்டும் இந்த ரகசியத்தைத் தெரிவிக்கக் கூடாது.

23. அலசிப் பார்க்குமிடத்தில் எல்லாரும் தங்கள் விருப்பங்களையே விரும்புகிறார்கள்—விரும்பப்பட்ட வஸ்துக்களை விரும்புவதில்லை.

24. உண்மையின் தன்மையைக் குறித்த வரையில்—இதுவரை முழு உண்மை யாரும் சொல்லவில்லை.

25. நம் நடத்தையின் பலன்கள்—கர்மபலன்—நம்மைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளுகின்றன—நாம் "திருந்தி விட்டோம்" என்ற விஷயம் நிராகரிக்கப்படுகிறது.

26. ஒரு நற் காரியத்தில் தீவிர, திட நம்பிக்கை கொண்டவன் சொல்லும் பொய் பாவமற்றது.

27. உண்மை அன்புள்ளவனும், அகம்பாவத்துடன் நடந்தால், அது கொடுங் குணத்தின் அறிகுறியே யாகும்.

நா காக்க

கிரேக்க தேசத்திலிருந்த ஸாந்தஸ் என்ற பணக்காரன் ஒருவனுக்கு ஈசப் என்றஓர் அடிமை இருந்தான். ஒருநாள் ஸாந்தஸ், உலகத்திலேயே உயர்தரமான சாப்பாடு தயாரிக்கும்படிச் சொன்னான். ஈசப், நாக்குகளையே பலவகைகளாகத் தயாரித்து, எஜமானனுக்கு விருந்திட்டான். ஸாந்தஸ் அந்தச் சாப்பாட்டைக் குறை கூறியபொழுது ஈசப் சொன்னான்:

"பிரபு! நாக்கைவிட மேலான பொருள் எதுவுமே இல்லை. நாக்குத்தான் அறிவுக்கும், தத்துவத்திற்கும் வழியாக இருக்கிறது. உலகத்தின் நன்மையும், மேதையும் அதன் மூலமாகத்தானே உருவாகின்றன?"

மறுநாள் ஸாந்தஸ், உலகத்திலேயே மோசமான சாப்பாட்டைத் தயாரிக்கும்படி உத்திரவிட்டான். ஈசப் அன்றைக்கும் நாக்கையேதான் சமைத்திருந்தான். ஸாந்தஸுக்கு ஒன்றுமே புரியவில்லை. நாக்கே, ஒருநாளைக்கு உயர்ந்த ஆகாரமாகவும், மறுநாள் மோசமான ஆகாரமாகவும் ஆவதின் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. ஈசப் பதிலளித்தான்:

"நாக்கைவிட மோசமானது எதுதான் இருக்க முடியும்? நாக்கு சம்பந்தப்படாத தீமை உலகத்தில் ஏதாவது இருக்கிறதா? சாம்ராஜ்யங்களுக்கும், நாடு நகரங்களுக்கும், சொந்த நட்பிற்கும் நாக்கே அழிவை அளிக்கிறது. பித்தலாட்டம், பொறாமை, அநியாயம், துரோகம் ஆகிய எல்லாவற்றுக்கும் நாக்குத்தான் காரணம்.

—ஷிப்லி

கறார்ப் பேர்வழி

ஒரு சுரங்கத்தின் பாத்தியதை குறித்து நெவடாவில் ஒரு வழக்கு நடந்துகொண்டிருந்தது. நீதிபதி, கண்டிப்புக்குப் பெயர் போனவர். அவர் ஒரு நாள் கோர்ட்டில் குறிப்பிட்டார்:

"கனவான்களே! இந்த வழக்கின் வாதியிடமிருந்து 10,000 டாலர் 'செக்' ஒன்றும், பிரவாதியிடமிருந்து 15,000 டாலர் செக் ஒன்றும் என் கைக்கு வந்திருக்கின்றன. பிரதிவாதிக்கு 5000 டாலரை இதோ திருப்பிக் கொடுத்து விடுகிறேன். அதனுடைய சொந்த யோக்யதாம்சத்தைக் கொண்டே வழக்கு மேலே நடத்தப்பெறும்."

—வால் ஸ்ட்ரீட் ஜர்னல்

இந்தியரின் கட்சியை எடுத்துரைக்க அமெரிக்கா சென்றுள்ள

ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட்

(பக்கத்தில் நிற்பவர் ஸ்ரீமதி சியாங் கை ஷேக்)



ராஜாத் தவளை



சென்னை நகரசபை விளையாட்டு மைதானத்தை
கனம் டேனியல் தாமஸ் சமீபத்தில் திறந்து வைத்தார்

மீண்டும் லீக்கில் சேர்ந்த ஜனுப் ஃபஸ்லுல் ஹக்

“இவ்வளவு பெரிய இடத்தில் அப்படி என்னதான் விளையாடுவார்களோ?”

படம்: டி. பிரஹலாதன், சென்னை

படம்: ஜே. எம். கல்யாணம்

"அந்தக் கொளந்தையையும் பாரு,
எத்தினி சாதுவா இருக்குதுன்னு!"

படம்: எஸ். ராஜா ராவ், திருவானைக்காவல்

"அட, பச்சைப் புள்ளையைப் போட்டு
ஏன் இப்படி உசிரை எடுக்குறியாம்?"

படம்: எம். கே. ரங்கசாமி அய்யங்கார், சென்னை

கற்பனை உருவம்



படம்: ஆர். கிருஷ்ணன், கும்பகோணம்

பிரத்தியட்ச மனிதன்



ஆகாயத்தில் வெகு உயரத்துக்குப் பலூன்களைக் கட்டி அனுப்பி, அவற்றில் அமைக்கப்பெற்றிருக்கும் சில கருவிகளின் மூலம் பருவ நிலையை மிக நுணுக்கமாகத் தெரிந்துகொள்ளும் புது மார்க்கம் ஒன்று இப்போது புது டில்லிப் பருவ நிலை ஆய்வுச் சாலையில் அனுஷ்டிக்கப்படுகிறது

கற்புக்குப் போரிடுங்கள்!

●

மகாத்மா காந்தி

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸின் சகோதரர் ஸ்ரீ சரத் பாபு வங்கத்திற்குப் போகிறார். அவருக்கு எவ்வித வகுப்பு வித்தியாசமும் கிடையாது. ஸ்ரீ போஸ் உடல்நலம் குறைவாயிருக்கிறார்; இருந்தாலும்கூட, அது அவர் பிரயாணத்தைத் தடை செய்ய முடியாது. காங்கிரஸ் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ள ஆச்சார்யா கிருபளானியும் அவரது மனைவியும்கூட வங்கம் செல்கின்றனர். இந்த அசம்பாவிதமான படுகொலையைத் தடுக்க அவர்கள் தங்களால் முடிந்ததையெல்லாம் செய்வார்கள். அவர்கள் அங்கு எந்தக் கட்சியையும் காப்பாற்றுவதற்காகப் போகவில்லை. அங்கு நடைபெறும் சகோதரக் கொலையை நிறுத்தவே போகின்றனர். ஆச்சாரியா கிருபளானிக்கும் அவர் மனைவியாருக்கும் இது நன்மைக்கான ஆரம்ப அறிகுறிதான். நமக்காக எவ்வளவோ தியாகம் செய்துள்ள வங்கத்தின்—இப்பொழுதுவரை குருதேவ் தாகூரின் பஜனா கானத்தைக் கேட்டு வந்த வங்கத்தின்—புகழுக்குக் களங்கம் ஏற்பட்டுவருகிறது.

பக்தனின் மனத்தைப் பரிசுத்தமாக்கவும், பயமின்றி வைக்கவும் குருதேவின் பஜனா கானம் கடவுளைக் கேட்கிறது. இந்தக் கானத்தைப் பஜித்துக்கொண்டே தலைவர்கள், வங்கம் செல்கின்றனர். எனவே, இங்குக் கூடியிருக்கும் நம்முடைய கடமை, அவர்களுக்கு எல்லாவித வெற்றியும் கிடைக்க வாழ்த்துவதேயாகும்.

பெண்கள் சோரம் செய்யப்படுகின்றனர், இஸ்லாம் மதத்திற்குப் பலவந்தமாக மாற்றப்படுகின்றனர் என்று கேட்க எனக்கு மிகவும் துயரம் உண்டாகிறது. மனிதர்கள் கொல்லப்படுகிறார்கள் என்பதைவிட, இது எனக்கு அதிகத் துயரம் தருகிறது. பெண்கள், உண்மையில் ஈட்டிகள் வைத்திருப்பதில்லை. ஆனால், ஜான்ஸி ராணி வைத்திருந்தாள். எல்லோரும் ஜான்ஸி ராணிகளாக இருக்க முடியாது. சீதையின் ஒப்பற்ற சக்தி முன் ராவணனது மிருக பலம் என்ன செய்ய முடிந்தது? தேவியினது கற்புக்குக் களங்கம் ஏற்படுத்த அவனால் முடிந்ததா? தங்கள் ரோமத்திற்குத் தீங்கிழைப்பதற்கு முன்னமேயே, எப்படி மடிவது என்பதைப் பெண்கள் அறிந்து கொள்ள வேண்டும். ஹிந்துக்கள் குறைவாயுள்ள இடங்களில் அவர்கள் அனாதரவாய் இறக்கக் கூடாது.

நவகாளியில் நடந்த வெறியாட்டங்களைக் காணப் பொறாத, சாந்த ஸ்வரூபியான காந்திஜி, தமது நெஞ்சகத்தின் அந்தரங்கத்திலிருந்து பேசும் சொற்கள் இவை.

சாவை வீரத்துடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் தற்போது நடைபெற்று வரும் பயங்கரப் படுகொலையை நிறுத்தும்.

இன்று வந்துள்ள இரு கடிதங்களில், கூட்டத்தில் ஏலம் போடுவதைச் சூதாட்டம் என்றும், கள்ள மார்க்கெட் செய்வதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஒரு மனிதன், தான் பேசுவதைக் கூர்ந்த கவனத்துடன், சரியாகப் பேச வேண்டும். இந்த நண்பர்களோ எழுதுவதற்கு முன் தங்கள் வார்த்தைகளைப் பற்றிச் சிறிதுகூட யோசிக்கவில்லை. சூதாடுவதும், கள்ள மார்க்கெட் செய்வதும் மனிதனின் சுயநலத்தை உத்தேசித்தவை. சுயநலத்திற்காக மனிதர் உயிர்விடுகிறார்கள்; பணம் சம்பாதிக்க எதை வேண்டுமானாலும் செய்யத் துணிகிறார்கள். ஆனால், இங்கு ஏலத்தில் செலவழிக்கப்படும் பணம் ஹரிஜனங்களின் நன்மைக்குப் போகிறது. இங்கு நீங்கள் ஏலத்தில் வாங்கும் பொருட்களை நீங்கள் உங்கள் உபயோகத்திற்காக வாங்கவில்லை. நீங்கள் தீண்டாமையை ஒழிக்க என்னென்ன செய்தீர்கள் என்பதை உங்கள் மக்களுக்கு ஞாபகமூட்டும் நினைவுச் சின்னங்களாக இருப்பதற்காகவே அவற்றை வாங்குகிறீர்கள். நல்லது எதையும் கெட்டதாக ஒருவன் மாற்றிவிட முடியும் என்பது உண்மைதான். ஆனால், இவ்விதப் போலிகளுக்குப் பதில் சொல்லி முடியாது.

✲

இல்லையின் எல்லை

புதிதாக வந்த ஒரு ஹங்கேரிய தூதர் சில வருஷங்களுக்கு முன் தென் அமெரிக்கக் குடியரசின் ஜனாதிபதியைச் சந்தித்த ஒரு கதை :

"எந்தத் தேசத்தின் பிரதிநிதி நீங்கள் ?" என்று கேட்டார் ஜனாதிபதி.

"ஹங்கேரிய ராஜ்யம்."

"ஓ! அப்படியானால் உங்களுக்கு ஒரு ராஜா இருக்கிறாரா ?"

"இல்லை, இல்லை. எங்களைக் கடற்படைத் தளபதி ஹார்தி ஆளுகிறார்."

"கடற்படைத் தளபதியா? அப்பொழுது, உங்களுக்குக் கடற்படை இருக்கிறதா ?"

"இல்லை, எங்களுக்குக் கடற்படை கிடையாது."

"அப்படியா ? உங்கள் நாடு நடுநிலைமை வகிக்கிறதோ ?"

"இல்லை, நாங்கள் ருஷ்யாவுடன் போரிட்டுக்கொண்டிருக்கிறோம்."

"ஓகோ ! ஏன் அப்படி ?"

"ஏனென்றால், பிரபு! எங்களுக்கு டிரான்சில்வேனியா வேண்டும்."

"ஓகோ! டிரான்சில்வேனியா ருஷ்யாவிடம் இருக்கிறதாக்கும் ?"

"இல்லை டிரான்ஸில்வேனியா ருமேனியாவிடம் இருக்கிறது."

"அப்படியானால், நீங்கள் ருமேனியாவுடனும் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறீர்களா ?"

"இல்லை, பிரபு, ருமேனியா எங்கள் நேசநாடு."

ஜனாதிபதிக்குப் பொறுக்கவில்லை. டெலிபோனைக் கையில் எடுத்து "யாரப்பா, அங்கே! பைத்தியக்கார ஆஸ்பத்திரியிலிருந்து உடனே யாரையாவது வரவழை! என்று அவசர அவசரமாகக் கூறினார்.

—ஈவ்னிங் ஸ்டாண்டர்டு

எனக்குக் குழந்தை வேண்டாம்

●

'மாயை'

'குழந்தை வேண்டும்' என்று விரும்பிய பெண்களால் உலகத்தின் ஜனத் தொகை மட்டுமிதம் இல்லாமல் பெருகிவிட்டது. உலகில் உள்ள புளிய மரத்தின் முத்துக்கள் எல்லாம் மண்ணிலே விழுந்து முளைத்தால் உலகில் வேறு மரங்கள் வளர இடம் இராது. அவ்வாறே, உலகில் பிறந்த பெண்கள் யாவரும் 'குழந்தை வேண்டும்' என்று மக்களைப் பெற்றதினாலேதான், உலகம் இன்று சொல்ல வொண்ணாத சிக்கல்களுக்கு ஆளாயிருக்கிறது. ஜனத்தொகை எண்ணிக்கையில் பெருகும் பொழுது, மனிதன் தாவர உலகத்தையும், பிராணி உலகத்தையும் ஆக்கிரமிக்கிறான். ஓயாமல் தேவைகளைப் பெருக்கிக்கொண்டே இருப்பவன் மனிதன். உலகில் பிறந்த மனிதர்கள் யாவரும் குழந்தைப் பருவம் முதல் பட்டுடைதான் கட்டுவோம் என்று கருதினால், உலகத்தில் உள்ள பட்டுப் புழுக்கள் கோடிக் கணக்கிலே இறக்க வேண்டும். மனிதனுடைய தேவைப் பொருள்களில் ஒன்று விறகு. இயற்கையாக வளருகிற மரங்களின் வளர்ச்சி வேகத்தைப் பார்க்கிலும் அவனுடைய விறகுத் தேவை அதிகமாக இருப்பதினாலேதான் எண்ணிறந்த காடுகள் பாழாயின. காடுகளைப் பாழாக்கின வேகத்திலே மரங்களை உற்பத்தி செய்ய முடியவில்லை. ஆகையால், ஒரு காலத்தில் குறைவான விலைக்குக் கிடைத்த விறகை இன்றைக்கு அதிக விலை கொடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. உலகத்தில் தோன்றும் பெண்கள் யாவரும் குழந்தைகளைப் பெறுவதனால் செல்வச் செலாவணிச் சிக்கல்கள் பல தோன்றும்; மானிட வாழ்க்கையே பெரிய போராட்ட மாகிவிடும். ஆகையால், பெண்கள் இத்தகைய சிக்கலான வாழ்க்கைக்கு முட்டுக்கட்டையாக இருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

இயற்கையின்கண் அழியாத சட்டமாக விளங்குவது வாழ்க்கைச் சிக்கனச் சட்டம். இயற்கையின் சிக்கனச் சட்டத்தின்படி, எல்லா மரங்களும் காய்க்க இயற்கை இடங்கொடுப்பதில்லை. எல்லா விதைகளும் முளைப்பதற்கு இடந் தருவதில்லை. நோயுற்றதும், நொந்ததும், பழுதுற்றதுமாகிய எதுவும் தோன்ற இயற்கை விடுவதில்லை. இயற்கை அன்னை அரிவாள் ஏந்திப் பயனற்றவைகளை ஓயாமல் அறுத்தெறிகிறாள். குச்சிக்காலும், கூடு தட்டிய மார்பும், சோகையும், இரத்தக் குறைவும் உடைய பெண்கள் குழந்தைகளைப் பெறுவதிலும் பெருமையே நன்று! சுகாதார விதிப்படியே ஆரோக்கிய நிலையில் எத்தனை பெண்கள் இருக்கிறார்கள் என்று பாருங்கள். குழந்தையைப் பெற்று வளர்க்கக் கூடிய உடற் கூறும், திட சரீரமும், மன அமைப்பும் உடையவராக நூற்றுக்கு அறுபது பேர் இருப்பார்களா என்

தெய்வத்துக்கு அடுத்தபடியாகக் குழந்தைகளை வைத்து வந்திருக்கிறார்கள் நம் முன்னோர்கள். (குழந்தைகளே வேண்டாம்) என்று சொல்ல,—அதுவும் 'சக்தி' அம்சமான 'மாயை' சொல்ல—க் காரணம் என்ன? நல்ல ஆராய்ச்சி புதிய பார்வைக் கோணம்.

பது சந்தேகமே. நாளுக்கு நாள் நிலத்திலிருந்து வருகின்ற உணவுப் பொருள்கள் போதாமையால் செயற்கை முறையாக உணவைத் தயாரிக்க என்ன செய்யலாம் என்று மனிதன் சிந்திக்கும் இந் நாட்களில், போஷிப்புக் குறைவு அதிகமாக இருக்கிறது. உணவு அகப்படாத நெருக்கடியில் நூற்றுக்கு அறுபது பெண்கள் குழந்தை வேண்டும் என்று கருதி, கல கல எனப் பல மக்களைப் பெறுவாராகில் அந்தக் குழந்தைகளின் சுக நிலை எப்படி இருக்கும்?

எளிதில் குழந்தைகளைப் பெற்று விடலாம். இயற்கை அன்னை இதற்குப் பலவகையில் உதவி புரியலாம். ஆனால், பெற்ற குழந்தைகளை ஊட்டி வளர்ப்பதும், அந்தக் குழந்தைகளின் உடல் வளர்சிக்கு ஏற்றவாறு மன வளர்ச்சி அளிப்பதும் எவ்வளவு கஷ்டமான காரியம்! நமது நாட்டில் உள்ள நாற்பது கோடி மக்களில் எத்தனை பேர் உணவில் அமைந்திருக்க வேண்டிய உணவுச் சத்துக்களின் அளவு குறையாதபடி சாப்பிடுகிறார்கள்? ஏராளமான செல்வம் உடையவர்களே உணவில் போஷிப்பு அம்சங்கள் குறையாமல் சாப்பிடும் நிலையில் இருக்கிறார்கள். மூளையை வளர்க்கச் சில போஷிப்பு அம்சங்கள் தேவை. எலும்பை வளர்க்க மற்றொரு வகையான போஷிப்பு அம்சங்கள் தேவை. தசையை வளர்க்க வேறொரு வகையான போஷிப்பு அம்சங்கள் தேவை. கோணிப்பைக்குள் வைக்கோலைத் திணிப்பதுபோல் குழந்தைகளின் வயிற்றில் சோற்றைத் திணித்தால், அந்தக் குழந்தை உடலின் சகல பாகங்களும் சரியாக வளருமா? உடலையே வளர்க்க முடியாத நிலையில் இருக்கின்ற பொழுது. குழந்தையின் மன வளர்ச்சியைத் தான் கவனிக்க முடியுமா? ஆண்டு தோறும் உயர்தரக் கல்வியை நாடி வருகின்ற மாணாக்கர்களுக்கு இடம் இல்லை என்று சொல்லி வெளியே தள்ளி விடுகின்ற நிலைமையில் நமது நாட்டுக் கலாசாலைகள் இருக்கின்றன. கலாசாலைகளை அதிகப்படுத்தலாம் என்றாலோ அதற்கு நாட்டின் செல்வ நிலை சரியாக இல்லை. ஆரம்பக் கல்வியையாவது குழந்தைகளுக்குக் கட்டாயப் படிப்பாக்கலாம் என்றாலோ, அதற்குப் போதுமான பணம் இல்லை என்று அரசாங்கம் கூச்சலிடுகிறது. நம்மை இதுகாறும் ஆட்சி செய்தவர்கள் நமது சத்துச் சாரத்தை யெல்லாம் உறிஞ்சிக் குடித்து விட்டார்கள். இத்தகைய நிலையிலே, பெண்கள் குழந்தைகளை அளவில்லாமல் பெற்றுத் தேரை விழுந்த பிள்ளையும், சோகை பிடித்த பிள்ளையுமாக நாடெங்கும் நிரப்பி வைத்தால், வருங் காலத்தில் பாரத தேசத்தின் வாழ்வு என்னவாகும்? ஆகையால், பெண்கள் குழந்தைகளைப் பெறாமல் இருப்பது நலம் அன்றோ?

வாழ்க்கைத் தேவை அதிகமாக இல்லாமல், குறைந்த வருமானத்தில் வாழ்கின்ற மக்களின் எண்ணிக்கை மிகப் பெரியது. இதற்கடுத்தபடியாக நடுத்தர வகுப்பினர். இவர்களுடைய வருமானத்தைப் பார்க்கிலும் தேவைகள் அதிகமாக இருக்கின்றன. கலாசாலைகளில் பெரிய பட்டங்கள் பெற்று, எண்ணிறந்த காரியாலயங்களில் வேலை பார்க்கின்றவர்கள் இந்த வகுப்பைச் சார்ந்தவர்களே. இவர்களில் பெரும்பாலோர் தமது வருமானம் மக்களைப் பெறும் மனைவியோடு வாழ்வ

தற்குப் போதாதென்று கருதிக் கலியாணம் இல்லாமலே வாழ் நாளைக் கழிக்கிறார்கள். இந்த வகுப்பிலேதான் பல பெண்களும் கலியாணம் இல்லாமல் வாழ்கிறார்கள். இதற்கு மேலான வகுப்பைச் சார்ந்தவர்கள் ஏராளமான செல்வம் உடையவர்கள். இந்த வகுப்பைச் சார்ந்த பெண்கள் விவாகமாகாமல் இருப்பதில்லை. முந்திய வகுப்பிலும் பிந்திய வகுப்பிலும் பெண்கள் மணந்து, கணவரோடு வாழ்ந்து, மக்களைப் பெறுகின்றனர். இடை வகுப்பினருக்குள்ளே எத்தனையோ பெண்களும் ஆண்களும் கலியாணம் செய்யாமல் வாழ்நாளைப் போக்க நேரிடுகிறது. முந்திய வகுப்பினருக்குள்ளே குழந்தை வேண்டும், வேண்டாம் என்ற பிரச்னை எழாமலே ஆண்களும் பெண்களும் சந்தான உற்பத்தியைக் குறைவின்றிச் செய்கிறார்கள்; இடை வகுப்பினருக்கும், பணம் பெருத்த மேல் வகுப்பினருக்கும் தொண்டு செய்யும் பெரிய ஜனத் தொகையை வளர்த்து வருகிறார்கள். இங்ஙனம் அடிமை மனப்பான்மை உடைய பெரிய ஜன சமூகமொன்று தயாராகி வருகிறது. இடை வகுப்பினரிடையே கல்வி பெருகி வருகிறது; விவாகமில்லாத ஆண் பெண்களின் தொகை பெருகி வருகிறது. மேல் வகுப்பினரிடையே பெண்களும் ஆண்களும் சந்தான உற்பத்தியை மட்டுப்படுத்தக் கூடிய வசதிகளை உடையவர்களாகவும், பிறக்கின்ற குழந்தைகளைப் பேணி வளர்க்க வசதிகள் உடையவர்களாகவும் இருக்கிறார்கள். இவர்களுக்குள் எந்தப் பெண்ணாயினும், தனக்கு ஒன்றிரண்டு குழந்தைக்குமேல் வேண்டாம் என்று கருதுவாளாயின், அவள் அதற்குத் தேவையான வழிமுறைகளைக் கையாளத் தகுந்த நிலையில் இருக்கிறாள். அவளுக்குப் போதிய பண உதவியும் பிற உதவிகளும் கிடைக்கும்.

மேலே சொன்ன மூன்று வகுப்பாரில் நடு வகுப்பைச் சார்ந்த பெண்கள் குழந்தை வேண்டும் என்று விரும்புதல் எங்ஙனம்? சாக அடிக்கக் குழந்தைகளைப் பெறுவதா? அன்றி, வறுமையால் வாடக் குழந்தைகளைப் பெறுவதா? இவர்கள் தங்கள் வாழ்நாள் எல்லாம் இயற்கையாக உடலில் ஏற்படும் சந்தான வேட்கையைத் தணிக்காமல் வாழ்வதுதான் எளிதா? இந்த வகுப்பினர் கல்வியில் தேர்ந்தவர்கள். ஆகையால் சந்தானத்திற்கு வழியில்லாமலே சந்தான வேட்கையைத் தடுக்கும் உபாயத்தைச் சிந்தியாமல் இருப்பரோ? இந்த வகுப்பினருக்குள்ளேதான் பால்

சர்வாதிகாரம்!

தன்னுடைய கடற் படை ஆட்களை ஒரு தொத்து வியாதி பிடித்த போது, ஜார் பீட்டர் "உடனே சொஸ்த மடை" யுமாறு அவர்களுக்கு உத்தரவு போட்டாராம்.

ஏழாவது நூற்றாண்டில் வாழ்ந்த ஊஹூ என்ற சீன மகாராணி, தான் கட்டளையிடும்போது மலராத புஷ்பச் செடிகளையெல்லாம் வேரோடு பிடுங்கி யெறியச் செய்தாளாம்.

ஸெர்ஸஸ் என்ற பாரசீக தேசத்து ராஜா, தன் கட்டளைப்படி கட்டி முடிக்கப்பட்டிருந்த ஒரு பாலத்தைப் புயற் காற்று நாசம் செய்து விட்டதற்காக, தண்ணீர்ப் பரப்புக்கு மூந்நூறு சவுக்கடி கொடுக்கும்படிக் கட்டளையிட்டானாம்.

—ஜான் கட்லர்

மயச் சிக்கல்கள் ஏராளமாகத் தோன்றுகின்றன. இந்த வகுப்பைச் சார்ந்த பெண்கள் சமூகக் கட்டுபாட்டை மீறி மேல் வகுப்பினருக்கு இரண்டாவது தாரமாகவும் மூன்ருவது தாரமாகவும் அமைகிருர்கள். நவீனப் புனைக் கதைகளுக்குப் பொருத்தமான பல சம்பவங்கள் இந்த வகுப்பினருக் குள்ளே நிகழ்வதைக் காணலாம். சிக்கலான நிலையில் இருக்கிற இந்தப் பெண்கள் எப்படிக் குழந்தை வேண்டும் என்று விரும்ப முடியும்? வருமானக் குறைவோடு மற்ற இரு வகுப்பினருக்கும் தொண்டு புரிகின்ற வகுப்பைச் சார்ந்த பெண்கள் நாள்தோறும் அடிமைகளாகக் குழந்தைகளைப் பெற வேண்டும் என்று விரும்புவது உசிதமாகுமா? எப்படிச் சிந்தித்துப் பார்த்தாலும் குழந்தை வேண்டாம் என்றே தோன்றும்.

வாழ்க்கையின் தலையான நோக்கம் குழந்தைகளைப் பெறுவது தானு? உலகத்தில் தோன்றிய எண்ணிறந்த மேதாவிகள் குழந்தைகள் இல்லாமலே வாழ்ந்தவர்கள். சிறந்த ஓவியக் காரர்கள் விவாகம் இல்லாமலே இருந்தார்கள். குழந்தைகளுடைய மனத்தை ஆராய்ந்த மாண்டிசோரி முதலான புகழ் பெற்ற மானஸ சாஸ்திரிகள் குழந்தைகளைப் பெருதவர்கள். சொந்தக் குழந்தைகளை உடையவர்கள் தங்கள் குழந்தைகளைப் பற்றியே பிரமாதமாகப் பேசுவார்கள். தங்களுடைய குழந்தைகளைப் பிற குழந்தைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்துத் தங்கள் பிள்ளைகளை மெச்சிப் பேசுவார்கள். இவர்களால் பாரபக்ஷ மில்லாமல் பிறருடைய குழந்தைகளை ஆராய முடியாது; பிறருடைய குழந்தைகளிடம் அன்பு பாராட்டவும் முடியாது. குழந்தைகளைப் பெருத பெண்களே இன்று உலகத்தின் பல பாகங்களில் அநாதைக் குழந்தைகளுக்காகப் பெரிய அநாதைச் சாலைகளை நடத்துகிருர்கள்.

மனிதனுடைய முழு ஆற்றல்களும் பரிபூரணமாக வெளிப்படுவதற்குப் பெரிய தடையாக இருப்பது இல்லற வாழ்க்கையும், சந்தான உற்பத்தியுமேயாம். இதன் பொருட்டே ஆன்மச் சக்திகளை அடையும் பொருட்டுத் துறவிகளாக வேண்டும் என்று நம் முன்னேர் கூறினர். ஒளவை குழந்தைகளைப் பெற்ருளோ இல்லையோ என்று அறியோம். ஆண்டாள் குழந்தைகளைப் பெறவில்லை. மீரா குழந்தைகளைப் பெறவில்லை. என்ருலும், சந்திர சூரியர் உள்ளளவும், பாடுந்தோறும் இன்பம் அளிக்கும் பாடல்களை நமக்கு அரிய செல்வமாக வைத்துப் போயினர். ஸ்ரீராமகிருஷ்ணரின் மனைவியார் மக்களைப் பெற்றவர் அல்லர். குழந்தையைப் பெற்றிருந்தால் தமது கணவர் தழுவிய அந்தத் திவ்ய நெறியை எவ்வாறு தழுவி இருக்க முடியும்? யாக்ஞ்யவல்க்கியரோடு தத்துவ ஞான வாதம் செய்த கார்க்கி விவாகம் ஆனவள் அல்லள். அவள் மொழிந்த அரிய வினக்கள் இன்றும் உபநிஷத்துக்களில் விளங்குகின்றன. புத் என்னும் நரகினின்று விடுதலை செய்ய ஓர் புத்திரன் வேண்டும் என்று வற்புறுத்துகின்ற நமது நாட்டிலே மேலோட்டமாக இத்தனை பெண்களைத் திருஷ்டாந்தமாகக் காட்டக்கூடுமானல், மேலை நாடுகளில் குழந்தையைப் பெருமல் வாழ்க்கையைப் பயன் பெறச் செய்த பெண்மணிகளை, ஓயாமல் சாபிதா வரைந்து காட்டலாம். நமது நாட்டில் விவாகம் வேண்டாம்,

குழந்தையும் வேண்டாம் என்னும் விரத முடையவர்களாகப் பல பெண்கள் கிளம்புவார்களாயின், விரைவிலே பெண் பள்ளிக்கூடங்கள் பல நிலையாகத் தோன்றும். இன்று பெண் பள்ளிக்கூடங்களுக்கு இருக்கின்ற பெரிய சங்கடம், சிறிது காலம் உபாத்தினிகளாக வேலை பார்க்கும் பெண்கள் தங்கள் அனுபவ ஞானத்தை அந்தப் பள்ளிக்கூடங்களுக்குப் பயன்படுத்தாமல், கலியாணம்செய்துகொண்டு இல்லற வாழ்க்கையில் புகுந்து விடுவதேயாம். நாடு உயர்ந்த நிலைக்கு வர வேண்டுமாயின், மக்களைப் பெற்று வளர்க்க வசதி இல்லாத பெண்கள் விவாகம் இல்லாமலும், குழந்தைகளைப் பெறாமலும், தேசத்தின் க்ஷேமத்திற்குத் தங்களைத் தத்தம் செய்ய வேண்டும்.

குழந்தையைப் பெறுவதுதானா ஆறறிவுடைய பெண்ணாய்ப் பிறந்ததின் சிறந்த குறிக்கோள்? குழந்தைகளைப் பெறாத பெண்கள் நாட்டுக்கு உதவாதவர்களாகிவிடுவார்களா? வீட்டுக்கு உதவாதவர்களாகிவிடுவார்களா? ஆண்களைப் பார்க்கிலும் அதிகமான தன்னடக்கமும், கற்பைக் காக்கும் வல்லமையும் உடைய பெண்கள் தேசத் தொண்டர்களாகி எண்ணிறந்த ஞானத் துறைகளிலே உழைக்க முடியாதா? குழந்தையைப் பெற வேண்டும் என்பது மிருகங்களிடத்திலே காணப்படும் கீழான காம வேட்கையோடு கலப்புற்றிருப்பது. குழந்தை வேண்டாம் என்பதே பிறர் பொருட்டு வாழ்கின்ற துறவிகளின் சீரிய மனப்பான்மையைச் சார்ந்தது. இன்று நமது நாடு, எல்லாப் பெண்களும் குழந்தைகளைப் பெற வேண்டும் என்று வற்புறுத்துகின்ற நிலையில் இல்லை. குழந்தை வேண்டும் என்று விரும்பி நாட்டின் வறுமையைப் பெருக்க நாம் ஏன் [illegible]மாக வேண்டும்?

88863

சக்தி மாத வெளியீடு

தனிப்பிரதி 'தபால்'	0	8	ஆறு மாதம்	3	8
ஒரு வருஷம்	6	0	2 வருஷம்	11	0

ரெஜிஸ்டர் மூலம் பெற விரும்புவோர் பிரதி ஒன்றுக்கு 0-3-0 விகிதம் சேர்த்து அனுப்பவேண்டும்

பர்மா

தனிப்பிரதி	0	9	ஆறு மாதம்	4	0
ஒரு வருஷம்	7	0	2 வருஷம்	13	0

மலேயா, முதலிய வெளி நாடுகளுக்கு

தனிப்பிரதி	0	10	ஆறு மாதம்	4	8
ஒரு வருஷம்	8	0	2 வருஷம்	15	0

SHAKTI KARYALAYAM : : MADRAS—14.

என்ற விலாசத்திற்குச் சந்தாத் தொகை அனுப்பவேண்டும்

சோதிடப் பொய்

●

"பாரதியன்"

சோதிடர் சோதிடர் என்று கத்தும்
சூதர்தம் சொல்வலைச் சுருக்கிற் பட்டு,
வீதியில் நடப்பதற்கும் சோதி டத்தின்
விதிதன்னை ஆராயும் வீணர்! கேளீர்!

கோள்நிலை யறிந்தார்போல் நம் மனத்தின்
கோணலை அறிந்துமே கெடுத் திடுவார்
பாழ்சொலை நம்பியே பங்க முற்றுப்
பதைத்தலேன் செய்கின்றீர் பாரி னீரே?

முந்துமொரு காரியத்தை முடிக்க வெண்ணி
மூளும்நன் முயற்சியொடு முனைந்து சென்றால்,
வந்தெதிரில் நின்(று), "எனது வார்த்தை கேளும்;
வழிகொள்ளுந் திசையிலே சூலம்" என்பார்.

சூலமென்ப தெத்திசையும் சூழ்ந்து நின்று
துயரழிக்கும் 'சக்தி'கைப் படையதன்றோ?
கால்கொள்ளுந் திசையிலது காத்து நின்றால்
கரப்பதேன் எதிர்திசையில்? கவனம் செய்வீர்.

'தயிர்கொண்டு போனாலோ சாந்தி' யென்பார்;
'தனிச்சுவை வெல்லத்தாற் சாந்தி' யென்பார்
உயிர்கொள்ளுங் காலனை ஓட்டும் மின்னல்
உறழ்சூலம் தயிருக்கும் அஞ்சுமோ தான்!

காலையொரு நாள்எனது கட்டிலின் மேல்
கவலையாய் அமர்ந்திருந்த காலந் தன்னில்
மேலிருந்த முகட்டினின்று மெலிந்த பல்லி
மெதுவாக வலக்கரத்தில் வீழ்ந்த தன்றே.

வீழ்ந்தவுடன் விதிர்த்து மெய் பரபரக்க
விரித்தனன் பஞ்சாங்கம்; வியன் எழுத்தில்
"மாய்ந்திடு வான்"என்னும் மாற்றங் கண்டேன்.
மறந்தான்கொல்! எமன் இன்னும் வாழும் என்னை.

பிறிதுமொரு பஞ்சாங்கம் புரட்டிப் பார்க்க
"பீடை"யென அதிற்கண்டு பேதுற்ற பின்
சிறிதுபோ திற்பல்லி கட்டில் காற்கீழ்
சிக்குண்டு சிதைந்துமெய் செத்த தையோ!

எனக்குறும் இன்னல்கள் எடுத் துரைத்த
ஏழையாம் பல்லிக்கோ இப் பலன்கள்?
கணக்கினால் உலகையே கலங்க வைக்கும்
கணிதரே! கூறுவீர் காரணம் தான்.

'மரண'மென்றும் 'பீடை'யென்றும் மருண்ட வுள்ள
மயக்கமது தீர்ந்தபின் மதி தெளிந்தேன்
திரணம்இனிச் சோதிடத்தை நம்ப லொண்ணேன்
தீர்ந்ததாம் பொய்பலவும் சேர்த லானே.

லைப்பாய் பழக்கத்தைக்கூட அவள் கற்றிருக்கிறாள்!

ஊசியால் தைக்கும் போதெல்லாம் பிரயோஜனமுள்ள ஒரு சிறு பெண்ணாவதற்கு அவள் கற்றுக்கொள்ளுகிறாள். நாள்தோறும் லைப்பாய் சோப்பை உபயோகிக்கும் பழக்கத்தை அவள் அறிந்திருக்கிறபடியால் ஆரோக்கியமுள்ள ஒரு பெண்ணாக அவள் வருவாளென்றும் தன் தாய்க்குத் தெரியும். ஆரோக்யத்திற்கும், பலத்திற்கும் கண்ணுக்குத் தெரியாத சத்துருவாகிய அழுக்கு அபாயத்திலிருந்து இப்பழக்கம் அவளைப் பாதுகாக்கிறது.



லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது. அது ஒரு நல்ல பழக்கம்

L 81-50 TM

LEVER BROTHERS (INDIA) LIMITED

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

மதுரை மில்ஸ் கம்பெனி
லிமிடெட்

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

எங்களுடைய விசேஷமான நூல்கள்:

5,00,000 நூற்கும் கதிர்கள்	ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சீஸ் நூல், முறுக் கேற்றிய நூல்.	நம்பர் 80 வரை நூல்கள்

●

நாங்கள் சப்ளை செய்வது:

கைத்தறி, இயந்திரத்தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக்கேற்ற வார்ப்பு நூல்கள், கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக்கேற்ற மிருதுவான சன்ன நூல்கள்.

எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப் போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றது.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

●

ஐக்கிய மாகாண சர்க்கார் தங்கள் அறிக்கையில், இந்தியாவிலே நூற்கப்படும் நூல்களில், எங்கள் நூல்கள் மிருதுத் தன்மைக்கும், சன்னத்திற்கும், நேர்த்திக்கும், அழுத்தத்திற்கும் மிகச் சிறந்தவை யென்றும், எல்லா நெசவு தொழிலாளர்களும் விரும்புவதாகவும் கூறுகிறார்கள்.

தற்காலம் நூல் விநியோகம் கட்டுப்பாடு செய்யப்பட்டிருப்பதால், உங்கள் தேவைக்கு உங்கள் மாகாணம் அல்லது ஸ்டேட்டில் உள்ள துணிக் கட்டுப்பாடு அதிகாரிக்கு விண்ணப்பித்துக் கொள்ளவும்.

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,
மானேஜர்கள்

மார்க்ஸீயப் பொருளாதாரம்

ரா. ஹாலாஸ்யநாதன்

V

ஆதிகாலத்தில் சுய தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகவே பொருள்கள் உற்பத்தி செய்யப்பட்டதென்றும், பின்னர் ஒரு பகுதி விற்கப்பட்டதென்றும், கடைசியில்—முதலாளித்துவச் சமூகத்தில் - விற்பனைக்காகவே உற்பத்தி செய்யப்படுகிறதென்றும் குறிப்பிட்டோம்.

இப்பொழுது முன்போல் பண்டமாற்றுதல் பழக்கத்தில் இல்லை. பொருளைப் பணமாக்குகிறோம். பணத்தைப் பொருளாக்குகிறோம். ஆகவே, பொருள்களை வாங்கவும், விற்கவும், பொருள்களின் மதிப்பைத் தெரிவிக்கவும் பணம் பேருதவி புரிகிறது.

பணம் என்பதென்ன, அது எப்படிப் புழக்கத்திற்கு வந்தது என்பதை ஆராய்ந்து பார்ப்போம். முதலாளித்துவப் பொருளாதார நிபுணர்கள் பணத்தைப் பெரிய புதிராகவே கூறுகிறார்கள். கார்ல் மார்க்ஸ்தான் பணத்தின் சுய சொரூபத்தை வெளிப்படுத்தினர்.

ஆதி காலத்தில் ஏதேனும் ஒரு பொருளை இன்னொரு பொருளுக்கு மாற்றினர்கள். குருட்டுத்தனமாக இந்தப் பண்டமாற்றுதல் நடந்தது. அதாவது, ஒரு மிருகத்தின் தோலை இரண்டு ஈட்டிகளுக்கு விற்றார்கள் என்று வைத்துக்கொள்வோம். இதை அகஸ்மாத்தாக நடந்த, அல்லது சர்வ சாதாரணமான மதிப்பின் வடிவம் என்று அழைக்கிறோம்.

இந்த உதாரணத்தில், ஒரு தோலின் மதிப்பை இரண்டு ஈட்டிகளின் மதிப்பு மூலமாகத் தெரிந்துகொண்டோம். அதாவது, தோலின் மதிப்பு என்ன என்று நேரடியாகத் தெரிவிக்கவில்லை. மற்றொரு பொருளோடு உள்ள உறவால் மதிப்பைத் தெரிவித்தோம். இதைத்தான் "சார்ந்து நிற்கும் மதிப்பின் வடிவம்" என்று அழைக்கிறோம்.

பொருள்களை மாற்றும் பழக்கம் சமூகத்தில் அதிகரிக்கவும், இரண்டு பொருள்கள் மாத்திரமல்ல, பல பொருள்கள் மாற்றப்படுகின்றன. உதாரணமாக, ஒரு தோலை இரண்டு ஈட்டிகளுக்கு மாத்திரம் மாற்றாமல் ஒரு ஜோடி செருப்புக்கும், ஒரு கஜம் துணிக்கும், ஒரு மூட்டை அரிசிக்கும் மாற்றத் துவங்குகிறோம். இதை "விரிவடைந்த மதிப்பு வடிவம்" என்று அழைக்கிறோம். அதாவது ஒரு பொருளின் மதிப்பை வெவ்வேறு பொருள்கள் மூலமாகத் தெரிவிக்கிறோம்.

இதை வேறு விதமாகச் சொல்வதென்றால், இரண்டு ஈட்டிகள், ஒரு ஜோடி செருப்பு, ஒரு கஜம் துணி, ஒரு மூட்டை அரிசி = ஒரு தோல். இதற்குப் "பொதுவான மதிப்பு வடிவம்" என்று பெயர். இதில், பல்வேறு பொருள்களின் மதிப்பு ஒரு

பணம் என்றால் என்ன, தொழிலாளர்களின் உழைப்புச் சக்தியின் மதிப்பை எப்படி நிர்ணயிப்பது ஆகியவை இந்தக் கட்டுரையில் விவரிக்கப் படுகின்றன. அடுத்த கட்டுரையில் முதலாளிகள் எப்படித் தொழிலாளர்களைச் சுரண்டி வருகிறார்கள் என்பது விஞ்ஞான ரீதியில் ஆராயப்படும்.

பொருளின் மூலமாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆக, பொருள்கள் மாற்று மதிப்புக்களாக உருவெடுக்கின்றன. இந்தக் காலக் கட்டத்தில்தான் லோகங்களும் பல பொருள்களின் மதிப்பைத் தெரிவிக்க பொதுப் பொருள்களாக மாறுகின்றன. இறுதியில் பணமும் தலை தூக்குகிறது.

தங்கம் அல்லது வெள்ளி, ஆபரணங்களுக்கும், பாத்திரங்கள் செய்வதற்கும், ஏனைய விஷயங்களுக்கும் பயன்படுகின்றன. ஒரு மூட்டை அரிசியைக் கொடுத்து 2 அவுன்ஸ் தங்கக் கட்டியை வாங்கினார்கள். எனவே, தங்கமும் ஒரு பொருளாகவே இருந்தது. அதன் மதிப்பையும், அதை உற்பத்தி செய்ய எவ்வளவு உழைப்பு நேரம் தேவையாக இருந்தது என்பதை வைத்துக் கொண்டு நிர்ணயித்தார்கள். உதாரணமாக, ஒரு தோலை 2 அவுன்ஸ் தங்கத்திற்கு மாற்றினார்கள். 2 ஈட்டிகள், ஒரு ஜோடி செருப்பு, ஒரு தோல், ஒரு மூட்டை அரிசி=2 அவுன்ஸ் தங்கம் எனப் பண்டமாற்றுதலுக்குப் பொதுப் பொருளாக உபயோகிக்கத் துவங்கினார்கள்.

தங்கம் அல்லது வெள்ளிக்குப் பல அலாதியான குணங்கள் இருக்கின்றன. அவை அழியாத பொருள்கள். அனேகமாக எல்லா இடங்களிலும் கிடைக்கின்றன. தூக்கிச் செல்வதற்கும் எளிதாக இருக்கின்றன. எனவே, ஏனைய பொருள்களின் மதிப்பைத் தெரிவிக்கும் பொதுப் பொருளாக மாறின. பின்னர் இதற்குப் பணம் என்ற பெயர் கொடுக்கப்பட்டது.

ஆதி காலத்தில், இங்கிலாந்தில் இப்பொழுது பவுன் என்று சொல்லப்படும் பணத்திற்குப் பவுண்டு என்று பெயர். அதாவது ஒரு பவுண்டு தங்கம், மதிப்பை அளக்கும்போது அளவு கோலாக இருந்தது. ஆதி காலத்தில் அடிமைகளும், பின்னர் ஆடு மாடுகளும், கடைசியில் உலோகங்களும் பண்டமாற்றுதலுக்குப் பொதுப் பொருள்களாகப் பயன்படுத்தப்பட்டன. தங்கமும், வெள்ளியும் முதலில் ஏனைய பொருள்களைப் போல் இருந்து, பின்னர்தான் பணமாக மாறிற்று.

இப்பொழுது பொருள்களை நேரடியாக மாற்றுவது கிடையாது. பொருளை விற்றுப் பணம் வாங்கி, பின்னர் பணத்தைக் கொடுத்து நமக்கு வேண்டிய பொருள்களை வாங்குகிறோம். ஆகவே, பொருள்களை மாற்றும் பொழுது பரிவர்த்தனை செய்ய ஒரு பொதுப் பொருளாகப் பணம் உபயோகப்படுகிறது.

பணம் பல வேலைகளைச் செய்கிறது. ஒரு பொருளை ஒரு குறிப்பிட்ட அளவு பணத்திற்கு விற்கிறோம். இந்தப் பணத்தைப் பொருளின் விலை என்று கூறுகிறோம். ஆகவே, விலையென்பது பொருளின் மதிப்பைப் பணத்தின் மூலமாகத் தெரிவிப்பது தான். அதாவது, ஒரு பொருளின் மதிப்பைப் பணத்தின் மூலமாக அளவிடுகிறோம்.

ஆனால், மதிப்பை நிர்ணயிக்கும் அளவாக இருக்க வேண்டுமானால், பணமும் ஒரு பொருளாக இருக்க வேண்டும், அதற்கும் மதிப்பு இருக்க வேண்டும் என்பதை மறந்துவிடக் கூடாது. பளு வில்லாத பொருளின் மூலமாகப் பளு வுள்ள பொருளை நிறுக்க முடியுமா?

முதலாளித்துவப் பொருள் உற்பத்தி முறையில், மக்களுக்கிடையே உற்பத்தி உறவுகள்,

பொருள்களுக்கு இடையே உள்ள உற்பத்தி உறவுகள் போல் தோன்றுகின்றன. ஒரு தோல் தொழிலாளி இரண்டு செருப்புகளை விற்று, அந்தப்பணத்தை வைத்துக்கொண்டு ரொட்டிக் கடைக்காரனிட மிருந்து ரொட்டி வாங்குகிறான். இப்பொழுது நமக்கு உற்பத்தி உறவு தெரிகிறது. அதாவது, உற்பத்திக்குத் தக்கபடி மனிதர்களுக்கிடையே உறவு ஏற்படுகிறது. ரொட்டிக் கடைக்காரன் உற்பத்தி செய்த ரொட்டி, தோல் தொழிலாளியின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. தோல் தொழிலாளி செய்த செருப்புகள், ரொட்டிக் கடைக்காரனின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஆகவே, ரொட்டிக் கடைக்காரனின் உழைப்பு, தோல் தொழிலாளியின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. அதே மாதிரியாகத் தோல் தொழிலாளியின் உழைப்பு ரொட்டிக் கடைக்காரனின் தேவையைப் பூர்த்தி செய்கிறது. ஆகவே, இருவருக்குமிடையே குறிப்பிட்ட உறவு ஏற்படுகிறது; உற்பத்திக்குத் தக்கபடிக் குறிப்பிட்ட உறவு ஏற்படுகிறது. ஆனால், இந்தத் தொடர்பு எப்படித் தெரிவிக்கப்படுகிறது? பொருள்களை மாற்றும் பொழுது இந்த உறவு வெளிப்படுகிறது. பொருள்கள் ஒருவரிட மிருந்து மற்றொருவருக்கு மாற்றப்படுகிறது. இவ்வாறு முதலாளித்துவ உற்பத்தி முறையில், மனிதர்களுக்கிடையே உள்ள உற்பத்தி உறவு, பொருள்களுக்கு இடையே யுள்ள இயக்கத்தின் மூலமாகத் தெரிவிக்கப்படுகிறது. பொருள்களை உற்பத்தி செய்யும் மனிதர்களுக்கு இடையே உள்ள உறவு மதிப்புதான். ஆனால், பொருள்களின் இயக்கம் இதை யறைக்கிறது. அரைப் பவுண்டு எடையுள்ள இந்த ரொட்டி நாலணா என்று சொல்லுகிறார்கள்.

உற்பத்தியாளர்களின் தலைவிதி, அவர்கள் உற்பத்தி செய்யும் பொருளோடு பின்னிப் பிணைந்து கிடக்கிறது. ரொட்டிக் கடைக்காரன் சந்தையில் ரொட்டி விற்கப் போகும் பொழுது, அதை வாங்குவதற்கு ஒருவரும் இல்லை; அல்லது குறைந்த விலைக்குக் கேட்கிறார்கள். காரண மென்ன? பொருளாதார வாழ்க்கையிலும், மனிதர்களின் உற்பத்தி உறவிலும் மாற்றம் ஏற்பட் டிருப்பதே காரணம். பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது, அல்லது கூலி குறைக்கப்பட்டதால், ரொட்டியை முன்போல் வாங்கவில்லை. ஆகவே, ரொட்டிக் கடைக்காரனுக்கும், உற்பத்தி உலகத்திற்கும் இடையே யுள்ள தொடர்பு, அவனது பொருளில் பொதிந்து கிடக்கிறது. அதாவது, ரொட்டியில்—சந்தையில் பணமாகக் கிடைக்கும் மதிப்பில்—பொதிந்து கிடக்கிறது. சமூகத்தில் மனிதர்களுக் கிடையே யுள்ள உற்பத்தி உறவுகள் பொருள்களுக்கு இடையே யுள்ள உறவுபோல் தோன்றுகிறது...

இனி, முதலாளிகள் தொழிலாளர்களை எப்படிச் சுரண்டுகிறார்கள் என்பதையும், எப்படி முதலாளிகள் பணக்காரர்கள் ஆகிறார்கள் என்பதையும், எப்படித் தொழிலாளர்கள் வரவர ஏழைகளாக மாறுகிறார்கள் என்பதையும் ஆராய்ந்து பார்க்கலாம்.

முதலில், மூலதனம் பண வடிவத்தில் தோன்றுகிறது. ஆகவே, சிறிய முறையி லிருந்த தொழிலை,

முதலாளித்துவ முறைக்குப் பணம் மாற்றுகிறது.

ஒரு குறிப்பிட்ட கட்டத்தில், பணம் மூலதனமாக மாற்றப்படுகிறது. முதலில் பொருளை விற்றுப் பணத்தை வாங்கி, பின்பு பணத்தைக் கொடுத்துப் பொருள் வாங்குகிறார்கள். மூலதனம் தலைதூக்கவும், பணத்தைக் கொடுத்துப் பொருளை வாங்கி, பொருளை விற்றுப் பணம் வாங்குகிறார்கள்.

முதலில் கூறிய முறையில், ஒரு பொருளை இன்னொரு பொருளுக்கு மாற்றுகிறார்கள். பரிவர்த்தனைக்குப் பணம் உதவி புரிகிறது.

இரண்டாவதாகக் கூறிய முறையில், குறிப்பிட்ட பணத்தை வைத்துக்கொண்டு, முதலாளி சந்தைக்குப் போகிறான். பணத்தின் மூலமாகப் பொருள்களை வாங்குகிறான் பிறகு அதை விற்கிறான். அதிகப் பணத்திற்கு என்பதைக் குறிப்பிட வேண்டிய அவசியமேயில்லை. ஆகவே, 100 ரூபாய் மூலதனம் போட்டவர் கடைசியில் 110 ரூபாய் பெறுகிறார் என்று வைத்துக்கொள்வோம். 10 ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது. ஆனால், ஒரு பொருளின் உண்மையான விலைக்கு மேல் ஒருவரும் கொடுக்க மாட்டார்கள். ஆகவே, எப்படி லாபம் திரட்டி வருகிறார்கள்? முதலாளிகள் வாங்கும் பொருள், அதை உபயோகப்படுத்தும் பொழுது, மதிப்பை உண்டு பண்ண வேண்டும். அதிலிருந்து லாபம் கிடைக்க வேண்டும். இந்தப் பொருள் என்ன? முதலாளித்துவ முறையின் கீழ் அத்தகைய பொருள் இருக்கிறது. இந்தப் பொருளுக்குத்தான் உழைப்புச் சக்தி என்று பெயர். முதலாளித்துவச் சமூகத்தில் உழைப்புச் சக்தியும் ஒரு விற்பனைப் பண்டமாக மாறுகிறது என்று முன்பு குறிப்பிட்டோம். இதை எப்படி உபயோகிக்கிறார்கள், இதன் மதிப்பென்ன, எப்படிச் சுரண்டப்படுகிறது என்பதை அடுத்தபடியாக ஆராய்வோம்.

ஒரு தொழிலாளி வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களைப் பெற்றால்தான் உயிரோடிருக்க முடியும். அதாவது, உண்ண உணவும், உடுக்க உடையும், குந்தக் குச்சும் தேவை. இவ்வாறு அடிப்படையான சில தேவைகளைப் பூர்த்தி செய்தால்தான் மனிதன் வேலை செய்ய முடியும். ஒரு தொழிலாளி பட்டினியாக இருந்தால், உடுக்க உடையில்லாமலிருந்தால், வேலை செய்ய அருகதையற்றவனாவதோடு, உழைப்புச் சக்தியையும் இழக்கிறான். எனவே, உழைப்புச் சக்தியை உற்பத்தி செய்யத் தொழிலாளியின் அடிப்படையான சில தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென்பது தெளிவாகத் தெரிகிறது.

தொழிலாளியின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உடை, உணவு, வீடு, முதலிய பொருள்களை இலவசமாகப் பெற முடியாது. அவைகளை உற்பத்தி செய்யக் குறிப்பிட்ட அளவு உழைப்பு செலுத்தப்பட்டிருக்கிறது. இது அவைகளின் மதிப்பை நிர்ணயிக்கிறது. ஆகவே, உழைப்புச் சக்தி என்ற பொருளின் மதிப்பு, தொழிலாளி உயிரோடிருப்பதற்கும், தன்னை அண்டியிருக்கும் குடும்பத்திற்கும் தேவையான பொருள்களைப் பெறுகிறானே, அவைகளின் மதிப்புக்குச் சமம். குடும்பத்தையும் ஏன் சேர்த்துக் கொள்கிறோம், என்ற சந்தேகமெழலாம். எதிர்காலத்தில் முதலாளிகளுக்கு

உழைப்புச் சக்தி வேண்டாமா? (உழைப்புச் சக்தியைப் பெற்றிருக்கும் தொழிலாளி வேண்டாமா?) மேலும், இன்று இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்தால் தானே இழந்த உழைப்புச் சக்தியைப் புதுப்பிக்க முடியும்? "சராசரி ஒரு தொழிலாளியின் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களின் மதிப்புதான், உழைப்புச் சக்தியின் மதிப்பு" என்று கார்ல் மார்க்ஸ் "மூலதன"த்தில் குறிப்பிடுகிறார்.

இந்த உழைப்புச் சக்தி என்ற பொருளின் மதிப்புதான் கூலி.

முதலாளியிடம் கட்டடம், யந்திரம், மூலப் பொருள்கள் முதலியன அனைத்தும் இருக்கின்றன. இவைகள் தாமாகவே இயங்க முடியுமா? மனித உழைப்பு இல்லையென்றால் இவை பிணத்திற்குச் சமம். ஆகவே, தொழிலாளர்களை வாடகைக்கு முதலாளிகள் அமர்த்துகிறார்கள். வேலையும் இப்பொழுது ஆரம்பமாகிறது. உழைப்புச் சக்திக்கும், உழைப்பிற்கும் வித்தியாசமிருக்கிறது. உழைப்பு மதிப்பை உண்டு பண்ணுகிறது. ஆனால், அது தானாகவே ஒரு பொருளாக ஆக முடியாது. பொருள்தான் உழைப்புச் சக்தி. உழைப்புச் சக்தி உபயோகத்திலிருப்பது தான் உழைப்பு.

ஒரு பொருளின் விலை குறைவாகவோ அல்லது அதிகமாகவோ இருக்கலாம் என்று முன்பு குறிப்பிட்டோம். ஆனால், உழைப்புச் சக்தியின் விலை எப்பொழுதும் உண்மையான மதிப்பைவிடக் குறைவாகவே இருக்கிறது. தொழிலாளர்கள் வாழ்க்கைக்குத் தேவையான பொருள்களை எப்பொழுதும் பெறுவது கிடையாது என்பதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம்.

உழைப்புச் சக்திக்குச் சமமான கூலி கொடுக்காமல் முதலாளிகள் எப்படித் தொழிலாளர்களைச் சுரண்டுகிறார்கள் என்பதைப் பின்பு ஆராய்வோம்.

✲

கடவுளின் பிரேரணை!

பம்பாயிலிருந்து அரசியல் நிர்ணய சபைக்கு அபேட்சா பத்திரம் தாக்கல் செய்த 24 பேர்களில் கே. எம். பெனிகாரி என்பவரும் ஒருவர். அவருடைய பத்திரம் கீழ்க் கண்டபடிப் பூர்த்தி செய்யப் பட்டிருந்தது.

பிரேரிப்பவர்: கடவுள் ஆமோதிப்பவர்: தேசம்

ஆனால், தேர்தல் அதிகாரி, "கடவுளோ அல்லது தேசமோ பம்பாய் சட்ட சபையின் அங்கத்தினர்கள் அல்லவாதலால் இந்த அபேட்சா பத்திரம் நிராகரிக்கப் படுகிறது" என்று கூறிவிட்டார்!

முதலாளி பாஷை

யுத்தக் கைதியாக விருந்த ஓர் ஆங்கிலேயன், பிழையற்ற ஆங்கிலம் பேசிய ருஷ்ய அதிகாரி யொருவரைச் சந்தித்தான். தான் சுத்த ஆங்கிலம் பேசுகிறோ மென்பதில் அந்த ருஷ்யனுக்கு மிகுந்த கர்வம். அவன், ஆங்கிலேயன் பேசிய ஆங்கிலத்தை அடிக்கடித் திருத்த ஆரம்பித்தான்.

ஆங்கிலேயனால் இதைச் சகிக்க முடியவில்லை. 'ரொம்பச் சரி! நானே தப்பா யிருக்கலாம். ஆனால், நீ முதலாளியின் ஆங்கிலம் பேசுகிறாய். நான் பேசுவது தொழிலாளியின் ஆங்கிலமாக்கும்!" என்று ஒரு போடு போட்டான் அவன்.

எப்படி எழுதினேன்?

அந்தோணி ட்ராலப்

லண்டனிலிருந்து புறப்பட்டு, பிரான்ஸின் குறுக்காக மார்ஸெயில்ஸுக்குப் பிரயாணம் செய்தபோதும், பிறகு அங்கிருந்து அலெக்ஸாண்டிரியாவிற்குப்போன கடுமையான கடற்பிரயாணத்தின் போதும், தினசரி அந்தந்த நாளில் எழுதி முடிக்கத் திட்டம் போட்டிருந்த குறிப்பிட்ட அத்தனை பக்கங்களையும் எழுதி வந்தேன். இந்தச் சமயத்தில் அனேக தடவை, கப்பல் அறை மேஜை மேல் காகிதங்களை வைத்துவிட்டு, என் காரியாலய அறைக்குள் சென்றிடுவேன். பிப்ரவரி மாதம். சீதோஷ்ண நிலை நிரம்பவும் மோசமாயிருந்தது. ஆனால், நான் என் வேலையைச் செய்துகொண்டுதான் இருந்தேன். 'சலியா உழைப்பானது சகல கஷ்டங்களையும் வெல்லும்' என்பது லத்தீன் வாக்கியம். இவ்வாறு உழைப்பதற்குத் தக்கபடி எல்லா மனிதர்களுக்கும் தேக பலம் இருக்கிறது என்று நான் சொல்லவில்லை. ஆனால், உண்மை உழைப்பானது அனேகரை, அனேகமாக எந்தப் பருவ காலத்திலும் உழைக்கச் செய்யும் என்பதை நான் நம்புகிறேன். இதற்கு முன் எனக்குக் கட்டாய வேலைத் திட்டமொன்றை அமைத்துக் கொண்டிருந்தேன். காலத்தின் சூழ்நிலையினால் உழைப்பானது ஒழுங்கு அற்றதாகப் போய்விடும்படி விட்டுவிடக்கூடாது என்று என்னைப் போல் உணர்கின்றவர்கள் கட்டாய வேலைத் திட்டம் அமைத்துக் கொள்வது அவசியம். இதை நான் பலமாகச் சிபார்சு செய்ய வேண்டும். தபாலாபீஸிற்கு அறிக்கை எழுத வேண்டியது என் கடமை. பிரசுரகர்த்தர்களுக்குப் புத்தகம் எழுதித் தர வேண்டும் என்பது அப்படிப்பட்ட கடமை அல்ல. விரும்பினால், நான் சோம்பேறியாய் இருக்கலாம். எழுதும் தொழிலையும் நான் மேற்கொள்ளத் தீர்மானம் செய்து விட்டதால், சுயமாக ஏற்படுத்திக் கொண்ட சில விதிகளை நான் பின்பற்றி வருவது அவசியம் என்று கண்டேன்.

புதுப் புத்தகம் ஒன்று எழுத ஆரம்பித்தவுடன், வாராவாரமாகப் பிரிக்கப்பட்ட நாட்குறிப்பு ஒன்றைத் தயார் செய்து கொள்வேன். எழுதி முடிப்பதற்கு நான் வகித்துக்கொண்ட காலம் வரை, அதை உபயோகப்படுத்துவேன். அதில் தினம் தினம் நான் எழுதியுள்ள பக்கங்களின் எண்ணிக்கையைப் பதிவு செய்வேன். அதனால், இரண்டொரு நாட்கள் நான் சோம்பேறித்தனத்துக்கு வசப்பட்டுவிட்டால், அந்தச் சோம்பேறித்தனமும் குறிப்பில் பதிவாகியிருக்கும். அதைப் பார்க்கப் பார்க்க என் குறை என் கண்ணை உறுத்தும். குறை வேலையை முடிக்க எனக்கு இதனால் தூண்டுதல் ஏற்படும். காலத்தின் சூழ்நிலைக்கேற்ப, என்னுடைய மற்ற வேலைகள் அதிகமாயிருந்தாலும் சரி, குறைவாயிருந்தாலும் சரி,

வருந்தி உழைக்க அபாரத் திறமை பெற்றிருப்பதுதான் மேதை என்பது—என்கிறார் ஆங்கில அறிஞர் ஒருவர். அதை விளக்குகிற இந்தக் கட்டுரை ட்ராலப் எழுதிய "சுய சரித"த்திலிருந்து எடுத்தது. தபால் இலாக்காவில் உயர்ந்த பதவி வகித்த அவர், தமது ஓய்வு நேரத்தில் சிறந்த நாவல்கள் பல எழுதியுள்ளார். ஸ்ரீ கு. ராஜாராம் மொழி பெயர்த்தது.

புத்தகத்தைச் சீக்கிரமாக முடிக்க வேண்டியிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, வாரத்திற்கு இத்தனை பக்கங்கள்தான் எழுதுவது என்று பகிர்ந்து வைத்துக் கொள்வேன். சராசரியில் சுமார் 40 பக்கம் ஆகும். சில வாரங்களில் 20 பக்கந்தான் செய்ய முடியும். சில சமயம் 112 பக்கம் கூட எழுதக் கூடும். நான் எழுதும் பக்கம் ஒவ்வொன்றிலும் 250 வார்த்தைகள் அடங்கும். எழுதிக் கொண்டு போகும் போதே வார்த்தைகளை எண்ணிக் கொண்டு வருவேன். என் மனத்தில் இத்தனை வார்த்தைகளில் எழுதித் தருவது என்று எல்லாச் சமயங்களிலும் தீர்மானித்து வைப்பேன். ஒரு வார்த்தை குறைவாய் உள்ள புத்தகமொன்றைக்கூட நான் ஒரு நாளும் கையை விட்டு வெளிப் போக விட்ட தில்லை. அளவுக்கு மேல் அதிகப்பட்டுப் போனதும் மிகக் கொஞ்சம் எனலாம். குறிப்பிட்ட அளவுகளுக்குள் கச்சிதமாக என் வேலையை முடித்தது பற்றி எனக்கே என்னைப் பற்றிப் பெருமை. முக்கியமாக, குறிப்பிட்ட கால வரையறைக்குள் முடித்ததற்காகப் பெருமைப் படுவேன். எழுதின பக்கங்களுக்கு என் முன்னால் எப்பொழுதும் 'ரெக்கார்டு' இருந்து கொண்டிருந்தது. ஒரு வாரத்தில் குறைவான பக்கங்களே எழுதினேன் என்றால், அது என் கண்ணை உறுத்தும். ஒரு மாத காலத்தை, வேலை செய்யாமல் வீணாக்கிவிட்டால், என் மனம் துயரமடையும்.

எழுதுவதில் இந்த மாதிரி முன் ஏற்பாடுகள் செய்து கொள்வது மேதையின் கவனத்திற்கு அருகதையற்ற சில்லறை விஷயங்கள் என்று கூறக் கேட்டிருக்கிறேன். நான் என்னை ஒரு மேதை என்று ஒரு நாளும் கருதிய தில்லை. ஆனால், நான் ஒரு மேதையாக இருந்தால் அவ்விதமான கட்டுப்பாடுகளுக்கு என்னைக் கட்டாயம் உட்படுத்தியிருப்பேன் என்றே நினைக்கிறேன். கட்டாயம் கீழ்ப்படிந்தாக வேண்டும் என்றிருக்கிற ஒரு சட்டத்தைப் போல, வேறு ஒன்றும் நிச்சயமாய் அவ்வளவு சக்திவாய்ந்ததாயிராது. கல்லைக் குடைந்துவிடும் நீர்த்துளியின் விசை அதற்கு உண்டு. கல்லின் மேல் இடைவிடாது சொட்டிக் கொண்டிருக்கும் நீர்த்துளி நாளடைவில் கல்லைக் குடைந்துவிடுமல்லவா? ஒரு சிறிய அளவில் தினசரி தவறாது வேலை செய்தால் ஹெர்குலிஸ் (கிரேக்கப் புராணத்தில் வரும் பலவான்) செய்த பிரமாத வேலைகளையெல்லாம் தோற்கடித்துவிடக் கூடும். ஓட்டப் பந்தயத்தில், ஆமைதான் முயலைத் தோற்கடிக்கிறது. முயலால் ஜயிக்க முடிவதில்லை. ஒரே மூச்சில் தாவியோடி முடித்துவிடலாமே என்று தன்னைப் பற்றிக் கர்வம் கொண்டு முயல் செலவழிக்கும் நேரத்தில் பாதி அளவைக் கொண்டு ஆமை பாதி தூரத்தைக் கடக்க முடிகிறது.

குறித்த காலத்தில் ஒரு நாளும் வேலையை முடிக்காததால், எப்பொழுதும் வேதனையும் கஷ்டமும் நிறைந்துள்ள வாழ்க்கை நடத்திய ஆசிரியர்களை நான் அறிவேன். அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும், பள்ளிக்கூட வாயிலில் நுழைகிறபோது பூராப் பாடங்களையும் படித்து அறிய முட்டிக்கொள்ளும் பள்ளிப் பிள்ளைகளைப் போல, இருந்திருக்கிறார்கள். பிரசுரகர்த்தர்கள் அவர்களை நம்ப வில்லை. சாவகாசமாகவும், ஏகதேசமாகவும் அவர்

கள் எழுதியதால், சிறந்த நூல்கள் எழுதத் தவறினர்கள். எனக்கு இன்னொரு வேலையின் சுமை இருந்தபோதிலும், நான் அவர்களைவிட இருமடங்கு எழுதியிருக்கிறேன். அதுவும் அனேகமாக எவ்வித சிரமமும் முயற்சியு மில்லாமல் செய்திருக்கிறேன். என்னுடைய இலக்கிய வாழ்வில், குறித்த காலத்தில் எழுதி முடிக்காது கால தாமதமாகிவிடுமோ என்ற பயத்தை ஒரு தடவைகூட நான் உணர்ந்ததில்லை.

இந்த மாதிரி கட்டுத் திட்டமாக வேலை செய்வோராகத் தங்களை ஆக்கிக்கொள்ள வெட்கப்படும் ஆட்கள் இருக்கிருர்கள். கற்பனையைக் கொண்டு தொழில் புரியும் மனிதன், எழுதத் தூண்டும் உணர்ச்சி வரும்வரை காத்திருக்க வேண்டும் என்று எண்ணுகிருர்கள். இம் மாதிரிக் கொள்கைகளை உபதேசிக்கிற போது, என்னல் சிரிக்காமல் இருக்க முடிவ தில்லை. செருப்புத் தைப்பவன் ஆவேசம் வரும் வரை வேலை செய்யாமல் காத்திருந்தான் என்ருலோ, அல்லது மெழுகுவர்த்தி செய்பவன், உருகும் தெய்விக நேரத்திற்காகக் காத்திருந்தான். என்ருலோ எப்படி யிருக்கும்! இதைவிட அது முட்டாள்தனமாகப் படாது. ஒரு புத்தகத்தை வெற்றிகரமாக எழுதி முடிப்பதற்கு நிச்சயமாக உதவி புரியக் கூடியது, நாற்காலியில் பசையைத் தடவி அமர்ந்து, எழுந்திராமல் வேலை செய்வது தான் என்று கூறக் கேட்டிருக்கிறேன். எழுதத் தூண்டும் உணர்ச்சி வரும்வரை காத்துக் கொண் டிருக்க வேண்டும் என்பதைவிட, நாற்காலியில் ஆணி அடித்தாற் போல உட்கார்ந்து வேலை செய்ய வேண்டும் என்பதை நான் உறுதியாய் நம்புகிறேன்.

என்னளவு எழுத்துத் தொழிலில் ஏற்றம் அடைந்திராத ஒரு மனிதன் உண்மையான மேதையைப் புலப்பட வைக்கக் கூடிய உழைப்பையும், உணர்ச்சிகளையும் பற்றிப் பேச உரிமையற்றவன் என்று ஒருவேளை சொல்லக் கூடும். வெவ்வேறு மனிதர்களின் செய்கைகளி லிருந்து, மூளைக்கு மூளை, மூளைச் சக்தியில் வித்தியாசம் இருக்கிறதென்பதை ஒப்புக்கொள்ளத் தயாரா யிருக்கிறேன். என்னைப் பற்றி உயர்வாகச் சொல்லிக்கொள்ள நான் விரும்ப வில்லை. ஆனல், ஒரு மனிதன், தன்னுடைய தொழிலைப் பிரமாதமான ஒன்று என எண்ணுமல், சாதாரணமாகக் கருதி உழைப்பானனல், அவன் எக்காலத்திலும், தன் மூளையின் சக்திக் கேற்ற வேலையைப் பரிபூரணமாகச் செய்ய முடியும் என்பதையே என்னுடைய சொந்த அனுபவம் எடுத்துக் கூறுகிறது. ஆகையால், எழுதுவதைத் தம் வாழ்வில் தொழிலாகக் கொள்ள விரும்பும் இளைஞர்களுக்கு, உயர்ந்த எழுத்தாளராக ஆக விரும்பின போதிலும், தம் பேனவை எடுத்துத் திடுதிப்பென்று எதையும் அவசரப்பட்டுச் செய்யாமல், தினந்தோறும் சிறிது சிறிதாக எழுதப் பழகுவதற்காக, மேஜையடியில் வக்கீல் குமாஸ்தாவைப்போல் அமர்ந்து எழுதிப் பழகவேண்டும் என்று நான் துணிந்து புத்திமதி கூறுகிறேன். எனவே, இளைஞர்கள் தாம் எடுத்துக்கொண்ட வேலையைப் பூரணமாகச் செய்து முடிக்கும்வரை அவ்வாறு அமர்ந்து செய்யட்டும்.

✯

சுவை நிரம்பியது

சுலபமாய் ஜீரணமாகிறது

சுத்தமானது

விடமின் அடங்கியது

டால்டாவில் வறுத்த பூரிகள் வாயில் கரைகின்றன — மேலும் ஊக்கத்தையும் அளிக்கின்றன!

டால்டா உங்கள் தின்பண்டங்களை ருசியுள்ளதாகச் செய்யும் வஸ்துமட்டுமன்று — அதுவே ஊக்கமளிக்கும் உணவு! எளிதில் ஜீரணமாகக் கூடியதும், விடமின் நிரம்பியதுமான இச் சமையல் செய்ய உதவும் சாதனத்தின் அறிந்த சத்தையளிக்கும் திறமையைக்கொண்டு உங்கள் தினந்தோறுமுள்ள சாப்பாட்டைச் சீர்படுத்திக் கொள்ளுங்கள். டால்டா ஒவ்வொரு ஸ்திரீக்கும் ஒரு நன்கொடை—அது அவர் தயாரிக்கும் சாதாரண தின்பண்டங்களுக்கு விசேஷச் சுவையையளிப்பதோடு அவர் குடும்பத்திற்கு அதிகப்படியான ஊக்கத்தையும் கொடுக்கிறது.

★ ஆங்கிலத்தில் மட்டும் எழுதப்பட்டுள்ள டால்டா சமையல் புத்தகத்தின் உதவியுடன் உங்கள் சாப்பாட்டுத் திட்டத்தை அமையுங்கள். சத்தைத் தரும் திறமைக்கென ஆராய்ந்தெடுத்த சுவையுள்ள 150-க்கு மேற்பட்ட இந்தியத் தின்பண்டங்களைப் பக்குவம செய்யும் முறைகள் இதில் அடங்கியிருக்கின்றன. உங்கள் புத்தகத்திற்கு Dept. A462 P.O. Box No. 353, Bombay, என்ற விலாசத்திறகு நான்கு அணு ஸ்டாம்பு அனுப்புங்கள்.

HVM. 48-50 TM THE HINDUSTAN VANASPATI MANUFACTURING CO., LTD.

நேர்த்திக்கும்
உறுதிக்கும்

சாரதி

கைத்தறி நெசவுகள்

ஏ. ஆர். பி. சாரதி
தபால் பெட்டி நெ. 45
மதுரை

Use

KESHA-MITRA

HAIR-OIL
(VEGETABLE)

A LITTLE's ORIENTAL BALM PRODUCT

அடர்த்தியான, கருகருத்த
நீண்ட கேசத்திற்கு

கேசமித்திரா

ஹேர் ஆயில்

வழுக்கை, பொடுகு, முதலியவற்றை
அறவே போக்குகிறது

எல்லா மருந்து வியாபாரிகளிடமும்
ஷாப்புகளிலும் கிடைக்கும்

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்
அண்ட் பார்மசூடிகல்ஸ் லிமிடெட்
11-12, முதல் லைன் பீச் : : சென்னை

பைத்திய மேதை

பெயரிலி

காரிருளுக்கு வகிடு எடுத்துக் கொண்டு சென்றது அந்தச் சிறு கார். கணவன் டிரைவர் ஸ்தானத்தில் வீற்றிருந்தான். அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்தாள் துணைவி. சாலையில் ஜன நடமாட்டம் குறைவாக இருந்தது. காற்று சிலு சிலு வென்று வீசிக்கொண் டிருந்தது.

"இதோ பார்த்தாயா, இந்த ஊரில் கூட ஒரு டாக்டர் இருக்கிறான்" என்றான் கணவன். அவள் வெளியே தலையை நீட்டுவதற்குள் கார் வெகுதூரம் சென்று விட்டது.

மழை பெய்ய ஆரம்பித்தது. சுற்றிலும் ஒரே அந்தகாரம். கணவனுக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. அவன் பாட ஆரம்பித்தான்; கார் பாட்டிற்கு ஓடிக்கொண் டிருந்தது.

படார்...ர்...ர்...

மோட்டார் ஒரு மரத்தில் மோதியது. கணவனின் மண்டை சக்கரத்தில் பலமாக இடித்தது. காரின் கண்ணுடி தூள் தூளாயிற்று. மனைவி என்ன செய்கிருள் என்று திரும்பிப் பார்த்தான். அவள் கீழே விழுந்து கிடந்தாள். நெற்றியில் இரத்தம் கசிந்துகொண் டிருந்தது. அவளுக்குப் பிரக்ஞை யில்லை.

வெளியே மழை பயங்கரமாகப் பொழிந்துகொண் டிருந்தது. கனத்த அந்தகாரம் கணவனின் அச்சத்தை உச்ச நிலைக்குக் கொண்டு வந்தது. வானத்தில் ஒரு மின்னல் கண் சிமிட்டிவிட்டு மறைந்தது. அவன் இருண்ட மனத்திலும் திடீரென்று ஒரு மின்னல் மின்னியது. வரும் வழியில் ஒரு டாக்டர் வீட்டைப் பார்த்தது அவனுக்குச் சட்டென நினைவு வந்தது.

மூர்ச்சித்துக் கிடக்கும் காதலியைக் குழந்தைபோல் கையில் தூக்கிக் கொண்டு, டாக்டர் வீட்டை நோக்கி விரைந்து சென்ருன். மழையின் வேகம் நிமிஷத்திற்கு நிமிஷம் அதிகமாகிக் கொண்டே வந்தது.

நல்ல வேளை! டாக்டர் இன்னும் தூங்க வில்லை. 'கணவ'னைக் கண்டதும் ஆர்வத்துடன் வரவேற்ருர். அவன் தன் துணைவிக்கு நேர்ந்த விபத்தை விவரமாக எடுத்துக் கூறினன். டாக்டர் கவனித்துக் கேட்டார். பிறகு காயம் பட்டவளைப் பரீட்சித்தார்.

"நண்பரே, இதற்கு ஓர் 'ஆபரேஷன்' செய்ய வேண்டும்..." என்று டாக்டர் மொழிந்ததும் 'கணவ'னுக்கு சுருக்கென்றது. வேறு வழி யில்லை. நள்ளிரவில் சம்மதிப்பதைத் தவிர அவன் வேறு என்னதான் செய்வான்?

மனைவி, மேஜை மீது கிடத்தப்பட்டாள். 'நாதன்' கவலையுடன் பக்கத்தில் நின்ருன். "தயவு செய்து நீங்கள் வெளியே போங்கள்; பக்கத்தில் நின்ருல் மயக்கம் ஏற்படும்" என்ருர் டாக்டர். மிகச் சிரமத்துடன், இதயத்தைக் கையினுல் அமுக்கிக் கொண்டு திண்ணைக்கு வந்தான் புருஷன்.

பைத்தியக்காரத்தனமும் முட்டாள்தனமும் ஒன்றுதானு? மேதைகள் பித்தர்களாவது ஏன்?—இது ஓர் ஆங்கிலக் கதையின் தழுவல். ஆங்கிலத்தில் இதை எழுதியவர் யாரெனத் தெரிய வில்லை. தமிழ்ப்படுத்தியவர் ஸ்ரீ ஜி. எஸ். பாலகிருஷ்ணன்.

மழை இன்னும் நின்ற பாடில்லை. இருளில், சற்று அப்பால் இரண்டு தடியர்கள் வருவது அவனுக்குத் தெரிந்தது. திருடர்கள் என்று நிச்சயித்தான். அவர்கள் டாக்டர் வீட்டை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள். "கொஞ்சம் இருங்கள்! தயவு செய்து ஐந்து நிமிஷம் பொறுங்கள். டாக்டர் என் மனைவிக்கு ஆபரேஷன் செய்துகொண்டிருக்கிறார். திடீரென்று நீங்கள் பிரவேசித்தால் அபாயம் நேர்ந்தாலும் நேரும்..."

வந்தவர்கள் கல கல வென்று நகைத்தார்கள். "எங்களைத் திருடர்கள் என்று தானே எண்ணுகிறீர்கள்? தவறு. நாங்கள் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் வேலை பார்ப்பவர்கள். இந்த வீட்டில் வசித்து வந்த டாக்டருக்குச் சில நாட்களுக்கு முன் பைத்தியம் பிடித்துவிட்டது. அவரை ஆஸ்பத்திரியில் கட்டிப் போட்டிருந்தோம். கட்டை அவிழ்த்துக்கொண்டு இங்கே ஓடி வந்திருக்கிறார்......" என்று அவர்கள் பேசியது 'கணவன்' தலையில் ஓர் இடியாக விழுந்தது.

"எதற்கும் கொஞ்சம் பொறுங்கள். அவர் பாதி வேலையை இதற்குள் முடித்திருப்பார்" என்றான் 'புருஷன்' கவலையுடன். அவர்களும் சம்மதித்தார்கள்.

'கணவ'னின் ஆசை வீண் போகவில்லை. "ஆபரேஷன் வெற்றி!" என்று சொல்லிக் கொண்டு வெளியே வந்தான் 'பைத்தியக்காரன்.' ஆஸ்பத்திரி ஆட்கள் மறு கணம் அவன் மீது பாய்ந்தார்கள். அவன் சிறைக்கு இழுத்துச் செல்லப் பட்டான்.

மனைவி, ஒரு பெரிய ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டாள். 'ஸர்ஜன்' துரை அவளைப் பரீட்சித்துவிட்டு, வியப்புடன் பின் வருமாறு மொழிந்தார்:

"இந்த ஆபரேஷன் ரொம்பச் சிரமமானது. இதைச் சாதாரண டாக்டர்களினால் வெற்றிகரமாகச் செய்து முடிக்க முடியாது; ஏன், இந்த ஜில்லாவிலேயே ஒருவரால்தான் செய்ய முடியும். அவர்கூட இப்பொழுது இல்லை. சில நாட்களுக்கு முன் அவருக்குப் பைத்தியம் பிடித்து விட்டது. உங்கள் மனைவிக்கு யார் வெற்றிகரமாகச் செய்தார்கள்?" என்றார்.

கணவனுக்குத் தலை சுற்றியது; அவன் பதில் பேச வில்லை.

இந்த நாளிலே!

கல்லை எடுத்து விட்டெறிஞ்சான்
பண்டை நாளிலே
கத்தியெடுத்து யுத்த மின்னன்
பண்டை நாளிலே
வில்லையெடுத்து அம்பு விட்டான்
பிந்தி நாளிலே—ஐயோ!
விஷத்தெ எடுத்து வீசுருண்டா,
இந்த நாளிலே!

—கொத்தமங்கலம் சுப்பு (தியாகி)

பக்கிங்ஹாம் கால்வாய்

●

ஏ. டி. கே.

சென்னை ராஜதானியில், தமிழ் நாட்டையும் தெலுங்கு தேசத்தையும் இணைக்கும் இந்தப் பக்கிங்ஹாம் கால்வாய் என்னும் உப்பங் கழி இருநூற் றறுபத் திரண்டு மைல் நீள முள்ளது. வட கோடியில் உப்பில்லாத் தூய நீர்க் கால்வாய்களுடன் இணைந்து காக்கினடா வரையிலும், தென் கோடியில் வேதாரணியம் வரையிலும் இதை வளர்த்த வசதி இருக்கிறது. கிருஷ்ண நதிக் கரையில் பெத்தகஞ்சம் என்னும் ஊரிலிருந்து, தென் பெண்ணைக் கரையில் மரக்காணம் வரையில் இந்தக் கால்வாய் வழியே படகில் செல்லலாம்.

இக் கால்வாய் கீழக் கடற்கரை ஓரமாகக் கடலுக்குச் சுமார் மூன்று மைல் தூரத்துக்குள்ளாகவே நெடுக ஓடுகிறது. இடையிடையே கடலின் அல்கு கழிகளும், வேறு ஆறுகளும் இதைத் தொடர்ந்து செல்கின்றன. இப்படி, தென் ஆர்க்காடு ஜில்லாவில் புறப்பட்டு, செங்கற்பட்டு, சென்னை, நெல்லூர், குண்டூர் ஜில்லாக்கள் வழியாகச் செல்லுகிறது இக் கால்வாய்.

இது செல்லும் பாதை முழுதும் சதுரமாகவும் மணற்பாங்காகவும் இருப்பதனல், முன் ஒரு காலத்தில் இது கடலில் சேர்ந்த பகுதியா யிருந்து, பின் கடல் ஒதுங்கிப் போகக் கரையாய் மிகுந்த திட்டாகிவிட் டிருக்கலாம் என்று நிலப் பரப்பு ஆராய்ச்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள். இதன் கரை யோரமாக எத்தனையோ செம்படவக் குப்பங்கள் இருக்கின்றன. ஆனல், அக் குப்பத்து வாசிகள் அனைவரும் கடலில் கட்டு மரத்திலோ, படகுகளிலோ சென்று வலை வீசி மீன் பிடித்துப் பிழைக்கிறார்களே அன்றி, ஒருவராவது இந்தக் கால்வாயில் படகோட்டிப் பிழைக்கிற தில்லை.

ஆனல், இச் செம்படவருக்குள் கடலில் மீன் பிடிப்போ ரென்றும், ஆற்றில் மீன் பிடிப்போ ரென்றும் இரு பிரிவுகள் உண்டு. அவரவர்கள் தத்தம் பிரிவுக் கேற்றபடிதான் மீன் பிடிப்பார்கள். இவர்களில் ஆற்றில் மீன் பிடிக்கும் பிரிவினர் இக் கால்வாயின் சில பகுதிகளில் இதைப் பயன் படுத்திக் கொள்ளுவார்கள். தெலுங்கு தேசத்திலும், தமிழ் நாட்டிலும் தொன்று தொட்டு வந்த நாவாய்த் தொழில் இன்னும் அழியாமல், இரண்டோரிடத்தில் படகு கட்டுவதாவது நடந்து வருவதற்கு இக் கால்வாய்தான் காரணம்.

1806-ம் வருஷம் காக்ரேன் என்னும் ஆங்கிலேயர், சென்னையிலிருந்து வடக்கே ஒன்பது மைல் தூரம் இந்தக் கால்வாயை முதல் முதல் வெட்டினர். அப்போது இதற்கு இந்தப் பெயர் உண்டாக வில்லை. சிறிது சிறிதாகப் பழவேற்காட்டு ஏரி வரையில் இதை வளர்த்தினர்கள். சென்னைக்கும் பழவேற்காட்டுக்

மாட்டு வண்டி, மோட்டார், ரயில்களைவிட, கால்வாய், ஆறு, கடல் வழியாகப் பண்டங்களை எடுத்துச் செல்வது எளிது: மலிவானது, புராதனமானது. இன்றும் நடந்து வருவது. சென்னையுடன் மாகாணத்தின் தொலை தூர இடங்களைப் பிணைத்து நிற்கும் பக்கிங்ஹாம் கால்வாய் மிக முக்கியமானது.

கும் போக்குவரத்து இந்தக் கால்வாய் வழியாகவே நடந்தது. இதற்கு முப்பது வருஷம் பிடித்தது. 1837-ம் வருஷம் இந்தக் கால்வாயைச் சீராக வைக்கவில்லை என்றும், இதைச் சீர்திருத்த வேண்டுமென்றும் சொல்லிச் சென்னை சர்க்கார் இதைச் சுவாதீனம் செய்து கொண்டு மராமத்து இலாகாவின் கீழ் மேற்பார்வை செய்யத் தொடங்கினார்கள்.

என்றாலும், உருப்படியான சீர்திருத்தம் செய்வதற்குப் பதினைந்து வருஷம் பிடித்தது. 1852-ம் வருஷத்தில்தான் சென்னைக்கு வடக்கே எழு மைல் தூரத்தில் ஒரு 'லாக்' கட்டினார்கள். 'லாக்' என்பது கடல் நீர் இக் கழியில் பெருகவும், கழியினின்று உப்பு நீர் கடலில் பெருகவும் வழி செய்யும் ஒரு சாதனம். மேலும், தரை மார்க்கத்தில் சுங்கச் சாவடிகள் இருப்பன போல் கால்வாய் மார்க்கத்தில் 'லாக்' என்பது ஒரு சுங்கச் சாவடி.

இந்த வாய்க்காலின் கரை ஓரமெல்லாம் வெறும் மணற் காடாயிருந்தது மாறி, எங்கே பார்த்தாலும் தென்னந் தோப்புகளும் சவுக்குத் தோப்புகளும் வைத்துப் பயிரிடப்பட்டன. அதனால் தென்னங் கீற்று, தேங்காய், சவுக்குக் கம்பி விறகு, கரி முதலிய சாமான்கள் சென்னைக்கு இக் கால்வாய் வழியே வரலாயின. வேறு விளைபொருள்களும் படகுகளில் வருவது சுலபமாகவே, இக் கால்வாயை இன்னும் நீளமாக வெட்ட வேண்டுமென்று சர்க்கார் கருதினார்கள். வடக்கே துர்க்கராஜபட்டணம் வரையில் கால்வாய் நீண்டது. தெற்கே சதுரங்கப்பட்டணம் வரையில் இக் கால்வாயை வெட்டினார்கள். அதற்குள் தாது வருஷக் கருப்பு என்னும் கொடிய பஞ்சம் உண்டாயிற்று.

அந்தத் தாது வருஷப் பஞ்சத்தின்போது ஏழைகளின் பஞ்ச நிவாரணத்துக்காகப் பல இடங்களில் மராமத்து வேலைகள் ஆரம்பித்து நடந்தன. அவைகளில் இக் கால்வாய் வெட்டுவதும் முக்கியமான தொன்று. அந்த வருஷத்தில் ஏராளமான ஜனங்கள் கூலிகிடைத்தால் போதுமென்று கூடையும் கட்டப்பாரையுங் கையுமாக முன் வந்ததனால் இக் கால்வாயின் வட கோடி வரையில் வெட்டி முடித்தார்கள். அதற்கப்புறம் ஐந்து வருஷத்துக்கெல்லாம் (1882-ல்) மரக்காணம் வரையில் தென் கோடி வெட்டி முடிக்கப் பட்டது.

அந்த 1882-ம் வருஷத்தில் இந்த இருநூற்றறுபத்திரண்டு மைல் நீளமுள்ள கால்வாய் வெட்டிப் பூர்த்தியானபோது, சென்னை மாகாணத்தின் கவர்னராயிருந்தவர் பக்கிங்ஹாம் அண்டு சாண்டோஸ் கோமகன் என்னும் ஆங்கிலேயர். அவர் பெயரையே இந்தக் கால்வாய்க்கு இட்டு அவரைப் பெருமை படுத்தினார்கள் நம் நாட்டவர்கள்.

ஜீவ நதிகளின் பெருக்கினால் வளமையும், செழுமையும் கொழிக்கும் வட ஜில்லாக்களின் விளை பொருள்களைச் சென்னைக்குக் கொண்டு வந்து விலையாக்குவதற்கு இக் கால்வாய் பெரும் உதவியாயிற்று. அந்தக் காலத்தில் ரயில் போக்கு வரத்தைக் காட்டிலும் படகுப் போக்குவரத்து மலிவாகவும் சுளுவாகவும் இருந்தது. உப்பு, கிளிஞ்சல் (சுண்ணாம்பு) முதலியனவும், ஓடு, செங்கல், கருங்கல் முதலியனவுங் கூட இப் படகுகளில் வந்து கொண்டிருந்தன.

1880-ம் வருஷம் வரையில் இந்தக் கால்வாயில் சுங்கமோ தீர்வையோ ஏற்பட வில்லை. கடல் நீர்ப் பெருக்கையும் அதுவரை கட்டுப்படுத்த வில்லை. 'ஆனது ஆகட்டும்' என்கிற அருமையான ஆங்கிலேயர் கொள்கையே அமலில் இருந்து வந்தது. அதிர்ஷ்டம் அவர்கள் பங்கில் எப்போதும் அடித்து வருகிறது அனைவரும் அறிந்ததே. அந்தத் தவறான கொள்கையும் இறுதியில் அவர்களுக்கு வெற்றியே அளித்தது. அந்த வருஷத்தில் பெரும் புயல் அடித்து அனேக இடங்களில் கடல் கொந்தளித்துக் கரை புரண்டு, கால்வாய்க்குச் சேதம் உண்டாயிற்று. பல இடங்களில் மணல் மேடிட்டுப் போயிற்று.

இதனால், கால்வாய்க்கு இனிச் சேதம் உண்டாகாதபடி தக்க பாதுகாப்புகள் செய்ய வேண்டுமென்று மராமத் திலாகா சில திட்டங்களை வகுத்தது. கடல் நீர் பெருகி, கழியில் வரும் இடங்களில் (முகத் துவாரங்களில்) புது மாதிரி மதகுகளை அமைத்தார்கள். இவை மணல் வராமல் தடுப்பதற்கு ஏற்றவை, இது பத்து வருஷம் அமலில் இருந்தது. அங்கங்கே வாய்க்காலைக் கடலோரம் திருப்பி, கடல் நீர் கழியில் பெருகுவதற்கு ஏற்ற மதகுகள் பல அமைக்கப்பட்டன.

ஆனால், இம் மதகுகளை மூடுவதும் திறப்பதும் வாய்க்காலில் செல்லும் படகுகளுக்கு அதிகக் கால தாமதம் விளைவித்தன. சிற்சில சமயங்களில் வாய்க்காலில் போதுமான தண்ணீர் இல்லாமல் படகுப் போக்குவரத்தே தடைப்படுவதும் உண்டு. இதனால் வருமானம் குறைந்ததோடு படகுக்காரர்களும் முணுமுணுத்தார்கள்.

அதன் பேரில் 'லாக்' முறை அனுஷ்டானத்துக்கு வந்தது. ஆறுகளும், முகத் துவாரங்களும் இக் கால்வாய்க்குக் குறுக்கு வரு மிடங்களில் இக் கால்வாயில் மதகு கட்டி அதற்குப் பெருங் கதவுகளையும் அமைத்தார்கள். அக் கதவுகளை மூடிவிட்டால் கால்வாய்த் தண்ணீர் நல்ல ஆழமுள்ளதா யிருக்கும். மணலும் அதிகமாக மேடிட்டுப் போகாது. படகுப் போக்குவரத்து சுலபமாக நடந்து வரும்.

வடக்கே பெத்தகஞ்சத்தி லிருந்து சுமார் நூற்றிருபது மைல் தூரத்துக்கு இக் கால்வாய் வர்த்தகச் சரக்குகளுக்கு முக்கியமான போக்குவரத்துச் சாதனமாக உதவுகிறது. அங்கெல்லாம் கால்வாய் காய்ந்து போவதே கிடையாது. வருஷம் முழுவதும் தண்ணீர் நிறைந்து படகு ஓடுவதற்கு வசதியா யிருக்கிறது. வடபெண்ணையி லிருந்து சென்னை (கூவம் ஆறு) வரையில் அதற்கு அடுத்தபடியாகச் சொல்லலாம். இங்கே முக்கியமாக விளை பொருள்கள்தான் போக்குவரத்து. வருஷத்தில் பெரும் பகுதி இங்கும் படகு ஓடுவதற்கு வசதி இருக்கிற தென்றே சொல்ல வேண்டும்.

இன்னும் எவ்வளவோ சீர்திருத்தம் செய்ய வேண்டி யிருக்கிறது. இதை நன்கு செய்து முடித்தால் நம் மாகாணத்துக்கே இக் கால்வாய் பெருமையை அளிக்கும்.

சென்னைக்குத் தெற்கே இக் கால்வாய் பிரயாணிகளின் போக்குவரத்துக்குத்தான் மிகவும் ஏற்றது. சில மாதங்களில் இங்கு தண்ணீர் வற்றிப் போய் படகு ஓட்டம் தடைப்படுவதும் உண்டு. என்றாலும் உற்சவ காலங்

களில் எப்பொழுதும் படகோட்டம் சிறப்ப தில்லை. மேலும் திருப்போரூர், மகாபலிபுரம் முதலிய இந்து க்ஷேத்திரங்களுக்குச் செல்வதற்கு இன்றும் நம்மவர்கள் இக் கால்வாயைத்தான் அதிகமாக நம்பி யிருக்கிறார்கள். இதில் ஓடும் படகுகளில் தென்னங் கீற்றும், சவுக்குக் கம்பியும் தான் வேறு பொருள்கள். படகுகளோ மிகப் பழையவை. வெகு மெதுவாக நகரும்.

இக் கால்வாய் வழியாக அரிசி, நெல், உப்பு, கட்டடச் சாமான்கள், விறகு முதலியவை ஏராளமாக வந்து ரேவு துறையில் இறக்குமதி யாகின்றன. இக் கால்வாயின் மூலம் நடைபெறும் வர்த்தகம் மூலேக்கொத்தளம், சிந்தாதிரிப்பேட்டை, அம்பட்டன் வாராவதி என்னும் மூன்று துறைகளில்தான் சென்னையில் காணலாம். இக் கால்வாய்க்குப் போட்டியாக இக் காலத்தில் ரயிலும், மோட்டார் லாரியும் ஏற்பட் டிருப்பதனால் விரைவாக வந்துசேர வேண்டும் என்பதற்காக வியாபாரிகள் முன்போல் அவ்வளவாக இப்போது படகில் சரக்கு ஏற்றுவ தில்லை.

பழங் காலத்துப் படகுகளை எடுத்து விட்டு, மோட்டார்ப் படகுகளையும் நீராவிப் படகுகளையும் இக் கால்வாயில் ஓட விட்டால், ரயிலுடனும் மோட்டார் லாரியுடனும் வெற்றிகரமாகப் போட்டி யிடலாம். நகர எல்லைக் குள்பட்டவரை இக் கால்வாய்க்கு இரு மருங்கிலும் படித்துறை கட்டி இதில் நகரச் சாக்கடைக் கழிவுநீர் வராமல் தடுத்தால் இதில் நீந்தவும், படகு விடவும் மாணவரும் மாணவிகளும் முன் வருவார்கள். சீமையில் ஆக்ஸ்போர்டு என்னுமிடத்தைப் போல் சென்னையிலும் படகுப் போட்டிகள் பிரசித்தி பெறும். எல்லாவற்றைக் காட்டிலும், 'இந்தியருக்கு மரக்கலம் விட ஊக்கமில்லை' என்னும் இழிசொல்லும் இல்லாமல் ஒழியும்.

✲

யாரால் முடியும்?

இலக்கணக் கரையை உடைத் தெறிவது பெரிய காரிய மல்ல. சில இடங்களில் உடைப்பது அவசியமாகவும் இருக்கலாம். ஆற்றின் வெள்ள நிலை, காலத்தால் ஏற்பட்ட மாறுபாடு, கரையின் அமைப்பு ஆகிய எல்லாவற்றையும் நன்கு அறிந்த எஞ்சினீயர்களே மராமத்து வேலை பார்க்கத் தகுதி யுடையவர்கள். கடப்பாரையும், கரண்டியும் உடையவர்க ளெல்லாம் கரையைச் செப்பஞ் செய்வ தென்று வந்தால், கரையும் இராது, ஆறும் இராது. அழகான ஆற்றைக் காட்டாற்றைப் போன்ற நிலைக்குத்தான் கொண்டு வரும்படி நேரும்.

—கி. வா. ஜகந்நாதன் (பயப்படாதீர்கள்!)

சுலபமான வழி!

தென் ஆப்பிரிக்கக் குடிமக்களிற் சிலர், நீண்ட பிரசங்கங்கள், கேட்பவர், செய்பவர் ஆகிய இருவருக்கும் கெடுதல் என்று கருதுகிறார்கள். இருவரையும் காக்கவேண்டி, அங்கே ஒரு பொதுச் சட்டம் இருந்து வருகிறது. ஒவ்வொரு பிரசங்கியும், பேசும் போது ஒற்றைக் காலில் நின்றவாறு பிரசங்கம் செய்ய வேண்டும். இன்னொரு கால் தரையைத் தொட்டுவிட்டால் உடனே அவனை—அவசியம் நேர்ந்தால், பலவந்தமாகவே—உட்கார்த்தி வைத்து விடுவார்கள்.

—தி ஸேபர் வே

ராணுவ நீதி

●

ஐவன் துர்கனேவ்

'1803-ல் ஆஸ்டர்லிட்ஸ் யுத்தத்துக்கு முன்பு நடந்த சம்பவம் இது' என்று பின் வரும் கதையை ஆரம்பித்தான் நண்பன்:

நான் இருந்த பட்டாளம் அப்போது மோரேவியால் தங்கியிருந்தது.

அந்தப் பிரதேசத்து மக்களைத் துன்புறுத்தவோ, அவர்களுக்குத் தீங்கு செய்யவோ கூடாது என்று எங்களுக்குக் கண்டிப்பான உத்தரவு. நாங்கள் நேசர்களாகக் கருதப்பட்ட போதிலும் எங்களை அவர்கள் ஒரு விதச் சந்தேகத்தோடேயே நோக்கினார்கள்.

என்னோடு எகார் என்ற ஒரு குதிரைக்காரன் இருந்தான். முன்பு அவன் என் தாயாரின் வேலையாளாய் இருந்தவன். அவன் யோக்கியமான, அமைதி வாய்ந்த மனிதன். சிறு வயதிலிருந்தே அவனை அறிந்திருக்கிறேன். அவனை ஒரு நண்பனைப் போலவே நடத்தி வந்திருக்கிறேன்.

ஒரு நாள், நான் வசித்த வீட்டில் திட்டுக்களும், அழுகுரலும் கேட்டன. என் வீட்டுக்காரியினுடைய இரண்டு பெட்டைக் கோழிகள் களவு போய்விட்டன. அவள் என் குதிரைக்காரன்மேல் குற்றம் சுமத்தினாள். தான் திருடவில்லை என்று வாதித்த அவன் என்னிடம் வந்து முறையிட்டான், என் சாட்சியத்தை அவன் விரும்பினான்.

"எகார் அர்ட்டமனவ் திருடக் கூடியவனா?" வீட்டுக்காரிக்கு அவன் அம்மாதிரி திருடக் கூடியவன் அல்ல என்று உறுதி கூறினேன். ஆனால், அவள் எந்த வார்த்தையையும் கேட்க மறுத்துவிட்டாள்.

திடீரென்று தெருவில் குதிரைகளின் காலடிச் சப்தம் கேட்டது. பிரதமத் தளபதி தன் உதவி அதிகாரிகளோடு அந்த வழியே வந்து கொண்டிருந்தான்.

நடை வேகத்திலேயே அவன் வந்துகொண்டிருந்தான். திடமான, சதை போட்ட சரீரம்; தலை குனிந்திருந்தது. ராணுவத்தில் அவன் பதவியைக் குறிக்கும் தோள் பட்டை அங்கி அவன் மார்பின்மேல் தொங்கிக்கொண்டிருந்தது.

வீட்டுக்காரி அவனைப் பார்த்தாள். உடனே, குதிரை முன் ஓடி, தளபதி முன் மண்டியிட்டவாறே நிலை குலைந்த தோற்றத்தோடும், தலையை மூடாமலும்,— என் குதிரைக் காரனைத் தன் கையால் சுட்டிக் காட்டி, அவனைப் பற்றிப் பலத்த குரலில் புகார் செய்யலானாள்.

"தளபதி! மகாப் பிரபு! என் வழக்கைக் கேளுங்கள்! எனக்கு உதவுங்கள்! என்னைக் காப்பாற்றுங்கள்! இந்த வீரன் என் பொருளைத் திருடிக் கொண்டு விட்டான்" என்று சத்தமிட்டாள்.

வீட்டின் முன் வாயிலில், கையில் குல்லாயுடன், ஒரு கம்பத்தைப் போல விறைப்பாக எகார் நின்றான். மார்பைச் சிறிது முன் தள்ளி, குதி கால்களை ஒன்றுசேர்த்து, காவலில்

"எகோருஷ்கா! அன்புடையவனே! நீ ஒரு மகான்!"

நிற்பவனைப் போல் நின்றான். ஆனால், அவன் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வர வில்லை. பிரதமத் தளபதி தன் பரிவாரங்களுடன் நடுத் தெருவில் நின்றுவிட்டதைக் கண்டு குழப்ப மடைந்தானே அல்லது, தன்னை எதிர் நோக்கி நின்ற அழிவை எண்ணி ஸ்தம்பித்துப் போனானோ—எகார் வெறுமே நின்றான்; விழித்த கண்களுடன், சுண்ணம்பைப் போல் வெளிறிட்டுப் போய் நின்றான்....

ஒரு சிலையைப்போல் நின்ற எகார் தன் பற்களை வெளிக் காட்டினான்.

"அவனைத் தூக்கி விடுங்கள்!"

இவ்வாறு கத்திவிட்டு, பிரதமத் தளபதி குதிரையை முடுக்கி அந்த இடத்தை விட்டு நகர்ந்தான்; முதலில், அதே நடைவேகத்தில் போன அவன் சீக்கிரமே குதிரையை வேகமாகச் செலுத்த வானான். அவனைச் சேர்ந்த அதிகாரிகளும் அவன் பின்னே விரைந்தார்கள். ஓர் உதவி அதிகாரி மட்டும் ஆசனத்திலிருந்தவாறே திரும்பி, தன் அவசரப் பார்வையை எகார் மேல் செலுத்தினான். அந்த உத்தரவுக்குப் பணியா திருப்பது, நடவாத காரியம். எகார் உடனே கொலை செய்யப்படுவதற்காக இழுத்துச் செல்லப்பட்டான்.

அப்போது எகார் பாதி உயிர் போனவன்போல் காணப்பட்டான். "அட தெய்வமே! அட தெய்வமே!" என்று இரு முறை கத்த மட்டுமே அவனால் முடிந்தது. பிறகு மெல்லிய குரலில் "நான் அதைச் செய்ய வில்லை என்பதைக் கடவுள் அறிவார்" என்று கூறினான்.

என்னிடமிருந்து பிரியும்போது நெஞ்சு வெடித்து விடும்போல் கதறினான். நான் கலங்கிப் போனேன். "எகார்! எகார்! தளபதியிடம் ஏன் நீ ஒன்றுமே சொல்ல வில்லை?" என்று கத்தினேன்.

"நான் அதைச் செய்ய வில்லை என்பதைக் கடவுள் அறிவார்" என்றே அந்தப் பேதை விசித்தான்.

வீட்டுக்காரியே நடுங்கிவிட்டாள். அத்தகைய பயங்கரத் தண்டனையை அவள் எதிர்பார்க்கவே யில்லை. அவளும் அழ ஆரம்பித்துவிட்டாள்!

கண்டவனிடம் எல்லாம் சென்று, தன் பெட்டைகள் திரும்பக் கிடைத்து விட்டன வென்றும், எல்லாவற்றையும் தானே விவரமாக விளக்குவதாகவும் கூறி, எகார் மேல் கருணை காட்ட வேண்டும் என்று கெஞ்சத் தொடங்கினாள்.

அது ஒன்றும் பயன்பட வில்லை. அதுதான் ராணுவச் சட்ட மாயிற்றே! ஒழுங்கு வேறு இருக்கிறதே? வீட்டுக்காரி வரவரப் பலமாக விசித்தாள்.

பாதிரி முன் தன் பாவங்களை ஒப்புக் கொண்டு, பாவ மன்னிப்புப் பெற்றுவிட்ட எகார், என் பக்கம் திரும்பிப் பின் வருமாறு கூறினான்: "தலைவரே! அவளிடம் வருந்த வேண்டாமென்று சொல்லுங்கள். நான் அவளை மன்னித்து விட்டேன்."

தன் வேலையாளின் இந்தக் கடைசி வார்த்தைகளைத் திரும்பவும் உச்சரித்த என் நண்பன், "எகோருஷ்கா, அன்புடையவனே! நீ ஓர் உண்மையான மகான்!" என்று முணுமுணுத்தான். முதிர்ந்த அவனுடைய கன்னங்களின் வழியே கண்ணீர்த் துளிகள் சிந்தின.

THE STRENGTH *Of a* NATION

IS IN ITS HEALTH

உணவுக் குறைவிலும்
ஆரோக்யமாயிருங்கள் :

உங்களுக்கு தினசரி
குறைந்தது
கிராம் 1-க்கு
5000 I. U. G. விடமின்
A. தேவை

தவறாமல் அடமின்
உபயோகித்தால்
போதுமான அளவு விட
மின் A&D. கிடைக்கும்

Adamin.
HIGH POTENCY SHARK LIVER OIL

A NATIONAL PRODUCT FOR
THE HEALTH OF THE NATION.

GOVERNMENT OIL FACTORY.
Calicut

ADS. 114

சென்னை இராஜதானிக்கும் அடுத்துள்ள
சமஸ்தானங்களுக்கும் ஏஜண்டுகள் :

மெஸர்ஸ் பாரி அண்டு கம்பெனி லிட்., மதராஸ்

வாழையடி வாழையாக
வந்த நம் கூந்தல்
வளர்ப்புக் கலையின்
பொக்கிஷம்

ஜாப்கோ

ஹேர் குரோயர்

இளவயதில் ஏற்படும் நரையைப்
போக்கி, உதிரும் கேசத்தை
நிறுத்தி கூந்தலை நீண்டு வளரச்
— செய்யும் —

ஜயபாரதம் கம்பெனி
மல்லேஸ்வரம் • பெங்களூர்

தோட்ட வேலை

உணவுப் பொருள் உற்பத்திப் பெருக்கத்தில் ஈடுபட மண்ணைக் கொத்திக் களையெடுத்து, நீர் பாய்ச்சவும், வரப்பு கட்டவும் எஃகினாலான கருவிகள் இன்றியமையாதவை

டாடா எஃகு

பிரசுரம்: தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல் கம்பெனி லிமிடெட்
தலைமை சேல்ஸ் ஆபீஸ்: 102-A, கிளைவ் தெரு, கல்கத்தா

தீராத விளையாட்டுப் பிள்ளை

சி. ந. வைத்தீஸ்வரன்

தீராத விளையாட்டுப் பிள்ளை என்று வெகு அழகாக பாரதியார் கண்ணன் இயலை வர்ணித்தார். இந்த இயல் எல்லாக் குழந்தைகளுக்கும், பொது மக்களுக்கும், மாக்களுக்கும் இது பொது. ஜீவராசிகளில் மற்ற பிரிவுகளைவிட முனை புண்ணிகளில் குழந்தைமை மிகவும் நீண்டது. அதிலும் மனித வர்க்கத்தில்தான் எல்லாவற்றையும் விட நெடியது. இந்தக் குழந்தைமையில் குழந்தையானது தாயின் உதவியையும், தந்தையின் உதவியையும் பொதுவாகச் சூழ்நிலையின் உதவியைத் தேடுகிறது. மீன், தவளை, பூச்சி போன்றவைகளில் பெற்றோருக்கும், பிள்ளைகளுக்கும் ஒரு தாக்கலும் இல்லாமல் போய் விடுகிறது. குழந்தைகள் தாங்கள்ாகவே தத்தம் வளர்ச்சி நாடகத்தை சீக்கிரத்தில் நடத்தும் ரௌடிகள் ஆகி விடுகின்றனர். ஆனல் மானுடக் குழந்தை நெடிய காலம் பெற்றோர் உதவியைப் பெற்று வளர்கிறது.

தோட்டத்திலே வெள்ளைப் பசு மேய்ந்து கொண்டிருக்கும் சாது போல். ஆனல் கன்றுக் குட்டி துள்ளித் துள்ளிக் குதிக்கும். சிறிது நேரம் பாலூட்டும் பிறகு போகும். வாலை மேலே வில் போல் நெளித்துக் கொண்டு நாலு கால் பாய்ச்சலில் ஆகாயத்தில் தாவிக் குதிக்கும். ஓடும், நிற்கும். சில சமயங்களில் அடி தவறி கீழே தொப்பென்று விழும். மறுபடியும் எழுந்து துள்ளிக் குதிக்கும். இந்த நிலையில் இந்தக் கன்றுக் குட்டியைப் பிடிக்கின்றவன் உண்மையில் திறமை சாலி தான்.

இதைப் போலவே இரு சிறு நாய்க் குட்டிகள் ஒரு கந்தைத் துணிக்கு விளையாட்டுப்போரிடும். ஒன்றை யொன்று கடிக்கும், கௌவும், உருட்டும். தள்ளும், பதுங்கும், தாவும், புறண்டும். எல்லாம் விளையாட்டுக்கு. பூனைக் குட்டி தாயின் மேல் குதிக்கும். தாய்ப் பூனையின் வாலைப் பதுங்கிப் பதுங்கிப் பிடிக்கப் பார்க்கும். தாய்ப் பூனை அமைதியாகப் படுத்துக் கொண்டு அரைக் கண் தூக்கத்தில் தன் வாலை மெதுவாக ஆட்டிக்கொண்டிருக்கும். குட்டிப் பூனைக்கு குதூகலம் பொங்கிப் பொங்கி பூனை வாலைப் பிடிக்கின்ற தீராத விளையாட்டில் இன்புறும். வருங் காலத்திலே எலி பிடிக்க உதவுகின்ற இன்ப விளையாட்டு இது. இப்படியே எல்லா மிருகப் பாப்பாக்களும் ஓடி விளையாடி இன்புறுகின்றன.

உடல் வளர்ச்சிக்கு நல்ல உணவு வேண்டும். அவ்வுணவில் மாவுப் பொருள், ஊன் செய் பொருள் நிணப் பொருள் விட்டமின் முதலியவை தகுந்த அளவில் கலந்திருக்க வேண்டும். அவற்றில் குறை ஏற்பட்டால் பல உடற் கோளாறுகள் ஏற்படுகின்றன என்று நவீன உடல் நூலார் கூறுகின்றனர். கண் வலி என்று வைத்தியரிடம் கூறினல் "கீரை சாப்பிடு. மீன் எண்ணெய் சாப்பிடு. அதில் சில விட்ட

> "குழந்தையின் உள வளர்ச்சிக்கு விளையாட்டு அவசியம். குழந்தை தன்னுடைய உள்ளத்தை மலரச் செய்வதற்கு விளையாட்டையே தன் உள உண்டியாகப் பயன் படுத்திக் கொள்கிறது."

மின்கள் இருக்கின்றன; அவைகள் வலியை குணமாக்கும் என்கின்றனர். முன்னெல்லாம் இதைப் பித்தன் கனவென்று எண்ணினோம்; இப்பொழுது சர்வ சாதாரணமாகப் போய் விட்டது.

அம் மாதிரியே குழந்தையின் உள வளர்ச்சிக்கு விளையாட்டு அவசியம். குழந்தை தன்னுடைய உள்ளத்தை மலரச் செய்வதற்கு விளையாட்டையே தன் உள உண்டியாகப் பயன் படுத்திக் கொள்கிறது. சில குழந்தைகளில் உடல் கோளாறுகள் ஒன்றும் இல்லாவிடினும், காக்கா வலி, ஆங்காரம், பொறாமை, அச்சம், பொய் பேசுதல், கள்ளத்தனம் போன்ற பலவற்றுக்கு மருந்து விளையாட்டென்று உள நூலார் கண்டு பிடித் திருக்கின்றனர். இத்தகைய நோய்களைத் தீர்ப்பதற்கு விளையாட்டு மன்றங்கள் மேல் நாட்டில் அமைத்திருக்கின்றனர். தற்போது இவற்றை நாம் பகல் கனவென்று சாதாரணமாக எண்ணுவது சகஜமே.

பிறப்பே ஒரு விளையாட்டு. பிறந்ததும் குழந்தை விளையாடுகிறது. ஆனால் குழந்தையின் முதல் விளையாட்டுக்கு பொம்மைகளும், பந்துகளும், ஊதல்களும் கிலுகிலுப்பையும் தேவையில்லை. குழந்தையின் உடலிலே முதல் விளையாட்டுக்கு வேண்டிய கருவிகள் இருக்கின்றன. அக் கருவிகளைக் கொண்டே தன் சூழ்நிலையை நிர்ணயிக்கிறான், தன் உள்ளத்தில் தோன்றுகின்ற பற்பல மனோ விகாரங்களை வெளிக் காட்டுகிறான். இவற்றை நவீன உள இயலார் கண்டு குழந்தைக்கு வேண்டிய உள வளர்ச்சி உதவியைப் புரிய நமக்கு வழி காட்டுகின்றனர்.

குழந்தையின் பிரதம விளையாட்டுக் கருவி அவனுடைய வாய். இதனால் தன் தாயாரை உணர்ந்து கொள்கிறான். தன்னை உண்பித்து வளர்க்கின்ற ஏதோ ஓர் உணர்ச்சி பெற்ற பண்டமெனவே குழந்தை கருதுகிறான். குழந்தை ஓர் உண்ணும் மிருகம், ஊட்டும் குட்டி. வாயான உணர்ச்சி பெற்ற அங்கத்துடன் அவனுடைய தீவிர உணர்ச்சிகள் பிணைக்கப்பட் டிருக்கின்றன. பசித்த போது தாய் முலை உண்கிறான். பசி சற்று ஆற்றினவுடன் தாய் முலையுடன் விளையாடுகிறான். இதிலிருந்து அவனுடைய அன்பான ஆனந்தம் வெளியாகிறது. பிறகு வாயைச் சப்புவான், நகிலை வாயி லிருந்து நழுவ விடுவான், மறுபடியும் வாயால் பற்றிக் கொள்வான். தாயானவள் தன் தனத்தை அன்போடு குழைந்தையிட மிருந்து வாங்கிக் கொண்டால் எவ்வளவு சீக்கிரத்தில் காட்சி மாறுகிறது. முகத்தைச் சுளிக்கிறான், சிவக்கிறது. வருத்தமும் ஆங்காரமும் கலந்து அலறுகிறான். உள்ளங் கைகள் மடங்குகின்றன. உடலே விறைக்கிறது. இந்த நிலையில் தாய் பால் கொடுக்க முன் வந்தால் உடம்பு விறைப்பி லிருந்து தளர்ச்சி யடைகிறது. முகச் சுருக்கு மாறுகிறது. பெரு மூச்சு விடுகிறான், திருப்தி அடைந்து குணக்கிறான். வாய் பசியை ஆற்றும் வேலையில் இறங்கி விடுகிறது. என்ன பசி? பாலுக்கும், அன்புக்கும், விளையாட்டுக்கும் பசி. ".........வயிற சைந்தாய் வனமுலைகள் சோர்ந்து பாய திருவுடைய வாய் மடுத்துத் திளைத்துதைத்துப் பருகிடாயே" என்று பெரியாழ்வார் திருமொழியில் கண்ணனை முலையுண்ண அழைக்கும் காட்சி நம் கண் முன் வருகிறது. இந்தப்

பசியை நாம் அடக்கினல் குழந்தை வருங் காலத்தில் பல உளக் கோளாறுகளையும் உடல் கோளாறுகளையும் பெறுகிருன் என்கின்றனர். வயது வந்த குழந்தை கைவிரல் சூப்புவதும், ரௌடிகளில் சிலர் ஓயாது சிகரெட் குடிப்பதும், குழந்தைமையில் வேண்டிய அளவு தாய் முலையோ, புட்டி "நிப்பிளையோ" சூப்பித் திருப்தி அடையாத குறைபாடடின் விளைவாய் இருக்கலாம் என்று அறிவாளிகள் கருதுகின்றனர்.

இவ்வாறே குழந்தை கடிக்கத் தெரிந்தவுடன் தன் பற்களின் பதத்தை கிடைத்த பண்டங்களின் மேலெல்லாம் பிரயோகித்து விளையாடுகிருன். இவன் பேசத் தெரிந்தவுடன் தன் குரலுடன் விளையாடுகிருன். பற்பல வகையான ஒலிகளையும் ஓசைகளையும் உண்டாக்கி இன்புறுகிருன். அழுதால் அம்மாள் வருவாள்; கெஞ்சினல் அவள் சிரிப்பாள், என்று தெரிந்து கொள்கிருன். கோபக் குரல், இன்பக் குரல், துக்கக் குரல் இன்னும் பலவற்றின் பலா பலன்களை சோதித்து விளையாடுகிருன், வரவர தன் உணர்ச்சிகளையும், ஆசைகளையும் தெளிவான மொழியில் வெளியாக்குகிருன்.

வாயைப் போலவே குடலின் இறுதிப் பகுதியின் மேலும் குழந்தையின் கவனம் செல்கிறது. குழந்தைக்குத் தன் கை கால்களின் இயக்கத்தில் பிறகு என்ன விருப்பம் தோன்றுகிறதோ அதேபோல் மலங் கழிவதிலும் ஓர் குதூகலத்தை வெளியாக்குவது நன்கு கவனிப்போருக்கு விளங்கும். சுமார் எட்டு மாதக் குழந்தையை மலங் கழியும் பொழுது கவனித்தால் நெளிவான், உறுமுவான், சலசல என்று ஒலி யுண்டாக்குவான். பிரகாசமான வஸ்துவை அவன் முன் ஆட்டினல் எவ்வளவு களிப்படைவானே அவ்வளவு மலங் கழியும் போது சந்தோஷப் படுவான். கடைக் குடல் தசைகளும், மல வழியாகிய அபானத்தின் வட்டத் தசைகளும் முதல் மாதங்களில் வலுவற்றுத் தளர்ந்து இருக்கின்றன. ஆகையால் குழந்தைக்குத் தெரியாமலே கழிந்து கொள்கிறது. சுமார் ஒரு வருஷத்துக்குள் மலங் கழிவு தசைகள் வல்லமை பெறுகின்றன. மலத்தை அடக்க முடிகிறது. அப்பொழுது அதன் காரணமாக கடைக் குடலில் ஓர் சக்தி அழுக்குகிறது. இந்த அழுக்கலால் குழந்தை ஓர் இன்பம் பெறுகிறது. வேண்டுமென்றே குழந்தை விளையாட்டாக அடக்கி இன்புறும். இளமையில் மலச் சிக்கலால் துன்புறும் குழந்தை வருங்காலத்தில், பிடிவாதக்காரனாகவும், சுய சித்தனாகவும் இருக்கலாம். தளர்ந்த கடைக் குடலைப் பெற்று அடிக்கடி மலப் பிரவிர்த்தி செய்கின்ற குழந்தைகள் வருங் காலத்தில் அன்புடையவர்களாகவும், தயாள குணமுடையவர்களாகவும் ஆகலாம் என்று அறிவாளிகள் கருதுகின்றனர். ஆனல், இந்தத் தர்க்கத்தை வெகு தூரம் கொண்டு போகப் படாது.

எத்தனை குழந்தைகள் மலத்துடன் விளையாடுவதை நாம் பார்த்துக் கண்டித் திருக்கிறோம். ப்ரௌடிக்கு அது அசங்கியமாகக் காண்கிறது. ஆனல், குழந்தைக்கு அது தன்னுடைய சுய சிருஷ்டி யெனத் தோன்றுகிறது. தானக வேண்டுமென்றுல் ஆக்கக் கூடிய முதல் பொருள் மலம். அதனல்தான் அதில் அவன் அவ்வளவு இன்பங் காண்கிருன். நம்

முடைய மனப்பான்மையைக் கொண்டு அவனுடைய தொழிலை —கைத் தொழிலை—கேவலம் என்று எண்ணி விடக் கூடாது. சில குழந்தைகள் ஒரே இடத்தில் உட்கார்ந்து மலங் கழிய மாட்டார்கள். மாறி மாறி உட்கார்ந்து இன்புறுவார்கள். இதை நாம் கேவலமென்று கண்டித்தால் இதன் பலனை வருங் காலத்தில் உளக் கோளாறுகளில் பிரதிபலித்துக் கொள்கிறது. பொதுவாக ஒன்றரை யாண்டில் குழந்தை தன்னை அறியாமலே தன் துணியைக் கெடுத்துக் கொள்ளாது. எனினும், மூன்று மாதத்திலிருந்தே அனுபோகமும் அறிவும் நிறைந்த தாயார் குழந்தை செய்கின்ற ஜாடைகளில் முன் ஜாக்கிரதையாக நடந்து கொள்ளலாம்.

கடைக் குடலைப் போலவே சிறு நீர்ப் பையும் குழந்தையின் ஆட்சிக்குள் வருகிறது. பூரண ஆட்சி பெற்று மூத்ரம் பேயாது தாங்கக் கூடிய திறமை இரண்டாம் ஆண்டில் தான் முடியும் எனினும், சில குழந்தைகள் ஓராண்டுக்குள்ளேயும் பழகிக் கொள்கின்றன. தன் இஷ்டம் போல் மூத்ரம் பேயலாம் என்று சிறு குழந்தை உணர்ந்தவுடன் இதில் ஒரு தனி விளையாட்டைக் காண்கிறது. விரும்பியவர்கள் மடிமேல் உட்காரும் போது குழந்தை மூத்ரம் பெய்வது சகஜம் என்று பாமர மக்கள் நம்புகின்றனர். நம் மடிமேல் உற்சாகத்தோடு உட்கார்ந்த குழந்தை நம் துணியை நனைக்க ஆரம்பித்தால் ஒரு வெறுப்புடனும் சலிப்புடனும் வெடுக்கென்று அவனை மடிமேல் இருந்து எடுக்கும் போது நீர்ப் போக்கு சட்டென்று நின்றும் விடும். அந்த செய்கையில் அவன் அடைந்து கொண்டிருந்த இன்பம் துலைந்து அச்சமும், வெறுப்பும் காட்டுகின்ற முகத் தோற்றத்தைக் காணலாம். குழந்தைக்கு சுத்தப் பழக்கம் வேண்டும் என்ற ஒரு அபிப்பிராயத்துடன் நாம் நம் காரியங்களைச் செய்து விடக் கூடாது.

ஏனென்றால் இவன் இவ்வாறு தன் உடல் உறுப்புக்களின் மூலம் சில தீராத விளையாட்டுக்களை காட்டி இன்புறும் சமயத்தில் நாம் அடக்கு முறைகளை அனுசரித்தால் அவற்றின் பலன்கள் சில சமயங்களில் மனக் கோளாறுகளிலும், வெறுக்கின்ற காமப் பழக்கங்களிலும் வந்து முடிகின்றன. இதையெல்லாம் கூர்ந்து கவனிக்கும் பொழுது பெற்றோராய்ப் பிள்ளை வளர்ப்பது ஏதோ இலேசானதன்று என்பது உண்மையாகி நாம் என் பெற்றோர் ஆனோம் என்ற அச்சத்தையும் தந்து விடுகிற தல்லவா? ஆனால், நமக்கு அச்சத்தைத் தந்த உள நூல் ஆராய்ச்சி அஞ்சாமையையும் தரவல்லது. அதையும் நாம் வருங் காலத்தில் அறிவோம்.

*

பெரியார் யார்?

பெரியார் என்று கூறுவதற்குத் தகுதி பெற்ற ஆறு சரித்திரப் பெயர்களைக் கூறுமாறு கேட்டதற்கு எச். ஜி.வெல்ஸ் குறிப்பிட்டது, ஏசு கிறிஸ்து, புத்தர், அசோகர், அரிஸ்டாட்டில், ரோஜர் பேகன், ஆப்ரஹாம் லிங்கன்—இவர்கள் தான்.

தக்கூரின் கிணறு

பிரேம் சந்த்

லோட்டாவை வாயருகில் கொண்டுபோனான் ஜோகு. ஆனால், தண்ணீரோ சகிக்க முடியாதபடி நாற்றமடித்தது. "இது என்ன தண்ணி? என்றால் சாப்பிடவே முடியாது. இம்; கெட்ட வாடை மூக்கைத் துளைக்கிறதே. தொண்டை வறண்டு போச்சு; கெட்ட தண்ணியைக் கொடுக்கிறியே!"

ஒவ்வொரு நாளும் சாயங்காலத்தில் தண்ணீர் கொண்டு வருவாள் கங்கி. கிணறோ வெகு தூரத்தில் இருந்தது. திரும்பத் திரும்பக் கிணற்றுக்குப் போவதென்றாலோ கஷ்டம். நேற்று அவள் கொண்டு வந்த தண்ணீர் கொஞ்சங்கூட நாற்றமடிக்கவில்லை. இன்று என்ன நடந்துவிட்டது? அவள் நீரை முகர்ந்து பார்த்தாள். ஆம்; உண்மைதான். ஜலம் கெட்ட வாடை அடித்தது. நாற்றமோ மூக்கைத் துளைத்தது. எந்தப் பிராணியோ கிணற்றில் விழுந்திருக்க வேண்டும். பிறகு அது அங்கேயே தண்ணீரில் ஊறி அழுகிப் போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த மாதிரி வாடை அடிக்குமா? அது போகட்டும். இப்போது தண்ணீருக்கு என்ன செய்வது? நல்ல ஜலம் அவளுக்கு எங்கே கிடைக்கும்?

பக்கத்திலே தக்கூரின் கிணறு இருக்கிறது. ஆனால், அங்கே போக அவளை யாரேனும் அனுமதிப்பார்களா? ஒருகாலும் மாட்டார்கள். தூரத்தில் வரும்போதே கண்டபடித் திட்ட ஆரம்பித்து விடுவார்கள். கிராமத்தின் மறுபுறத்தில் சாஹுவின் கிணறு இருக்கிறது. ஆனால், அங்கேயும் அவள் போகக்கூடாதே! வேறே நாலாவது கிணறு அந்த பாழும் பட்டிக்காட்டில் இல்லை.

பல நாட்களாக ஜோகுவுக்குக் காய்ச்சல். ஜுரம் தணியவே இல்லை. தாகமோ தாங்க முடியாதபடி இருந்தது. எவ்வளவு நேரந்தான் பொறுத்திருப்பது? சிறிது நேரம் சென்றதும், "இனிமேல் பொறுக்க முடியாது. நாக்கை இழுக்குறதே! கண்ணை சுழட்டுதே! எப்படியாச்சும் மூச்சைப் பிடிச்சாவது இதைக் குடிக்குறேன்" என்று கதறினான்.

அவனுக்குக் கெட்ட தண்ணீரைக் கங்கி கொடுக்கவில்லை. அதைச் சாப்பிட்டால் ஜுரம் அதிகமாகி விடும் என்பதை மாத்திரம் அவள் அறிந்திருந்தாள். தண்ணீரைக் கொதிக்க வைத்தால் அது சுத்தமாகும் என்பது அவளுக்குத் தெரியாது. மனத்தைக் கவலை அரித்துத் தின்றது. "இதை எப்படிக் குடிப்பாய்? எந்த மிருகம் விழுந்திச்சோ யாரு கண்டா? கடவுளுக்கு தான் தெரியும். கிணத்துலே யிருந்து நல்ல தண்ணியாக் கொண்டாரேன்."

என்ன ஆச்சரியம்! ஜோகு அவளைப் பார்த்தான்: "நல்ல தண்ணி ஒனக்கு எங்கே கிடைக்கும்?"

"ரெண்டு கேணி இருக்குதே? ஏதாவது ஒண்ணிலே ஒரு

தீண்டத் தகாதவள் என்று சமூகத்தால் தவறாகக் கருதப்படும் ஒரு ஜாதியைச் சேர்ந்தவளுக்கு, தண்ணீரைத் தொடும் பாத்தியதைகூடக் கிடையாதாம்! ப்ரேம் சந்தின் இந்தச் சமூகக் கதையை ஹிந்தியிலிருந்து மொழி பெயர்த்தவர் ஸ்ரீ வ. ராமதாஸ்.

லோட்டா தண்ணிகூடக் கெடக் காமயாப் போகும்?''

"ஐயையோ, வேண்டாம்! நீ சும்மா இருந்தாப் போதும். அங்கே போனல் உன் மூஞ்சி கீஞ்சி யெல்லாம் வீங்கிப் போகும். பல்லெல்லாம் ஒடைஞ்சுடும். அவுங்க நம்மளே சும்மா விட்டுடுவாங்களா? ஏளெ செத்தா என்ன, பொழைச்சா என்ன? யாரு கவனிக்கப் போரு? முதல்லே பிராமணன் எல்லா சாமி பேரிலேயும் சபிப்பான். தக்கூர் அடி அடின்னு அடிச்சுடுவான். அப்பறம் சாஹூவோ ஒண்ணுக்கு அஞ்சு தடவையா வட்டி போட்டு வாங்குவான். அப்புறம் சாகுறதைத் தவிர வேற ஒரு வழியும் இல்லே. நம்மைப் பத்திக் கவலைப் படுவாரே இல்லே. இப்படிப்பட்ட மனுஷங்கதாஞ உன்னைத் தண்ணியெடுக்க விடுவாங்க?'' என்று படபடத்துக் கூறினன். அவன் உடல் நடுங்கியது. சமூகத்தைக் கண்டு பயந்தான் அவன்.

கங்கி பதிலளிக்கவில்லை. ஏன்? அவன் சொன்னதெல்லாம் உண்மை. ஆனல், அவள் அவனே அந்த கெட்ட தண்ணீரைக் குடிக்கவும் விடவில்லை.

நிசப்தம். ராத்திரி ஒன்பது மணி. நாளெல்லாம் உழைத்துக் களைத்தவர்கள் ஆழ்ந்து தூங்கினர்கள். ஆனல், இன்னுங்கூடச் சில சோம்பேறிகள் தக்கூரின் வீட்டில் வம்பளந்துகொண்டிருந்தார்கள். உடல் உழைப்பிற்குரிய நேரமோ, சந்தர்ப்பமோ இது வல்ல. சட்ட சம்பந்தமான வீரப் பிரதாபங்களை அள்ளிக் கொட்டிக்கொண்டிருந்தார் தக்கூர் சாகிப். ஒரு குறிப்பிட்ட வழக்கில் போலிஸ் இன்ஸ்பெக்டருக்கு லஞ்சம் கொடுத்து எவ்வளவு சாமர்த்தியமாகத் தப்பித்துக் கொண்டார்! முக்கியமான மற்றொரு வழக்கில் தஸ்தாவேஜு வேண்டியிருந்தது. ஆனல், குமாஸ்தாக்கள் எல்லோரும் 'கிடைக்காது' என்று சொன்னர்கள். ஐம்பது, நூறு என்று லஞ்சம் கேட்டார்கள். அப்படியிருந்தும் அவர் ஒரு பைசாகூடச் செலவழிக்காமல், புத்திசாலித்தனமாக அந்தத் தஸ்தாவேஜுப் பிரதிகளைப் பெற்றுக் கொண்டார். எதற்கும் மூளை தான் வேண்டும்.

இந்தச் சமயத்தில்தான் கங்கி அங்கு வந்தாள். மினுக் மினுக் கென்று எரிந்துகொண்டிருந்த விளக்கின் மங்கலான வெளிச்சம் கிணற்றின்மீது விழுந்தது. அவள் தன்னுடைய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தாள். கிணற்றின் மேடை நிழலில் மறைந்து நின்று காத்திருந்தாள். கிராமம் முழுவதற்கும் இந்தக் கிணற்று நீர் தான். இந்தத் துரதிருஷ்டசாலிகளைத் தவிர வேறு எவருக்கும் தடை இல்லை.

இந்தப் பழக்கங்களையும், கட்டுப்பாடுகளையும் எதிர்த்து மீறிவிட்டது கங்கியின் உணர்ச்சி. 'அவர்கள் மட்டும் எப்படி உயர்ந்தார்கள்? நாங்கள் ஏன் தாழ்ந்தவர்கள்? கழுத்திலே பெரிய உருண்டையான கயிற்றைக் கட்டிக் கொள்வதினலா? இங்கே கூடியிருப்பவர்களெல்லாம் வடி கட்டின அயோக்கியர்கள் தானே? ஒவ்வொருவனும் ஒவ்வொரு அயோக்கியத் தொழிலில் கெட்டிக்காரன். ஒருவன் சூதாடுவான். இன்னொருவன் நெறி கெட்டவன். மற்றவனே பொய்க் கையெழுத் திடுவதிலே அசகாய சூரன். கொஞ்ச நாளைக்கு முன்னே இடையன் வீட்டு ஆட்டை அக்கிரமமாக ஓட்டிப் போய் அதை வெட்டி

ஆக்கித் தின்றுனே தக்கூர்? பண்டிதர் வீடு வருஷம் முன்னூற்று அறுபத்தைந்து நாளும் சூதாட்டக் குகை. கலப்பு செய்யைத் திருட்டுத்தனமாக விற்கிறதிலே மன்னன் சாஹூ. கடுமையாக வேலை வாங்கிய பிறகு கூலி கொடுக்கிற தென்றுல் விளக்கெண்ணெயை விழுங்குகிற மாதிரி அவர்களுக்கு! என்னைவிட அவர்கள் எப்படி உயர்த்தி? வாய் கிழியப் பேசுவார்கள்; எங்களைப் பாருங்கள். நாங்கள்தான் அதிசயப் பிறவி என்று நம் வீட்டு உச்சியிலே இருந்து கத்துகிறுமா? இல்லையே. நான் கிராமத்துக்குள்ளே போனுல் என்னை எரிக்கிற மாதிரி யல்லவா பார்க்கிருர்கள். அவர்களுக்குப் பிரமிப்புப் பிடித்துத் தூக்கிவாரிப் போட்ட மாதிரியல்லவா ஆகிவிடுகிறது? ஆனுல், தங்களுடைய உயர்ந்த அந்தஸ்தைப் பற்றி அவர்களுக்கு எப்படிப்பட்ட கர்வம்?' என்று ஆத்திரத்தோடு எண்ணமிட்டது அவளுடைய மனது.

யாரோ கிணற்றுக்கு வருகிற சப்தம் கேட்கிறது. கங்கியின் இருதயம் படபட வென்று அடித்துக் கொண்டது. அவளை யாராவது பார்த்து விட்டால் என்ன பயங்கரமான நிலைமை ஏற்பட்டு விடும்? பட பட வென்று முதுகிலே குத்தும், அடியும் விழும். ஆகவே, அவள் குடத்தையும், கயிற்றையும் எடுத்துக்கொண்டு மர நிழலில் பதுங்கிக் குனிந்து சென்று ஒளிந்து கொண்டாள். அவர்கள் எந்த விதமான இரக்கமும் காட்ட மாட்டார்கள். பாவம்! மங்குறுவை அடி அடியென்று அடித்தார்கள். அவன் இரத்தம் கக்கிச் செத்தே போனுன். காரணம் என்ன? மன்னிப்புக் கேட்க மாட்டேன் என்று அவன் சொன்னதுதான். தாங்கள்தான் உயர்ந்தவர்கள் என்ற அகங்காரம்!

இரண்டு ஸ்திரீகள் கிணற்றிலிருந்து நீர் இறைத்தனர். இருவருமாகச் சம்பாஷித்துக் கொண்டனர். "அவரு சாப்பிட உக்காந்ததும் உடனே தண்ணி கொண்டான்னு உத்திரவு போட்டுட்டாரு. ஆனு, குடம் வாங்கத்தான் பணமில்லே."

"இந்த ஆம்பளெங்களே இப்படித்தான். நாம் கொஞ்ச நேரம் ஆயாசமாக இருக்கிறது அவுங்களுக்குப் பிடிக்காது."

"ஆமா, ஒரு தவலையை அவராலே கெணத்துக்குக் கொண்டார முடியுமா? அதனுலேதான் எனக்கு உத்திரவு போட்டுப் போகச் சொல்லிட்டாரு. நான் அடிமை மாதிரி இருக்கேன்."

"நாமெல்லாம் அடிமையா இல்லாமே வேறென்னவாம்? சம்பாதிக்கிறதை யெல்லாம் நம்ம கிட்டயா கொடுக்கிருங்க? சமயா சந்தர்ப்பத்திலே கொஞ்சக் காசு எடுத்துக்கலாம். அடிமைகளுக்கு விசேஷ விஷயங்க இருக்குதா என்ன?"

"இல்லே அக்கா, ஒரு நிமிஷங் கூட ஓய்வு ஒழிச்சல் இல்லாமே உழைக்கிறேனே, அதுக் கெல்லாம் வேறெங்கேயாவது நான் இருந்தாக் கொஞ்சம் நல்லா சுகமா இருக்கலாம். அவுங்க நன்னிகூடக் காம்பிப்பாங்க. இங்கே மூச்சுவிடாம வேலைக்கு மேல வேலை செய்யணும். அப்படிச் செஞ்சாலும் சந்தோஷமா ஒரு வார்த்தைகூட இல்லே. அது மட்டுமா? நான் ஏதோ கடனுக்கு, சுமையா இருக்குற மாதிரி நெனைக்கிறுங்க."

அவர்கள் போய்விட்டார்கள். நிழலி லிருந்து கங்கி வெளியே

வந்தாள். கிணற்றின் மேடைக் கருகில் சென்றுள். சோம்பேறி களும் போய்விட்டனர். தக்கூரின் வீட்டுக் கதவு மூடி யிருந்தது. அவர் வீட்டுக் குள்ளே சோபாவில் சாய்ந்து கொண்டிருந்தார். நீண்ட பெரு மூச்சு விட்டாள் கங்கி. துன்பந் தொலேந்தது. இது தான் சம யம். முன் காலத்தில் மோகினி அமிர்தத்தைத் திருடுவதற்கு எவ்வளவு முன் ஜாக்கிரதையாக வும், கவனமாகவும் போயிருக் குமோ அதைவிட அதிக எச்ச ரிக்கையாக, அமைதியுடன் காலேத் தூக்கி வைத்து மேடை யின் மேல் ஏறினுள். இதைப் போன்ற வெற்றி உணர்ச்சி அவ ளுக்கு என்றைக்குமே ஏற்பட்ட தில்லே.

குடத்தின் கழுத்தைச் சுற்றிக் கயிற்றைக் கட்டினுள். ராத்திரி யில் எதிரியின் கோட்டைக்குள் சிப்பாய் நுழைவதைப் போல நாலாபுறமும் பார்த்தாள். அவள் இப்போது பிடிக்கப்பட்டு விட் டாலோ...? ஈவோ, இரக்கமோ, மன்னிப்போ ஒன்றும் கிடைக் காது.

கடவுளே யெல்லாம் மனத்தில் நினைத்து வேண்டிக்கொண் டாள். தைரியம் அனைத்தையும் ஒன்றுகச் சேர்த்துக் குடத்தைக் கிணற்றுக்குள் இறக்கினுள். குடம் நிசப்தமாக நீரில் மூழ்கி யது. சிறு சப்தங்கூட உண்டாக வில்லே. பலங் கொண்ட மட்டும் சேர்த்து விறு விறு என்று மேலே இழுத்தாள். குடம் கிணற்றின் வாயருகில் வந்து விட்டது. போட்டிப் பந்தய வீர னுல்கூட அவ்வளவு நன்றுக வேகத்துடன் இழுத்திருக்க முடியாது.

குடத்தைக் கையில் வாங்கி வெளியே எடுக்கக் குனிந்தாள். திடீரென்று தக்கூரின் வீட்டுக் கதவு திறந்தது. என்ன பயங் காம்...! சிங்கத்தின் வாய்கூட இவ்வளவு பயங்கரமாக இருக்க முடியாது!

கயிற்றின் பிடிப்பு கங்கியின் கையி லிருந்து நழுவியது. குடம் தடாலென்று விழுந்தது. சில நிமிஷ நேரம் நீர்க் குமிழிகளின் சப்தம் கேட்டது.

''யாரது? யாரது...?'' என்று கேட்டுக்கொண்டே கிணற்றை நோக்கி வந்தார் தக்கூர் சாகிப். கங்கி அங்கே இல்லே. தன்னுல் எவ்வளவு வேகமாக ஓட முடி யுமோ அவ்வளவு வேகமாக ஓடி விட்டாள்.

வீட்டுக்குள்ளே அவள் நுழைந்தபோது கெட்டுப்போன அழுக்கு நீரை ஜோகு குடிப்ப தைக் கண்டாள்.

✲

எழுத்தாளர் ரகசியம்!

இரண்டு பிரசித்த எழுத்தாளர்கள் சந்தித்தனர்.

"நான் எழுதியுள்ளவை யெல்லாம் சுத்த மோசம் என்பதை உணர எனக்கு இருபது வருஷங்கள் பிடித்தன'' என்று பெருமூச்சு விட்டார் அவ்விருவரில் வயதில் பெரியவரான எழுத்தாளர்.

மற்றவர் "அதன் பிறகு ஏன் எழுதுவதை நிறுத்த வில்லே?'' என்று கேட்டார்.

"நான் என்ன செய்யட்டும்? அதற்குள்ளேதான் நான் அதிகப் பிராபல்யம் அடைந்துவிட்டேனே!'' என்றுர் அந்த எழுத்தாள நண்பர்.

"உங்கள் சருமத்தை
லக்ஸ் டாய்லட் சோப்
குளுமையாகவும். அழகுடையதாகவும்
வைத்துக்கொள்ளுகிறது" என்று
சொல்லுகிறுர்
ஹஸன்பானு
LUX
TOILET SOAP
சினிமா நட்சத்திரங்கள் விரும்பும்
அழகையளிக்கும் சோப்!
LTS. 141-111 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

ஈரல் குலே கட்டிவியாதிகள் குணப்படுத்த முடியும்.

ஈரல் குலேகட்டி வியாதிகளேக் கண்டு பயப்படக் கூடிய காலம் போய்விட்டது. வியாதி மிகவும் முற்றிவிட்டாலொழிய ஓர் அரிய உயிரைக் காப்பாற்ற முடியும்.

கீழ்கண்ட அறிகுறிகள் சந்தேகிக்க கூடியவை

அடிக்கடி ஜுரம் ஏற்படுதல், மலச்சிக்கல், அதிக மலப்போக்கு, வாந்தி, பசியின்மை, வயறு பொருமல், சோர்ந்து இருத்தல், அடிக்கடி சிறு நீருத்தல்.

ஆரம்பத்திலேயே ஜாக்கிரதை வேண்டும்

அசட்டை செய்தோ, சரியான சிகிச்சைத் தவரினுலோ ஆபத்தாய் முடியும்.

ஜம்மியின்
லிவர்க்யூர்
உபயோகியுங்கள்

குழந்தையின், ஈரல் குலேக்கட்டிக்கு ஜம்மியின் லிவர்க்யூர் உபயோகியுங்கள். எல்லா விடங்களிலும் விற்கப்படுகின்றன

ஜம்மி வெங்கிட்டரமணய்யா & சன்ஸ்
மைலாபூர் — மதராஸ்.

பிராஞ்சுகள்:— பம்பாய், கல்கத்தா, டில்லி, திருச்சிராப்பள்ளி, பெங்களூர், கும்பகோணம்.

அடுத்த விளையாட்டுப் பந்தயத்தில்



அம்ருதா
ரத்த சுத்தி திராவகம்..

கலக்கம், ஆயாசமில்லாமல் நன்கு விளையாடி வெற்றி பெறச் செய்கின்றது.

நரம்புகளை முறுக்கேற்றுகிறது

கேசரி குடீரம் லிட். மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம் சமஸ்தானம், ஆந்திர ஜில்லாக்கள், தமிழ் நாட்டுக்கு ஏஜண்டுகள்:
சீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்
பெர்ஹாம்பூர், செகந்திராபாத், பெஜவாடா, மதுரை.

புத்தக உலகம்

கம்பன் கவிதை: கிரௌன் 1×8. 140 பக்கம். விலை ரூ. 2-4-0. 2. **காஞ்சனமாலை:** ஆசிரியர்: மகா மகோபாத்யாய ஹரப் பிரஸாத சாஸ்திரி. மொழிபெயர்ப்பாசிரியர்: கு. ப. ராஜகோபாலன். கிரௌன் 1×8. 171 பக்கம். விலை ரூ. 2-8-0. வெளியிட்டோர்: நவயுகப் பிரசுராலயம், காரைக்குடி.

"பாவின் சுவைக்கட
லுண்டெழுந்து—கம்பன்
பாரிற் பொழிந்த தீம்
பாற்கடலை
நாவின் இனிக்கப்
பருகுவமே—நூலின்
நன்னய முற்றுந்
தெளிகுவமே"

என்று இன்னிசை அழைப்புக் கூறி, மொக்கு அவிழ்ந்த கமலத்தின் மகரந்தப் பொடிகளின் மீது மென்சீறடி பொருந்த நடம் புரியும் கவி மடந்தையின் அழகிய ஓவியம் இந்த இலக்கிய விமர்சனத் தொகுப்பு நூலுக்கு நுழைவாயிலாக அமைந்துள்ளது. "கம்ப ராமாயணமானது ஹோமர் எழுதிய இலியாதையும், விர்க்கிலீயன் எழுதிய ஏனயிதையும், மில்டனுடைய சுவர்க்க நஷ்டம் என்ற காவியத்தையும், வியாஸ பாரதத்தையும், தனக்கே முதனூலாக இருந்த வால்மீகி ராமாயணத்தையுங்கூட, பெருங் காப்பிய லட்சணத்தின் அம்சங்களுள் அனேகமாய் எல்லாவற்றிலும் வென்று விட்டது என்று சொல்லுவோம். இவ் விமர்சனத்தைத் தொடர்ந்து வாசிப்போருக்கு எமது இவ் வபிப்ராயத்தை மெய்ப்பிக்க முயலுவோம்" என்ற பீடிகையுடன், எழுபத்து மூன்று பக்கங்களில், "கம்ப ராமாயண ரசனை" எப்படி அமைய வேண்டும் என்பதை ஸ்ரீ வ. வே. சுப்ரமணிய ஐயர் அதியற்புதமாக எழுதியிருக்கிறார். தமிழில் இதுவரை யாரும் இவ்வளவு ஒழுங்காய், முறையாய், ஆழமாய்க் கவிதை விமர்சனம் செய்யவில்லை என்றே நான் கருதுகிறேன். ராவ் சாகிப் சு. வையாபுரிப் பிள்ளை ("கம்பர் திருநாள்"), டி. கே. சிதம்பரநாத முதலியார் ("கம்பரும் தமிழரும்"), ரா. பி. சேதுப் பிள்ளை ("மிதிலைக் காட்சி"), ராவ் சாகிப் மு. இராகவையங்கார் ("ராமபிரானது மறக்கருணை"), ரா. ஸ்ரீ. தேசிகர் ("இலக்குவன் சீற்றம்"), சு. கிருஷ்ணசாமி முதலியார் ("கம்பர் கவிப் பெருமை"), ஆகிய தமிழறிஞர்கள் மிகவும் பயனுள்ள விஷயங்களை மிகச் சிறந்த முறையில் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பதிப்பு இப்போதுதான் வெளிவந்திருக்கிறது என்று அறிய ஆச்சரிய மடைகிறேன். கவிஞர்களும், இலக்கிய ரசிகர்களும் இன்னும் பல பதிப்புக்கள் வரும்படி இதனை நிறைய வாங்கி, தாமும் படித்து, மற்றவர்களும் வாங்கிப் படிக்கச் செய்வார்களென்று நம்புகிறேன்.

மதிப்புரைக்கு இரண்டு இரண்டு புத்தகங்கள் அனுப்ப வேண்டும்

2. பௌத்த சமயத்தின் தூண்போல் இருந்து வந்த அசோகச் சக்கரவர்த்தியின் மகன் குணாளனைப் பட்ட மகிஷி திஷ்யரக்ஷை தனது காதலுக்கு அடிப்படுத்த என்னென்ன சாகசங்களெல்லாமோ செய்து பார்க்கிறாள். முறை தவறி நடக்கக் குணாளன் மறுக்கிறான். ஏமாற்றத்தின் விளைவான காதல் சூழ்ச்சிகளை மையப் பொருளாக வைத்துக் கவர்ச்சியான முறையில் கதை செல்கிறது. இந்தக் கதை ஏற்கெனவே வேறொருவரால் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்று வந்திருந்த போதிலும், ஸ்ரீ கு. ப. ரா. வின் இந்த மொழிபெயர்ப்பு மிகை என்று சொல்ல முடியாது. எழுத்துப் பிழை, இலக்கணப் பிழைகள் மலிந்திருப்பது இவரது பெருங்குறையே யாயினும், இவருடைய தமிழ் நடையில் உள்ள தனிக் கவர்ச்சி என்றும் பசுமை குன்றாது.

குஞ்சாலாடு (குறு நாவல்): ஆசிரியர்: நையாண்டி பாரதி. வெளியிட்டோர்: சாந்தி நிலையம், துறையூர், திருச்சி. இம்பீரியல் 1X16. 69 பக்கம். விலை ரூ. 1-4-0. கைக் காகிதம்.

"கடவுளும் கந்தசாமிப் பிள்ளையும்" என்ற அருமையான கதையை எழுதி, தமிழ் எழுத்துலகில் புதுமைப் பாதையைத் திறந்து விட்ட 'புதுமைப் பித்த'னுக்குச் சமர்ப்பணம் செய்யப்பட் டிருக்கும் இந்த நாவல் அற்புதமான கலைச் சிருஷ்டியாக மிளிர்கிறது. பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று தேவர்களையும் எழுத்தாளர் கிருஷ்ண பிள்ளை தேவலோகத்துக்குப் போய்ச் சந்திக்கிறார். ...மியில் நடக்கும் கந்தல் கோளங்களை ...ம் மூர்த்திகளும் நேரே வந்து பார்க்கும்படிச் செய்துவிடுகிறார். அனுபவமில்லாத இளம் பெண் ஒருத்தி அற்பப் பயல் ஒருவனுடைய சகவாசத்தால் வாழ்வில் சறுக்கி விழுந்து, திருந்த முயன்று, தெகிடுதத்தப் பேர்வழிகளின் மாயா ஜாலங்களில் சிக்குண்டு, மதி மயங்கி, கண்டவர்களாலெல்லாம் நுகர்ந்து, கசக்கி எறியப்பட்டு, இறுதியில், உணர்ச்சி மரத்துப் போய், எப்படிக் கேவலம் ஒரு'தோல் வியாபாரி'யாக மாறி விடுகிறாள் என்ற கட்டத்தைப் படிக்கும்போது, ஆத்திரமும், சோகமும், கழிவிரக்கமும், விரக்தியும், பின்பு அமைதியும் நம் உள்ளத்தில் சாடுகின்றன. நாவலின் அமைப்பு முறை புதுமையாயிருந்தாலும், மிகவும் பொருத்தமாக இருக்கிறது. பாத்திரங்கள் அனைத்தும் நம்முடன் நேரே பேசுகின்றன. நூல் நெடுகிலும் ஆங்காங்கு செறிந்து கிடக்கும் மனோதத்துவ உண்மைகள் நம்முடைய சிந்தனையைக் கிளறிச் சாட்டை வாங்குகின்றன. அனேக இடங்கள் அருமையான வசன கவிதைகளாக அமைந்துள்ளன. தமிழ் நடையில் மெய்ப்பாட்டு அழுத்தமும், கலைமெருகும் படிந்திருக்கின்றன. இத்தனை வகையில் நயம் பெற்றுள்ள இந்த நூலில், இவ்வளவு அச்சுப் பிழைகளைப் புகுத்தியிருப்பது திருஷ்டி பரிகார நோக்கத்தோடுதான் இருக்க வேண்டும்.

ஆலய மணி: ஆசிரியர்: ஆர். கே. விசுவநாதன். கிரௌன் 1X8. 216 பக்கம். விலை ரூ. 2-8-0. 2. சாமுண்டியின் சாபம் (கதைகள்): ஆசிரியர்: 'மாயாவி'. கிரௌன் 1X8. 220 பக்கம். விலை ரூ. 2-8-0. வெளியிட்டோர்: கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர், சென்னை.

"இந் நூல் வெளிவருவதில் ஆர்வம் காட்டிப் பொருளுதவி வழங்கிய திருப்பனந்தாள்—காசி மடம் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருணந்தித் தம்பிரான் சுவாமி அவர்களுக்கு" இதைச் சமர்ப்பணம் செய்திருப்பது நிரம்பப் பொருத்தமான காரியம். "தாம் எழுதிய கட்டுரைகளை ஒன்று சேர்த்து, எவ்விதத்தில் விஞ்ஞான சாஸ்திரத்தைப் படிக்கலாமென்று தமிழ் மக்களுக்கு வழிகாட்டியிருக்கிறார்" என்று ஸ்ரீ ப. சுப்பராயன் தமது முகவுரையில் கூறியிருப்பது போதாது. இந்த நூல் சும்மா வழிகாட்டுவதோடு மட்டும் அமையவில்லை. இருபத்து மூன்று கட்டுரைகளில், 'ஒலி இயல்', 'சூரியன் சந்திரன்', 'விஞ்ஞான தத்துவங்கள்', 'செயற்கைப் பொருள்களைச் செய்யும் முறை' முதலிய மிக்க பயனுள்ள விஷயங்களைப் பிழையற்ற, அழகிய தமிழில், தெளிந்த ஆராய்ச்சி அறிவின் துணைகொண்டு, தமிழர்களின் தற்காலத் தேவைகளைக் கண்முன் வைத்துக்கொண்டு இயற்றப்பெற்றிருக்கும் இந்த அரிய நூல் விஞ்ஞானத் தமிழ் இலக்கியத்தில் உயர்ந்த ஸ்தானம் வகிக்கக் கூடியது. நுணுக்கமான ஆங்கிலக் கலைச் சொற்களுக்கு மிக்க நயமான தமிழ்ச் சொற்கள் தரப்பெற்றுள்ளன. வட மொழிக் கலப்பு அதிகமில்லாமல் இவை அமைந்திருப்பது தமிழின் பெருமையையும் ஆசிரியரின் தமிழ் ஆர்வத்தையும் காட்டுவதோடு, சொல்லுக்கு மல்லாடும் ஏனைய தமிழர்களுக்கு நல்ல வழிகாட்டியாகவும் ஆகிறது.

2. மேலே கண்ட புத்தகத்தை வெளியிட்ட அதே பிரசுரகர்கள்தான் இந்த நொண்டிக் கதைகளையும் வெளியிட் டிருக்கிறார்கள். நீள நீள

m211.N36s
N46.137

மான கதைகள். ஒவ்வொன்றுள்ளும் ஏகப்பட்ட சம்பவங்களைப் பஞ்ச டைத்தது மாதிரி திணித்திருக்கிறார் ஆசிரியர். கதை அமைப்பு, போக்கு, பாத்திரங்களின் சித்தரிப்பு எல்லா முமே வட நாட்டு மோஸ்தரில், 'வழ வழா' என்று இருக்கின்றன. மூ. வீ. சு. அ. வனமாலி செட்டியார் செட்டிநாட்டைச் சேர்ந்தவரென்று ஆசிரியர் சொல்லுகிறார். விஷயங்களை நேரடியாகத் தெரிந்து கொள்ளாமல், வெறும் கற்பனையைத் துணை கொண்டு, பல கதாசிரியர்கள் செய்து வரும் அசட்டுத்தனங்களுக்கு இந்தச் செட்டியார் பாத்திரமும், 'பிரச்னை தீருமா?' என்ற கதையில் வரும் கரீம் சாகிப் பாத்திரமும் நல்ல உதாரணங்க ளாகும். இந்தக் கதையும் 'தெய்வ சித்தம்', 'களத்திர தோஷம்' என்ற இரண்டு கதைகளும் சுமாரா யிருக் கின்றன. 'சாமுண்டியின் சாபம்' என்ற முதல் கதை முதல்தரமான குழப்பம்.

கர்னாடக சங்கீதம் (இரண்டாம் பாகம்) :-ஆசிரியர் : சங்கீத வித்வான் எஸ். ஆர். குப்புஸ்வாமி, பி. ஏ., எம். ம்யூஸ்., கோயமுத்தூர். டெம்மி 1×8. 38 பக்கம். விலை 8 அணா. கைக் காகிதம்.

இந்த நூலின் முதற் பாகத்தைப் பற்றிப் போன 'சக்தி' இதழில் குறிப் புரை எழுதினேன். இதில், 'ஆரி யர்கள் காலத்துச் சங்கீத நிலை', 'புராணங்களிலும் உபநிஷத்துக்களி லும் காணும் சங்கீதம்', 'பண்டைய காலத்துத் தமிழ் மக்களின் சங்கீ தம்,' 'தும்புரு, நாரதர், ஆஞ்சனே யர் முதலியவர்களும் சங்கீத முறை யும்', 'சப்த அலைகள்', 'ஸாமகா னம்— கான முறை' ஆகிய விஷ யங்கள் பற்றி வெகு சரளமான முறையில் ஆசிரியர் கூறியுள்ளார். சங்கீதத்தைப் புலமாக வைத்து, சிறு கதை ரூபத்தில் ஒரு பகுதியை எழுதி யிருப்பது புதுமையாகவும் கவர்ச்சி யாகவும் இருக்கிறது. சங்கீத வித் வான்களும், சங்கிதப் பிரியர்களும் இந்த ஆசிரியருடைய முயற்சிகளுக் குப் பேராதரவு தர வேண்டியது அவர் களுடைய தீராக் கடமையாகும்.

அம்பி : ஆசிரியர் : பாசரசு. வெளி யிட்டோர் : பாசரசு காரியாலயம், 45-46, அரண்மனைக்காரன் தெரு, சென்னை - 1. கிரௌன் 1X8. 104 பக்கம். விலை ரூ 1.

குழந்தைகளைப் பற்றி எழுதுவது சிரமம். அதுவும், குழந்தையின் மன நிலையில் இருந்துகொண்டு, குழந்தை எழுதுவது போலவே எழுதுவது அதைவிடச் சிரமம். இந்தச் சிரம மான காரியத்தை ஆசிரியர் திறம் படச் செய்திருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். தலைப்புப் படங் கள் அனைத்திலும் ஜீவன் துள்ளுகி றது. எட்டு வயதுள்ள அம்பி, தன் னைப் பற்றியும், தனது சூழ் நிலை யைப் பற்றியும், தனது வாழ்க்கை விருப்பு, வெறுப்புக்களைப் பற்றியும் பதினேழு கட்டுரைகளில் ரசமாகச் சொல்லுகிறான். 'பிறந்த நாள்' கட்டுரை மேலை நாட்டு நாகரிகத்தில் அம்பிக்கு உள்ள மோகத்தைக் காட்டுகிறது. நடு நடுவில், அம்பியின் எழுத்தில், அப்பாவின் கைவண்ண மும், அண்மைச் சூழ் நிலையின் எதிரொலியும், இலக்கண தேவதை யின் கண்ணீரும் ஐந்தாம்படை வேலை செய்கின்றன.

துணைவி வாழ்க்கைக்கா, கல் விக்கா? (ஆறு கதைகள்) : கிரௌன் 1X8. 40 பக்கம். விலை 10 அணா. 2. அன்பு மீனாள் (கவிதைக் கதை) : ஆசிரியர் : முத்து நாராயணன். கிரௌன் 1×32. 16 பக்கம். விலை 2 அணா. வெளியிட்டோர் : அருள் நிலை யம், ராமச்சந்திரபுரம், திருச்சி ஜில்லா.

ஸ்ரீ எஸ். எஸ். ராமையாவின் 'கனக ராணி' நன்றாயிருக்கிறது, ஸ்ரீ முத்து நாராயணனின் 'சீனுவின் காதலி' சுமார். மற்றவை பரவா யில்லை ரகம்.

2. இது கவிதையுமல்ல, கதையு மல்ல.

88863
சென்னை-600 005

சக்தி
மங்கை
கதைக்கடல்

இம் மூன்று வெளியீடுகளுக்கும்
டிசம்பர் மாதத்திலிருந்து
மலேயா பூராவுக்கும்
சோல் ஏஜண்டுகள் :

ஹிந்துஸ்தான் நியூஸ் ஏஜன்சி
1, வெல்மென் தெரு,
ரவாங் :: மலேயா

விபரம் வேண்டுவோர்
மேல் கண்ட விலாசத்
துக்கு எழுதிக் கேட்டு
தெரிந்து கொள்ளலாம்.

1872-ல் ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 73-ஆண்டுகளாக பல்லாயிரக்கணக்கான மக்களால் உபயோகிக்கப்பட்டும், புகழப்பட்டும் வருவதுமான

மதுரை
M. காதர் சாஹிப் & ஸன்ஸ்
—"யானை மார்க்"—

- சந்தனாதித் தைலம்
- அரைக்கீரைத் தைலம்
- மிளகாய்த் தைலம்

குளிர்ச்சி, கூந்தலழகு, ஆரோக்கியம் தருபவை

- நாஷனல் பிளவர் டஸ்ட்

(உடுப்பு, ரிக்கார்டு பெட்டிகளில் அந்து, பாச்சை முதலியவைகளை அணுகவொட்டாமல் பரிமள வாசனை தரக்கூடியது)

மற்றும் வாசனைப் பாக்கு, தசாங்கம், ஸ்னான பவுடர், ஊதுவத்திகள், சந்தன பில்லைகள், சந்தன பவுடர், பன்னீர் வகையராக்களும் கிடைக்கும்

சரக்குகள் வாங்கும்பொழுது எமது 'யானை' டிரேட் மார்க்கை கவனிக்க கோருகிறோம்

M. KHADER SAHIB & SONS.,
Manufacturing Perfumers
MADURA

உலகெங்கிலும்
மிகவும் போற்றப்
பெற்றது!
ஸிரோலின்
'ரோச்'
SIROLIN
"ROCHE"
சுவாஸகோச
உபாதைகளுக்கு சிறந்தது

பட்டு
என்றால் மிருதுவாயுள்ளது
அது மைசூர் பட்டானால் ச்பர்சத்திற்கு மிருதுவாயுள்ளதுடன் உயர்ந்த நெசவு, அதிகநாள் உழைப்பு, மேலான ரகம் எல்லாம்சேர்ந்து மிக அழகானதாகும்.
மைசூர்
சில்க்
மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு
கவர்ன்மெண்ட் சில்க் வீவிங் பாக்டரி, மைசூர்.
MSK 11-TM

ஆஸ்த்மா

க்ஷயம்போன்ற எல்லா சுவாசகோச வியாதிகளும் ஒரே நாளில் குணப்படுத்தப் படுகின்றன. முறைப்படி **ஆஸ்மோலா,** ஒரு பாட்டில் உட்கொண்டால் உபாதை யுற்ற சுவாசக் கருவிகள் குணம்பெற்று இயற்கை நிலை அடைகின்றன. ரூ. 2-8-0 தபால் செலவு ரூ. 0-12-0

மகரத்வஜா

எல்லா வகையான பலஹீனத்திற்கும் சிறந்தது. ஒருதோலா ரூ. 8/- ஒரு வாரத்திற்கு ரூ. 1/- தபால் செலவு ரூ. 0-12-0

மாதவிடாய்

நின்றிருந்தாலும் அல்லது வேறு எவ்வித மோசமான நிலையிலிருந்தாலும் 'ரிதுபர்த்தினி' (கவர்ன்மெண்ட் ரிஜிஸ்டர்ட்) தீமையற்றது. ஒரே நாளில் விடாயாவது நிச்சயம். விலை ரூ. 3/- **பார்வதி** கர்ப்பத்தடைக்கு அபாய மில்லாத சிறந்த மருந்து. தற்காலிககர்ப்பத்தடைக்கு ரூ. 2/- நிலையான கர்ப்பத்தடைக்கு ரூ. 4/8/- இந்த இரண்டு மருந்துகளும் கிடைக்குமிடம், **மெஸர்ஸ் அப்பா அண் கோ, 286, சைனா பஜார், சென்னை.**

பைத்தியம்

தூக்க மின்மை, மூளைக் கோளாறு முதலியவற்றை அற்புதமாகக் குணப்படுத்தும் முறையில் மருந்துகள் கொடுக்கப்படும். பலன் உத்தர வாதம். வாரத்திற்கு ரூ. 5-0-0

சவனப்ராஷ்

நிலையான சளி, இருமல்களுக்கு. ஒரு சேர் விலை ரூ. 12-0-0 ஒரு வாரத்திற்கு ரூ. 1-0-0.

விரைவாதம்

விரைவாதம், குடல்வாயு, பைலேரியா, முதலிய வற்றிற்கு, **பி. எச். தைலம்** உபயோகிப்பதால் பூர்ண குணம் கிடைக்கிறது, இவ்வியாதிகளுக்கு உடனடியான குணம் அளிக்கக் கூடிய ஒரே மருந்து. விலை ரூ. 3/- உட்கொள்ளும் மருந்து ரூ. 2/- தபால் செலவு ரூ. 0-12-0.

வீரியம்

தங்கம், வெள்ளி, கஸ்தூரி, பவழம் முதலியவற்றால் தயார் செய்த **விகரின்** உபயோகிப்பதால் இழந்த வீரியத்தைத் திரும்பப் பெறலாம். வீரிய மிழந்து, ஞாபக சக்தி யின்றி, மனச் சோர்வுற்றுள்ள வாலிபர்களுக்கு புத்துயிரளிக்கிறது. நரம்புகளைப் பலப்படுத்தி புதிய ரத்தத்தை அபிவிருத்தி செய்கிறது. வேண்டிய அளவு வாழ்விற்கு சுகமளிக்கிறது. சாதாரணம் ரூ. 3/- விரைவில் குணமளிப்பது ரூ. 10/- தபால் செலவு ரூ. 0-12-0

குஷ்டரோகம்

குஷ்டரோகம், வெண் குஷ்டம் முதலியவை அறவே குணப்படுத்தப் படுகிறது. ஒரே மாத வைத்தியத்தில் பலன் உத்தரவாதம் ரூ 24-13-0.

நீரழிவு

விரைவில் குணப்படுத்தக் கூடும். ஒரு முறை இம் மருந்தை உபயோகித்தால் சர்க்கரையே இல்லாமல் குறைந்துவிடும். ஒரு மாத வைத்தியம் பூர்ண சொஸ்தமளிக்கும். ரூ. 25/- தபால் செலவு ரூ. 0-13-0

கடிதங்கள் ஆங்கிலத்தில் எழுதவும்

KAVIRAJ RABINDRA NATH CHAKRAVARTHI

AYURVEDHA SASTHRI (S. A. M.)

24, DEBENDRA GHOSE ROAD :: BHOWANIPUR, CALCUTTA, 25

Telephone: South 308

சோறல் | க்யூரோசால்

படை, சொறி, சிரங்கு, முகப்பரு, சேற்றுப் புண், கரப்பான், வேனல் கட்டி, தீப்பட்ட ரணம் முதலிய சர்ம ரோகங்களுக்கும் சிறந்த களிம்பு

இருமல், காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

எல்லா இடங்களிலும் கிடைக்கும்

டிஸ்டிரிபியூடர்கள்

T. N. C. நாகலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்,
மருந்து ஷாப் :: மதுரை

சென்னை நகர் ஏஜண்டுகள்:
A. S. நாயகர் & கோ.,
2, சுப்பிரமணியம் சந்து, ராட்டன் பஜார், சென்னை

கோவை, சேலம் ஜில்லா ஏஜண்டு:
K. வீராசாமி
83-B. M. N. G. தெரு, கோயமுத்தூர்

ஆந்திரா & நிஜாம் சமஸ்தான ஏஜண்டுகள்:
காரிஸன் காமர்ஸ்,
கவர்னர்ஸ்பேட், பெஜவாடா

வெளிவந்துவிட்டது

நமஸ்காரம்

ஹாஸ்யச் சித்திரங்கள்

எழுதியவர்: 'சுகி'

ரூபாய்: இரண்டரை (தபால் செலவு தனி)

வெளிவருகிறது

'சோமு' எழுதிய வனமல்லிகை
'மாறன்' எழுதிய அபூர்வப் பிறவிகள்
'என். தேவராஜன்' எழுதிய பாப்பா விருந்து
'சாவேரி' எழுதிய பிள்ளையார் சுழி
'சுகி' எழுதிய சிப்பாய் ஹிருதயம்

கார்த்திகேயினி பிரசுரம்
ராமச்சந்திரபுரம், :: புதுக்கோட்டை ஸ்டேட்

யுனைடெட் கமர்ஷியல் பாங்கு லிமிடெட்

2, ராயல் எக்ஸ்சேஞ்சு பிளேஸ், கல்கத்தா

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூ. 4-கோடி
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 2-கோடி
ரிசர்வு நிதி	ரூ. 17½-லட்சம்

ஸ்ரீ. ஜி. டி. பிர்லா
(சேர்மன்)

ஸ்ரீ. எம். ஏ. இஸ்பஹானி
(வைஸ்-சேர்மன்)

ஸ்ரீ. ரமன்லால் ஜி. ஸரய்யா
(வைஸ்-சேர்மன்)

எல்லா விதமான பாங்கு அலுவல்களும் நடத்தப்படுகின்றன

பிராஞ்சுகளும் ஏஜன்ஸிகளும் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் எல்லா முக்கிய நகரங்களிலும் உள்ளன

பி. டி. தாகூர்
ஜெனரல் மானேஜர்

சென்னை கிளைகள்:

310-311, லிங்க செட்டி தெரு
கே. ஆர். கே. ஐயங்கார்
கிளை மானேஜர்

சௌகார்பேட்டை
ஆர். வேணுகோபால்
கிளை மானேஜர்

UCB 3

புதிய விஷயங்களுடன் இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

காய்கறித்தோட்டம்

தோட்டம் போடுவது எப்படி
விதை விதைப்பது எப்படி
எரு இடுவது எப்படி
காய்கறிகளிலுள்ள உணவுச்
சத்து யாது

என்ற விஷயங்களை
அறிய வேண்டுமா?

கத்தரி வகை, அவரை வகை,
கீரை வகை, பூசணி வகை, கிழங்கு
வகை, சீமை[illegible]யகறி வகை

பயி[illegible]க் கற்றுக்
கொள்ள வேண்டுமா?

இதற்கேற்ற புத்தகம்
காய்கறித் தோட்டம்
மு. அருணசலம் எழுதியது

விலை ரூ. ஐந்து
தபால் செலவு தனி



சக்திகாரியாலயம்

ராயப்பேட்டை : சென்னை
வடக்கு வெளி வீதி : மதுரை
வெரைடி ஹால் ரோடு : கோயமுத்தூர்